

# கனடா
## பயண அனுபவங்கள்





தி. ஞானசேகரன்

# கனடா
# பயண அனுபவங்கள்

தி. ஞானசேகரன்

ஞானம் பதிப்பகம்

56ஆவது வெளியீடு

**நூல்**
கனடா பயண அனுபவங்கள்

**ஆசிரியர்**
தி. ஞானசேகரன்

**பதிப்பு**
முதலாம் பதிப்பு, 2018

**நூல் வடிவமைப்பு**
சுதா கோபி

**பதிப்பகம்**
ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6
இலங்கை
தொலைபேசி: + 94 11 2586013
தொலைநகல்: + 94 11 2362862
மின்னஞ்சல்: editor@gnanam.info
இணையத்தளம்: www.gnanam.info

**அச்சுப்பதிப்பு**
குமரன் அச்சகம்,
கொழும்பு–6, இலங்கை

**Book**
Canada Payana Anupavangal

**Author**
T. Gnanasekaran

**Edition**
1st Edition, 2018

**Designed By**
Sudha Gooby

**Publisher**
Gnanam Pathippakam
3B, 46th Lane, Colombo 6
Sri Lanka
Tel: + 94 11 2586013
Fax: + 94 11 2362862
Email: editor@gnanam.info
Web: www.gnanam.info

**Printed By**
Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo 06, Sri Lanka.

**Pages**
(xii +132)

**Price**
Rs.500/=

**ISBN**
978-955-8354-84-1

This licensed work is free to use, share, remix, and redistribute with attribution to Gnanam Pathippakam, but not permit for any commercial work

# முன்னுரை

ஈழத்தின் மரபுமீறிய நவீன தமிழிலக்கிய வரலாற்றில் அறுபதுகளுக்குப் பின்னான அறுபதாண்டு காலத்தில் தனது இடைவிடாத இலக்கியம் மற்றும் சமூக செயற்பாடுகளை ஆழமாகவும் பொறுப்புணர்வுடனும் ஆற்றிவருபவர் என்ற வகையில் தி.ஞானசேகரன் அவர்களுக்கு ஒரு பிரதான இடமுண்டு.

இலக்கியவாதி, எழுத்தாளன் என்ற நிலையில் அவரது பங்களிப்புக்கள் பல்பரிமாணம் கொண்டவை.

ஒரு சிறுகதை எழுத்தாளனாக ஆரம்பித்து நாவலாசிரியராக மேற்கிளம்பி, எழுத்தாளர்களை உருவாக்கி வழிநடத்தும் இதழாளராகப்பரிணமித்து பதிப்பாளராக நீட்சிபெற்று, புனைவுசாரா எழுத்துக்கள் மூலமாகவும் தனது எழுத்தாற்றலை நிரூபித்து ஒரு காலகட்டத்தின் மைல்கல்லாக மையம்கொண்டவர், இவர்.

மலையக மண்ணில் ஒரு வைத்தியராகப் பணியேற்று வாழ்வின் பெரும்பகுதிகளை அந்த மக்களுடன் வாழ்ந்து பெற்ற அனுபவங்களூடாக எழுந்த இவரது மலையகப் படைப்புக்கள் மலையக இலக்கிய வரலாற்றினை செழுமைப்படுத்துவனவாக அமைபவை.

ஈழத்து இதழியல் வரலாற்றில் தி.ஞானசேகரனின் ஞானம் ஏற்படுத்தியிருக்கும் உச்சங்கள் இதுவரை மாத்திரமல்ல இனிமேலும் எட்டமுடியாத உச்சங்கள்.

100ஆவது இதழாக வெளிவந்த 275 பக்க நவீன இலக்கியச் சிறப்பிதழிலிருந்து (2008 செப்டெம்பர்) 2018ஜூனில் வெளிவந்த 290பக்க அருள்வாக்கி அப்துல்காதிர் புலவர் நூற்றாண்டுச் சிறப்பிதழ்வரை, 150ஆவது இதழாக வெளிவந்த 'ஈழத்துப் போர்இலக்கியச் சிறப்பிதழ்' (600பக்கம்) 175ஆவது இதழாக வெளிவந்த 'ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழ்

(976பக்கம்) என ஞானம் வெளியிட்டிருக்கும் சிறப்புமலர்கள் எந்த இதழியலாளராலும் எண்ணிப்பார்க்க முடியாதவை.

நமது இதழியல் வரலாற்றை எழுச்சியும் செழுமையும் மிக்கதாக ஆக்கிக்காட்டும் தனிமனித ஆளுமை தி.ஞானசேகரன் அவர்கள். தனிமனித ஆளுமை என்பது ஞானம் ஆசிரியர் குழுவும்தான். அந்த உழைப்பும் அதன் அர்ப்பணமும் உதாசீனம் செய்யமுடியாதவை.

'இலக்கிய வரலாறு என்பது காலந்தோறும் தனிமனித ஆளுமையாளர்களின் இலக்கியப் பங்களிப்பின் வரலாறாக அமைவது சிறப்புக்குரியது' என்னும் செல்லத்துரை சுதர்சனின் வரிகள் உண்மையானவை (ஞானரதம் பதிப்புரை)

ஞானம் கலை இலக்கிய சஞ்சிகைக்கு சற்று முன்பின்னாக இயக்கம்கொண்டது ஞானம் பதிப்பகம். 2018இல் வெளிவந்த திஞானசேகரனின் 'எரிமலை' நாவல் ஞானம் பதிப்பகத்தின் 53ஆவது நூல். 'இதழ்வெளியீடும் பதிப்புத்துறையும் ஓயாத வாசிப்பை வேண்டி நிற்கும் துறைகள்.' என்கிறார் அல்லயன்ஸ் சீனிவாசன். படிப்பதும் பதிப்புத்துறையின் ஒரு பகுதிதான் என்கிறார் அவர்.

எழுத்தும் இலக்கியச் செயற்பாடுகளும் ஆழமான வாசிப்பின் நீட்சியும் அடுத்தகட்ட நகர்வுகளும்தான்.

ஞானம் பதிப்பகம் வெளியிட்டிருக்கும் 53நூல்களில் ஐந்து நூல்கள் பயண இலக்கியங்கள் என்பது கவனிக்கத்தக்கது.

1) அவுஸ்திரேலியப் பயணக்கதை-1999
   தினக்குரலில் தொடராக வந்தது.
2) வடஇந்திய பயண அனுபவங்கள் 2013
   தினக்குரலில் தொடராக வந்தது
3) லண்டன் பயண அனுபவங்கள் 2015
   ஞானம் சஞ்சிகையில் தொடராக வந்தது
4) ஐரோப்பிய பயண அனுபவங்கள் 2016
   தினக்குரலில் தொடராக வந்தது
5) அங்கோர் உலகப் பெருங்கோயில்-2013
   ஞானம் பாலச்சந்திரன்-ஞானம் தொடர்

இந்த ஐந்து பயண இலக்கிய நூல்களுள்ளும் நான்கு தி.ஞானசேகரன் அவர்களுடையது என்பதும், இந்த 'கனடா பயண அனுபவங்கள்' நூலுடன் ஐந்து பயண இலக்கியங்களை அவர் எழுதியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'அவர் பயணித்த நாடுகளின் வரலாற்று முக்கியத்துவம், வரலாற்றுப் பின்னணி, கலாசார விழுமியங்கள், அரசியல் தகவல்கள், எனப் பற்பல விஷயங்கள் அழகு தமிழில் புகைப்படங்களின் காட்சிப்படுத்தலுடன் அமைந்துள்ள நூல்கள் இவை. இந்த நூல்களினூடாக தான் சுற்றுலா சென்றுவந்த நாடுகளையும், அதன் மக்களையும் அவர்களுடைய வாழ்வியல்புகளையும் வாசகனுக்கு கூறுவதை விடுத்து வாசகனுடன் தனது பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது பரவசம் தருகிறது.

நூல்களின் தலைப்புகளை நோக்குவோமாயின் முதலாவது பயண நூல்மட்டுமே பயணக்கதை என்றிருக்க மற்றவை அனைத்தும் பயண அனுபவங்கள் என்றே இருப்பதைக் காணலாம். இந்தக் கனடா பயணநூல் உட்பட.

அனுபவங்களைத்தான் பகிர்ந்து கொள்ளலாம்! கதையைக் கூறத்தான் முடியும்.

அவுஸ்திரேலியப் பயணக்கதைக்கு முன்னுரை எழுதிய முருகபூபதி கூறுகிறார் '1987இலிருந்து அந்தக் கண்டத்தின் விக்டோரியா மாநிலத்தில் வசிக்கிறேன். எனினும் நான் அறிந்திராத, பார்த்திராத பல்வேறு தகவல்களையும் சம்பவங்களையும் இந்தப் பயண இலக்கிய நூலில் தருகிறார் ஞானசேகரன்' என்று.

அதுதான் ஞானசேகரனின் எழுத்துப் பலம்! இலக்கிய ஆளுமை! இந்த முன்னுரையின் முன்னுரைப்பாக நான் கூறிய அனைத்தும் இந்த யாத்திரை நூல்களின் வெற்றிகளுக்கான அவருடைய ஆயத்த எழுத்துப்பயணங்கள்.

ஞானத்தின் அதாவது ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் மகுடவாசகமே 'பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்' என்பது.

தன்னுடைய பயண அனுபவங்களை வாசகனுடன் பகிர்ந்து கொள்ளும் பரவசம் அவருடைய அத்தனை பயண இலக்கிய நூல்களிலுமே எமக்குக் கிடைக்கின்றன.

ஐரோப்பிய நாடுகள் பற்றிய முக்கிய செய்திகளை அறிந்துகொள்வதற்கும் அந்நாடுகளுக்கான பயணத்தை மேற்கொள் பவர்களுக்கு ஒரு கைநூலாகவும் இந்நூல் அமைந்துள்ளது' என்று ஒரு நூலின் பதிப்புரை கூறுகின்றது.

இந்த வரிகள் எத்தனை சத்தியமானவை என்பதை நான் அறிவேன்.

அவுஸ்திரேலியத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழாவுக்கான சிறப்பதிதியாக பங்கேற்கும்படி முருகபூபதி அவர்கள் என்னை 2009ன் ஆரம்பத்தில் அழைத்திருந்தார். அதை அறிந்திருந்த தி.ஞானசேகரன் அவர்கள் எனக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் இதை வைத்துக்கொள்ளுங்கள் உங்களுக்கு உதவும் என்று தனது 'அவுஸ்திரேலியப் பயணக்கதை' நூலொன்றை எனக்குக் கொடுத்தார்.

அவுஸ்திரேலியாவைப்பற்றி பெரிதாக ஒன்றும் அறிந்திராத எனக்கு எந்தெந்த முறையில் இந்த நூல் உதவியது என்பதில் இருக்கிறது நான் ஏலவே கூறிய பதிப்புரையின் யதார்த்தம்.

மல்லிகையில் வளர்ந்தவனில்லை நான். மல்லிகையில் தொடர்ச்சியாக எழுதியவனுமில்லை. ஆனாலும் மல்லிகை ஜீவாவுக்கும் எனக்குமான உறவு மகத்தானது.

அதேபோலத்தான் ஞானமும். ஞானசேகரன் அவர்களுக்கும் எனக்குமான இலக்கிய உறவுகள் அனந்தம். ஞானம் இதழ் ஆரம்பம்கொண்ட புதிதில் அதன் செல்நெறிகளுடன் ஒத்துவராத சிலர் தங்களது பலப்பிரயோகத்தால் அதைக் கிள்ளிவிட எத்தனித்ததுண்டு. ஞானம் பத்து அல்லது பன்னிரண்டு இதழ்கள் வந்திருக்கலாம் என எண்ணுகிறேன் எனக்கு ஞானத்தின் வரவு மகிழ்வைத் தந்தது. அனைத்து சிற்றிதழ்களின் புதுப்புது வருகைபோலவே! கிருதயுகம், மலர், மறுகா, தாயகம், வசந்தம், கொழுந்து போன்றவை போலவே. அதிலும் குறிப்பாக ஞானத்தின் இடைவெளிவிடாத மாதவருகை மிகவும் பிடித்திருந்தது.

ஞானம் கலை இலக்கிய இதழின் முதல் பத்து இதழ்கள் என்று தொடராக தினக்குரலில் எழுதினேன். ஈழத்தமிழ் இலக்கியத்திற்கு ஞானம் ஆற்றுகின்ற பணிகள் பற்றிய விரிவான தொடர்கட்டுரை அது. முதல்கட்டுரை வந்தபின்புதான் ஞானம் ஆசிரியருக்கே அது தெரியும். தொலைபேசியில் நன்றி கூறினார்.

2018 டிசம்பர்வரை 222 இதழ்கள் வந்திருக்கின்றன என்று நினைக்கிறேன். ஞானம் ஆரம்பமான ஜூன் 2000த்திலிருந்து கணக்கிட்டுப் பார்த்தாலும் 222 மாதங்கள்தான்.

ஈழத்து இதழியலின் 177 வருடகால வரலாற்றில் யாரால் செய்ய முடிந்திருக்கிறது. ஞானசேகரனால்தான் முடிந்திருக்கிறது. அந்தக் கடுமையான இலக்கிய உழைப்பை கனம்பண்ணத் தெரியவேண்டும். மரியாதை செய்கின்ற மனம்வேண்டும்.

தினபதியில் தினமொரு சிறுகதைத் திட்டத்தையும் மாதாமாதம் கதைவளம் என்னும் பெயரில் வெளிவந்த ரகுராமனின் அந்த மாதக்கதைகள் பற்றிய விமர்சனக் கைநூலுக்கும் என்னநடந்தது. இரண்டே மாதங்களில் காணாமல் போய்விட்டது எதிர்க்குரல்போல் தெரிகின்றதே என்றதும் உடனே நசுக்கிவிடவேண்டும்.

அதை நாம் அழிக்காவிட்டால் அது நம்மை அழித்துவிடும் என்னும் ஒல்லாந்தர் காலத்துப் பயம்தான். அந்தப்பயம் இப்போது முதுமையடைந்துவிட்டது.

ஞானசேகரனின் இலக்கியக் கடுழியம் தந்த ஆகிருதியும் அனுபங்களும்தான் இந்தப் பயணநூல்களின் தொடர்ச்சியான வரவும் சிறப்புமாகும்.

இந்தக் கனடா பயண அனுபவங்கள் 24 அத்தியாயங்களைக் கொண்டிருக்கிறது.

'நாங்கள் கனடாவுக்கு வருவது இதுவே முதல்தடவை. ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர்கள் என்ற முறையில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் அழைப்பின்பேரில் நாங்கள் இருவரும் (திரு.திருமதி ஞானசேகரன்) கனடா வந்திருக்கிறோம் என்று தொடங்கும் இப்பயணநூல் ஒரு நாவலைப் போலவே வாசகனையும் கைபிடித்து அழைத்துச்செல்கிறது.

ஈழத்தமிழர்கள் அதிக அளவில் புலம்பெயர்வதற்கு கனடா நாட்டை தெரிவு செய்தது ஏன்? என்ற கேள்வியும் பதிலுமாக மிளிர்கிறது இரண்டாம் அத்தியாயம்.

கனடாவின் அற்புதமாகத் திகழும் நயகரா நீர்வீழ்ச்சி, நயகரா தாவரப்பூங்கா, வண்ணத்துப் பூச்சிகளின் வளர்ப்பகம். இலங்கைத் தமிழர்களின் கேந்திர இடமாகத்திகழும் ரொறன்ரோ. ரொறன்ரோவில் இருந்து 5மணிநேர பஸ் ஓட்டத்தின்பின்வரும் ஒட்டாவா நகரம்,

கனடாவின் நான்காவது பெரியநகரம் ஒட்டாவா, கனடாவின் பாராளுமன்றம் ஒட்டாவாவில் இருக்கிறது, இலங்கையில் பிறந்து கனடா பாராளுமன்ற உறுப்பினரான முதல் தமிழ்ப் பெண்மணி, அவர் தனது கன்னிப்பாராளுமன்ற உரையைத் தமிழில் ஆற்றியது. கனடாவின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்திருக்கும் ஈழத்துக் கவிஞர் என்று அடுக்கடுக்கான தகவல்களை அள்ளிக் குவித்திருக்கும் பொக்கிஷப் பெட்டகமாய்த் திகழும்நூல் இது.

வானளாவுகின்ற கட்டிடங்கள் கண்ணையும் மனதையும் கவ்வியிருக்கும் கலைக்கூடங்கள் தமிழ் மக்களின் கடவுள் வழிபாட்டுத் தலங்கள், கனடிய அரசு வழங்கியுள்ள வழிபாட்டுச் சுதந்திரம் போன்ற அகப்புறக்காட்சி விபரிப்புகள் ஏராளம்.

அவரைக் கவர்ந்த முக்கிய இடங்கள், அந்த இடங்களைவிட, இடங்களின் மனித முகங்கள், முகங்களை விட அவர்தம் மனங்கள் என அவர்கண்ட அத்தனையத்தனை காட்சிகளையும்கொண்ட அனுபங்களையும் மனம்விட்டுச் சொல்லவும் நம்முடன் பகிர்ந்து கொள்ளவும் மேற்கொண்டிருக்கும் முயல்வே இந்தநூல்.

யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதைப்போல.

புதிய அனுபவங்களையும் புதிய உணர்வுகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகப் படைக்கப்படுவதே பயண இலக்கியம். அதற்கென பிரத்தியேகமான திறமைகள் வேண்டப்படுகின்றன. என்றாலும் ஏற்கனவே நான்கு பயண நூல்களை ஈழத்து இலக்கிய உலகிற்கு கொடையாக்கியிருக்கும் ஞானசேகரனுக்கு அந்தத் திறமைகள் நிறையவே உண்டு என்பதை இந்த ஐந்தாவது பயண இலக்கியநூலும் நிரூபிக்கிறது. ஈழத்து எழுத்தாளர்களில் அதிக பயண இலக்கிய நூல்களைத் தந்தவர் என்ற பெருமையும் அவரைச் சேர்கிறது; மனம்நிறைந்த வாழ்த்துக்கள்.

**'சாகித்திய ரத்தினா'**

**தெளிவத்தை ஜோசப்**

# என்னுரை

கனடா பயண அனுபவங்கள் என்ற இந்தநூல் எனது ஐந்தாவது பயண இலக்கியநூல் ஆகும்.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் அழைப்பின்பேரில் ஞானம் சஞ்சிகை ஆசிரியர்கள் என்றமுறையில் நானும் மனைவியும் ஏற்கனவே பல நாடுகளுக்குச்சென்று வந்துள்ளோம். அத்தகைய ஓர் அழைப்பின்பேரிலேயே நாங்கள் கனடாவுக்கும் சென்றோம். கனடாவில் நாங்கள் தங்கியிருந்த ஒருமாத காலத்தில் அந்த நாட்டைப்பற்றியும் அங்கு வாழும் மக்களைப்பற்றியும் குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் நம்மவர் நிலைகுறித்தும் நாம் அவதானித்த முக்கிய விடயங்கள் இந்நூலில் பதிவாகியுள்ளன.

பயண இலக்கியம் என்பதற்குச் சில இலக்கண வரையறைகள் இருக்கின்றன. வெளிநாடு சென்றுதிரும்பிய ஒருவர் அந்த நாட்டைப்பற்றியும் அந்நாட்டில் தான்பெற்ற அனுபவங்கள் பற்றியும் எழுதிவிட்டால்மட்டும் அது பயணஇலக்கியம் ஆகிவிடாது. அந்தநாட்டின் புவியியல், வரலாறு மற்றும் சமூக பொருளாதார அரசியல் தொடர்பான விடயங்கள், கலை பண்பாட்டுவிடயங்கள், சமயரீதியான விடயங்கள், அந்தநாட்டின் சுவாத்தியம், சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த இடங்கள், எமது நாட்டு வாழ்க்கை முறைக்கும் அந்த நாட்டு வாழ்க்கை முறைக்கும் உள்ள ஒப்புமை வேற்றுமைகள் போன்ற விடயங்களைப் பயணஞ்செய்தவர் கவனத்தில் எடுத்து எழுதியிருந்தால் மட்டுமே அதனைப் பயணஇலக்கியம் எனக்கொள்ளலாம்.

பயண இலக்கியகர்த்தா, தான்சார்ந்து - தன்னை முன் னிலைப்படுத்தும்வகையில் விடயங்களை எழுதுவதைத் தவிர்த்தல் வேண்டும். அவற்றால் வாசகனுக்கு எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை.

மேற்குறிப்பிட்ட இலக்கணத்துக்கு அமையவே இந்தப் பயணக்கட்டுரைத் தொடரை எழுதியுள்ளேன்.

நம்மவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கனடாவே மிகப்பெரிய நாடு. அங்குதான் அதிகூடிய புலம்பெயர் தமிழர்கள் வாழ்கிறார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத்தொகைக்குச் சமனான தொகையினர் அங்கு வாழ்கிறார்கள். ஆனாலும் அங்கு சென்றவர்கள் நான்கு தசாப்தத்திற்கு மேலாகியும் தமது சொந்த நாட்டையும் தாய் சகோதரங்களையும் சொந்தபந்தங்களையும் வந்து பார்த்துச்செல்லாதவர்கள் பலர் அங்கு வாழ்கிறார்கள். அதேபோன்று நமது நாட்டிலிருந்து கனடா சென்று தமது உறவுகளைப் பார்க்காதவர்களும் இருக்கிறார்கள். எத்தகைய துன்பகரமான நிலைமை இது!

இந்த நிலைமைக்குக் காரணம், நமது நாட்டுக்கும் கனடாவுக்கும் இடையிலான பயணத்தூரமும் பயணத்தால் ஏற்படக்கூடிய பெரும் பணச்செலவும்தான் என்பதை அறியமுடிகிறது.

இந்தப் பயணக்கட்டுரை வீரகேசரி வாரவெளியீட்டில் ஆறுமாதகாலம் தொடராக வெளிவந்தது. அக்காலகட்டத்தில் இத் தொடரை வாசித்த பலரும் எம்முடன் தொடர்புகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

“நாம் கனடாவுக்குச் செல்லமுடியாவிட்டாலும் - நமது உறவுகளைச் சென்று பார்க்கமுடியாவிட்டாலும் இக்கட்டுரைத் தொடர்மூலம் அவர்களது நிலைமைபற்றி அறியமுடிந்தது” எனக் கூறினார்கள்.

எனது முன்னைய பயணக் கட்டுரைகளைவிட இந்த கனடா பயண அனுபவத்தொடர் பலரது உணர்வுகளைத் தொட்ட கட்டுரைத்தொடராக அமைந்ததை என்னால் அறிந்து கொள்ளமுடிந்தது.

இக்கட்டுரைத்தொடரை சிறப்பாக வெளியிட்டு உதவிய வீரகேசரி வாரவெளியீட்டின் பொறுப்பாசிரியர் திரு.ஆர். பிரபாகன் அவர்களுக்கும் உதவி ஆசிரியர் திருமதி ரேணுகா பிரபாகரன் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் கனடாவுக்குச் சென்ற வேளையில் எம்மை வரவேற்று தமது இல்லத்தில் தங்கவைத்து உபசரித்த எனது மைத்துனி சுபாஷினி,

அவரது கணவர் திரு. புவனேஸ்வரன் குடும்பத்தினருக்கு எமது மனப்பூர்வமான நன்றிகள் என்றும் உரியது.

எமது கனடா இலக்கியப் பயணம் வெற்றிகரமாக அமையத் துணைபுரிந்த எழுத்தாளர்களான அகில், அ.முத்துலிங்கம், ரொறன்ரோ தமிழ்ச்சங்கத் தலைவர் டாக்டர் இ.இலம்போதரன், எழுத்தாளர் இணையத்தைச் சேர்ந்த குரு அரவிந்தன், பேராசிரியர் இ.பாலசுந்தரம், பேராசிரியர் நா.சுப்பிரமணியன், கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியன், உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கம், சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன் ஆகியோர் எமது இதயபூர்வமான நன்றிக்குரியவர்கள்.

இந்தப் பயண இலக்கிய நூலுக்கு சிறந்ததொரு முன்னுரையை வழங்கிச் சிறப்பித்த 'சாகித்திய ரத்தினா' தெளிவத்தை ஜோசப் அவர்கள் என்றென்றும் எமது நன்றிக்குரியவர்.

நிறைவாக, வாசகர்கள் வழமைபோலத் தமது ஆதரவை இந்நூலுக்கும் நல்கவேண்டும் என அன்புடன் வேண்டுகிறோம்.

**தி. ஞானசேகரன்**

3B,46ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.

# 01

## விமான நிலையத்தில் ஏற்பட்ட விசித்திர அனுபவம்

*19-04-2018 அன்று,*

*காலை 5.00 மணி.*

நாங்கள் பயணித்துக் கொண்டிருந்த கனடா எயர்லைன் விமானம் இன்னும் சிறிது நேரத்தில் தரையிறங்கப்போகிறது என்ற செய்தி விமானத்தில் அறிவிக்கப்பட்டபோது நானும் மனைவியும் உற்சாகம் அடைந்தோம். இலங்கையில் இருந்து புறப்பட்டு ஏறத்தாழ இருபத்துமூன்றுமணி நேரப் பயணம் எம்மைப் பெரிதும் களைக்க வைத்திருந்தது.

நாங்கள் கனடாவுக்கு வருவது இதுவே முதற்தடவை. புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் அழைப்பின் பேரில் ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர்கள் என்ற முறையில் நாங்கள் இருவரும் ஏற்கனவே பலநாடுகளுக்குச் சென்று வந்துள்ளோம். அத்தகைய ஓர் அழைப்பின் பெயரிலேயே நாங்கள் இப்போது கனடா வருகிறோம்.

நாங்கள் கனடா வருவதை அறிந்த எழுத்தாளர்கள் சிலரும் இலக்கிய நிறுவனங்களும் எம்முடன்




மின்னஞ்சலில் தொடர்புகொண்டு தாம் ஏற்பாடு செய்யப் போகும் நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்கவேண்டுமென வேண்டியிருந்தனர்.

எமக்கு இன்னுமொரு விருப்பமும் இருந்தது. எமது மிகநெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் பலர் கனடாவில் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் கனடா வந்தபின் இலங்கைக்குத் திரும்பி வரமுடியாதவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களையும் நாம் சந்திக்கவேண்டும்.

மூன்றாவதாக, கனடாவில் இருக்கும் முக்கிய சுற்றுலா மையங்களையும் நாம் நேரில் சென்று பார்வையிடவேண்டும்.

இவற்றைவிட, புலம்பெயர்ந்த எம்மவர்களில் அதிக மானோர் கனடாவுக்கே வந்தார்கள். ஏறத்தாழ நான்கு இலட்சம் ஈழத்தமிழர்கள் இங்குவந்து சேர்ந்துள்ளார்கள் என அறியமுடிந்தது. அவர்கள் இங்கு என்ன செய்கிறார்கள்? அவர்களது வாழ்வு, தொழில், கல்வி, மதம், மொழி, பண்பாடு ஆகியவற்றில் அவர்களது ஈடுபாடு எத்தகையதாக உள்ளது போன்ற விடயங்களை அறிந்துகொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நான்கு விடயங்களையும் உள்ளடக்கியதாக கனடாவில் எமது இயக்கம் அமையவேண்டும் எனத் தீர்மானித்தோம்.

கனடா வட அமெரிக்காவின் தெற்குப்பகுதியில் உள்ள உலகின் இரண்டாவது பெரிய நாடு. வடக்கே வட முனையும் தெற்கே அமெரிக்க ஒன்றியமும் கிழக்கே அட்லான்டிக் பெருங்கடலும் மேற்கே பசுபிக்கடலும் மற்றும் அமெரிக்க ஒன்றிய நாடுகளின் 'அலாஸ்கா' மாநிலமும் இதன் எல்லைகளாக அமைகின்றன. கிறீன்லாந்து கனடாவின் வடகிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. கனடாவின் பரப்பளவு 9,984,670. கி.மீ. எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கனடாவின் பரந்த பரப்பளவு காரணமாக அது பல்வேறு விதமான இயற்கை அமைப்புகளையும் காலநிலைகளையும் கொண்டுள்ளது. கனடா மத்திய கோட்டுக்கு மிகமேலே இருப்பதால் பெரும்பாலும் கடும் குளிரான காலநிலையைக்கொண்டது. மேற்கு கனடாவில் குளிர்காலத்தில் -15 செல்சியஸ் சராசரி வெப்ப நிலையைக் கொண்டிருக்கும். வடக்குப் பகுதியில் குளிர் மிக அதிகமாகவும் குளிர்காலம் பதினொரு மாதங்கள்வரை நீடிக்க வல்லதாகவும் இருக்கும். தெற்குப்பகுதிகளில் ஏழு மாதம்வரை குளிர் இருக்கும். குளிர்காலத்தில் பனிப்பொழிவு ஏற்படுவதும் இடங்கள் எல்லாம் விறைத்துக் காணப்படுவதும் வழக்கமாகும். கோடைகாலத்தில் கிழக்கிலும் மேற்கிலும் 20 டிகிரி சராசரி வெப்பநிலை இருக்கும்.

கனடா பத்து மாகாணங்களையும் மூன்று ஆட்சி நிலப்பகுதிகளையும் கொண்ட கூட்டமைப்பு. 'ஒட்டாவா' கனடாவின் தலைநகரம். ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரண்டும் கனடாவின் ஆட்சிமொழிகளாகும்.

தென்ஒன்ராறியோ மாநிலத்தில் வளர்ச்சி அடைந்த உற்பத்தித்துறை உண்டு. அதிகளவு கார்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. 'கியூபெக்' மாகாணம் உலகின் ஆறாவது பெரிய விமான உற்பத்தி இடமாகும். இவற்றைவிட பலதரப்பட்ட பொருட்கள் இங்கு உற்பத்தியாகின்றன.

நாங்கள் வந்திறங்கியது ரொறன்ரோவில் உள்ள 'பியர்சன்' என்ற பெயர்கொண்ட விமானநிலையம். இந்த விமானநிலையம் வட அமெரிக்காவில் உள்ள பயணிகள்

சேவையில் முதன்நிலையில் உள்ள விமான நிலையமாகக் கருதப்படுகிறது. உலகம் முழுவதிலுமுள்ள விமான நிலையங்களை வரிசைப்படுத்தும் அனைத்துலக நிறுவனம் சென்ற ஜனவரிமாதம் வெளியிட்ட தரவரிசைப்பட்டியலில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானநிலையங்களைச் சென்றடைவதற்கான இலகுத்தன்மை, விமான நிலையத்திற்குள் இலகுவில் தேவையான இடங்களுக்குச் செல்லக்கூடிய நிலைமை, விமானப் பயணங்களுக்குச் செல்லும்போது அங்கே முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், பாதுகாப்புச் சோதனைமுறைமைகள், கழிவறைகள், குளியலறைகள், கடைகள், உணவகங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பயணிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்தத் தரப்படுத்தல் மேற்கொண்டுள்ளப்பட்டுள்ளது. இதேவேளை, சிறந்த பயணிகள் சேவையை வழங்கும் நிலையங்களுக்கான விருதுகளையும் அறிவித்துள்ள அந்த நிறுவனம், வட அமெரிக்காவில் ரொறன்ரோ விமான நிலையமும், ஐரோப்பாவில் ‘ரோம’ விமான நிலையமும் ஆசிய பசுபிக் வட்டாரத்தில் ‘மும்பை’ விமான நிலையமும் முதல் இடங்களைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

நாங்கள் விமானத்திலிருந்து இறங்கி குடிவரவு - குடியகல்வு கருமபீடத்தை அடைந்தோம்.

கருமபீடத்தில் இருந்த உத்தியோகத்தர் எம்மைக் கேள்விக்கணைகளால் துளைத்தெடுத்தார். “நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எதற்காக வருகிறீர்கள்? எத்தனை நாட்கள் கனடாவில் தங்கியிருப்பீர்கள்? எங்கு தங்கியிருப்பீர்கள்? கனடாவில் எங்கெல்லாம் செல்வீர்கள்? கனடாவில் செலவு செய்வதற்கு எவ்வளவு பணம் வைத்திருக்கிறீர்கள்?” போன்ற கேள்விகளுக்கு நாம் பதில்சொல்ல வேண்டியிருந்தது.

கனடாவுக்கு வீசா வழங்கும்போது, மேற்குறிப்பிட்ட கேள்விகள் அத்தனைக்குமான பதில்களை எமது விண்ணப்பப் பத்திரத்தில் கொடுத்திருக்கிறோமே! பின்னர்

ஏன் இத்தனை கேள்விகள் என அந்த அதிகாரியிடம் கேட்கவேண்டும்போல் தோன்றியது. ஆனாலும் அப்போது அந்த அதிகாரி புன்முறுவலுடன் எமது கடவுச்சீட்டுக்களைத் திரும்பக் கையளித்தார்.

இனி, நாங்கள் எமது பொதிகளை எடுத்துக்கொண்டு வெளியேறவேண்டியதுதான். எமது பொதிகளில் ஒன்று வந்து சேரவில்லை. அதற்கான முறைப்பாடு செய்யும் கருமபீடத்திற்குச் சென்று, வரவேண்டிய பொதிபற்றிய அடையாளங்களை எழுதிக்கொடுத்தோம். எமது இந்தப் பயணத்தின்போது ஸ்ரீலங்கன் விமானத்தில் வந்திறங்கி துபாய் விமானநிலையத்தில் (Transit) தரித்துநின்று பின்னர் கனடா விமானத்தில் மாறிஏறி பயணம் செய்தோம். எமது பொதி உரிய விமானத்தில் ஏற்றப்படாமல் துபாய் விமான நிலையத்தில் வேறோர் விமானத்தில் ஏற்றப்பட்டதே இதற்கான காரணமாக இருக்கலாம் எனக் கருமபீடத்தில் விளக்கம் தந்தார்கள். அந்தப் பொதியை வரவழைத்து நாம் தங்கியிருக்கும் வீட்டுவிலாசத்துக்கு அனுப்பிவைப்பதாக உறுதிகூறினார்கள்.

நாங்கள் இருவரும் தள்ளுவண்டியில் (Troly) எமது ஏனைய பொதிகளை ஏற்றிக்கொண்டு வெளியே வந்தோம். எங்களை வரவேற்று அழைத்துச்செல்ல எனது தம்பி முறையிலான புவனேஸ்வரன் வந்திருந்தார். அவரை 'புவன்' என்றே அழைப்போம். அவருடன் எமது மருமகன் முறையிலான 'கோபி'யும் வந்திருந்தார். விமானநிலையத்தின் உள்ளே குளிர் தெரியவில்லை. ஆனால் வெளியே வந்தபோது கடுங்குளிர் எமது முகத்தில் அடித்து எம்மை நடுங்க வைத்தது. அதனைக் கவனித்த புவன் குளிருக்கான உடை எதுவும் கொண்டுவரவில்லையா என வினவினார். எமது குளிர் உடைகள் அடங்கிய பொதி வந்துசேரவில்லை என்பதை விளக்கியபோது, அவர் தான் அணிந்திருந்த 'கோட்'டைக் கழற்றி எனக்கு அணியத்தந்தார். மருமகன் கோபி தனது கோட்டைக் கழற்றி மனைவி ஞானத்திடம் கொடுத்தார்.

மேலைத்தேய விமானப்பயணங்களில் பயணப்பொதிகள் தாமதமாக வந்தடைவது சகஜமான ஒரு நிகழ்வுதான். எமது நாட்டு எழுத்தாளர்களில் ஒருவரான மாத்தளை சோமு கனடாவுக்கு வந்தபோது தனது பயணப்பொதி இரண்டுநாட்களின் பின்னரே வந்துசேர்ந்ததாகப் பதிவுசெய்திருக்கிறார். எங்களது மகன் பாலச்சந்திரன் கலிபோர்னியாவுக்கு ஒரு மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபோது அவரது உடைகள் அடங்கிய பயணப்பொதி இரண்டுநாட்களின் பின்னரே அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்துசேர்ந்ததாகக் கூறினார். முக்கியமான உடைகள் அடங்கிய பயணப் பொதிகள் பிந்திவந்து சேர்வதால் பலதரப்பட்ட சிரமங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. புதுமணப்பெண் ஒருத்தி கனடாவுக்கு வந்துசேர்ந்தபோது அவரது திருமணத்துக்கு வேண்டிய பட்டுப்புடவைகள் அடங்கிய பொதி உரிய நேரத்தில் வந்து சேராததால் ஏற்பட்ட சிரமங்கள்பற்றி நாங்கள் கனடாவில் இருந்தபோது அறிய முடிந்தது.

முன்னைய பயணம் ஒன்றிலும் இத்தகைய ஓர் அனுபவம் எமக்கு ஏற்பட்டது. நாங்கள் ஐரோப்பியப் பயணம் மேற்கொண்டு டென்மார்க் செல்லும் வழியில் பிராங்க்போர்ட் விமான நிலையத்தில் மாறி ஏறும்பொது எமது பயணப்பொதி ஒன்று தொலைந்தே போய்விட்டது!

# 02

## ஈழத் தமிழர்கள் அதிகளவில் புலம் பெயர்வதற்கு கனடா நாட்டைத் தெரிவு செய்தது ஏன்?

கனடாவில் குளிர்காலம் டிசம்பர் மாதத்தில் ஆரம்பமாகி பெப்ரவரி மாத இறுதிவரை இருக்கும் அப்போது குளிர் *-15* செல்சியஸ் வரை சராசரியாக இருக்கும். தெருவெங்கும் பனி கொட்டிக் கிடக்கும். தெருக்களில் செல்லும் வாகனங்கள் வழுக்கிச்சென்று ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகம். தெருக்களில் பனி அகற்றும் பணியாளரையும், வாகனங்களின் சறுக்கலைத் தவிர்க்கும் வகையில் தெருக்களில் உப்பு கொட்டும் பணியாளர்களையும் காணலாம்.

இங்கு ‘சம்மர்’ எனப்படும் வசந்தகாலம் மார்ச்மாதப் பிற்பகுதியில் ஆரம்பமாகிவிடும். அக்காலத்தில் குளிர் நீங்கி ஓரளவு வெப்பமான காலநிலை நிலவும். சம்மர் காலப்பகுதியிலேயே கனடாவில் பெரும்பாலான கோயில் திருவிழாக்கள், இலக்கிய விழாக்கள், திருமணங்கள், ஏனைய சமூக நிகழ்வுகள் இடம்பெறும்.

ஆனாலும் நாங்கள் அங்கு சென்ற ஏப்ரல்மாத நடுப்பகுதிவரை



பனிப்பொழிவு இருந்தது. இருந்தபோதும் அதன் வீரியம் குறைந்து காலை வேளைகளில் மல்லிகைப் பூக்கள் சிதறுண்டு கிடப்பதுபோல் மரங்களிலும் தெருக்களிலும் பனிப்பூக்களைக் காணமுடிந்தது. கனடாவின் பெரும்பகுதிகளில் தாமதமான வசந்தகால வானிலை நிலவுவதாகவும் வெப்பநிலை குளிருடன் கூடியதாகவும் இருந்தது.

கனடாவுக்கு வருமாறு எம்மை அழைத்தவர் கனடாவாழ் புலம்பெயர் எழுத்தாளரான அகில் அவர்கள். அவர் எம்மால் வெளியிடப்படும் 'ஞானம்' சஞ்சிகைமூலம் ஓர் சிறந்த சிறுகதை எழுத்தாளராக வளர்த்தெடுக்கப்பட்டவர். அவரது 'கூடுகள் சிதைந்தபோது...' என்ற சிறுகதைத் தொகுப்பு தமிழக அரசின் விருது உட்பட தமிழ்நாட்டின் ஐந்து இலக்கிய நிறுவனங்களின் விருதுகளைப்பெற்ற சிறப்பினைக் கொண்டது. மேற்படி சிறுகதைத் தொகுப்பின் மகுடக்கதை உட்பட பெரும்பாலான கதைகள் ஞானம் நடத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றவை.

அகில் தற்போது கனடாவில் உள்ள சில இலக்கிய நிறுவனங்களுடன் இணைந்து இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார். நாம் வெளியிட்ட ஞானம் புலம்பெயர்

சிறப்பிதழை கனடாவில் அறிமுகம் செய்ய வரும்படி எம்மை 2015ஆம் ஆண்டில் அழைத்திருந்தார். அவ்வேளையில் எம்மால் அங்கு செல்லமுடியவில்லை. தற்போது 'அ.முத்துலிங்கம்60' - என்ற எழுத்தாளர் கௌரவிப்பு இலக்கியவிழாவிலும் அதனைத் தொடர்ந்து 'ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்' நடத்தும் மாதாந்தக் கருத்தாடலிலும் கலந்துகொள்ள வரும்படி அழைத்திருந்தார். அதற்கமையவே எமது இந்தப்பயணம் ஏற்பாடாகியது.

விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு காரில் ஏறுவதற்காக காரின் இடதுபக்க முன்கதவைத் திறந்தேன்; தடுமாறிப் போனேன். காரணம் அந்தப்பக்கத்தில் கார்ச் சாரதிக்கான இருக்கை காணப்பட்டது. கனடாவில் இடது பக்கத்தில் சாரதி இருந்து வாகனத்தைச் செலுத்துவதற்கு ஏற்றவகையிலே கார்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சாரதியின் பக்கத்தில் இருப்பவர் காரின் வலதுபக்கத்தில் அமரவேண்டும். நான் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் காரில் பயணம்செய்துள்ளேன். அங்கும் இடது பக்கத்திலேதான் வாகனச்சாரதி அமர்ந்து கார் ஓட்டுவார். ஆனால் இங்கிலாந்து இதற்கு விதிவிலக்கு. அங்கு நமது நாட்டில் இருப்பதுபோன்று வலது புறத்திலேதான் வாகனச்சாரதி அமர்ந்து வாகனத்தைச் செலுத்துவார்.

இலங்கையில் வாகனம் செலுத்தும் ஒருவர் கனடாவில் வாகனத்தின் சாரதியின் பக்கத்தில் வலதுபுறத்தில் அமர்ந்து பயணிக்கும்போது எதிர்ப்புறத்தில் வருகின்ற வாகனங்கள் யாவும் தவறான பக்கத்தில் வந்து எம்முடன் மோத வருவதுபோன்று தோன்றும். அங்கு தெருவில் பாதசாரிகள் தமது இடப்புறமாக நடந்து செல்வர்.

சகோதரர் புவனது கார் எங்களை ஏற்றிக்கொண்டு அவரது இருப்பிடமான 'பிரம்டன்' என்ற நகரை நோக்கி விரைந்தது. நான் வெளியே சுற்றுச் சூழலை அவதானித்தபடி இருந்தேன். தெருவின் இருமருங்கிலும் பனிக்கட்டிகள் குவியலாகக் கிடந்தன. நூற்றுக்கணக்கான மரங்கள் பட்டுப்போன மரங்கள் போன்று இலைகள் ஒன்றுகூட இல்லாமல் கருகிப்போன தோற்றத்துடன் வரிசையாகக் காணப்பட்டன.

பனிக்காலம், நூற்றாண்டுகால மரங்களைக்கூடத் தாக்கி கருக வைத்துள்ளதென்றால், இக்காலத்தில் மனிதர்கள்மேல் அதன் தாக்கம் எத்தகையதாக இருக்கும் என எண்ணிப் பார்த்தேன். இத்தகைய சூழலிலேதான் நம்மவர்கள் இங்குவந்து கால தேச வர்த்தமானங்களுடன் இசைவாக்கம் பெற்று உயர்நிலை அடைந்திருக்கிறார்கள் என்பதையும் எண்ணி வியந்தேன்!

நமது நாட்டு மக்கள் அதிகமான அளவில் புலம்பெயர்ந்த நாடு கனடாதான். இந்தக் குளிர்மிகுந்த நாட்டுக்கு இவர்கள் பெருந்தொகையாக வரக்காரணமென்ன?

இலங்கையில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவந்த இனரீதியான அடக்குமுறைகள் தமிழர்களின் புலப்பெயர்வுக்குக் காரண மாயிற்று. 1977இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழா ராய்ச்சி மகாநாடு துயரில் முடிந்தது. பின்னர் 1977இலும் 1983இலும் இடம்பெற்ற இனவன்முறைகளும் தமிழர்களின் வாழ்வில் துயர்நிறைந்ததாகவே அமைந்தன. இலங்கையில் கூர்மையடைந்துவந்த இனப்பகை காரணமாக போராளி அமைப்புகளுடன் பெரும் அளவிலான தமிழ் இளைஞர்கள் இணைந்து செயற்பட்டபோது இலங்கை அரச படைகளால் தேடப்பட்ட நிலையிலும், கைது, சித்திரவதை என்ற நிலையிலும் பெரும்பாலானோர் புலம்பெயரவேண்டி ஏற்பட்டது.

இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் ஐரோப்பியநாடு களுக்கும் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கும் சென்றனர். கனடாவில் அதிக எண்ணிக்கையானோர் புலம்பெயர்ந்து வருவதற்கு அந்த நாட்டின் சட்டங்கள் அனுசரணையாக இருந்தன. கனடா அகதிகளைத் திருப்பி அனுப்பும் நாடல்ல; வரவேற்கும் நாடு. இதன் காரணமாகத்தான் கனடாவில் 160 நாடுகளைச் சேர்ந்த மக்கள் இங்கு புலம்பெயர்ந்து வாழமுடிகிறது.

1971ஆம் ஆண்டில் அப்போதைய கனடியப் பிரதமராக இருந்த பியரிரூடோ பன்முகப் பண்பாட்டுக் கொள்கையை அறிமுகப்படுத்தினார். இதன்படி ஒவ்வொரு இனக்குழுவும் கனடாவில் தங்கள் மொழியையும் கலாசாரத்தையும்

பின்பற்றி தனித்துவமாக ஆனால் கனடிய வாழ்க்கைக்கு இசைவாக வாழலாம். கனடா அகதிகளை ஏற்றுக்கொள்ளும் நாடாகத் திகழ்ந்தமையாலும் பல்லினமக்களும் தத்தமது பாரம்பரியங்களைப் பேணி வாழ்வதற்கு ஏற்ற சிறந்த நாடாகத் திகழ்ந்தமையாலும் பெருந்தொகையான ஈழத்தமிழர்கள் கனடாவில் புகலிடம் தேடிக்கொண்டனர். அத்தோடு அகதி அந்தஸ்த்தை இலகுவாகப் பெறுவதற்கும் அகதிகளுக்கு வழங்கப்படும் அரசசலுகைகளும் கனடாவைநோக்கி ஈழத் தமிழர்களை புலம்பெயரவைத்தது.

சென்ற நூற்றாண்டின் 80களின் பின்னர் ஈழத்தமிழரின் புலப்பெயர்ச்சி கனடாவிலே தொடர்ச்சியாக இடம்பெறலாயிற்று.

ஏற்கனவே அமெரிக்கா, ஜேர்மனி, இத்தாலி முதலிய நாடுகளுக்குச் சென்றவர்களும் தொழில் வாய்ப்புக் காரணமாக சில வருடங்களின்பின் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தனர்.

தஞ்சம்கோரி கனடாவுக்கு புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் காலப்போக்கில் தமது உறவினர்களையும் கனடாவுக்கு அழைத்துக்கொண்டனர். கனடாவின் குடிவரவு சட்ட சலுகைகளின் காரணமாக அவ்வாறு அழைத்துக்கொள்ள முடிந்தது. இப்பொழுது கனடாவில் உள்ள ஈழத்தமிழரின் எண்ணிக்கை நான்கு இலட்சத்தை அண்டிய நிலையில் யாழ்பாணக் குடாநாட்டுக்கு அடுத்தபடியாக ஈழத்தமிழர்கள் வாழும் நாடாக கனடா விளங்குகிறது.

கனடாவில் ஈழத்தமிழரின் புலப்பெயர்வு ஏறத்தாழ நாற்பது வருடங்களை நிறைவு செய்திருக்கிறது. புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களின் மூன்று தலைமுறையினர் தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கனடாவிலேயே நிரந்தரக் குடிகளாகிவிட்டனர். இவர்களின் இரண்டாம் தலைமுறையினர் கனடா நாட்டுப் பிரஜைகளாகவே தம்மை அடையாளப்படுத்தி வருகின்றனர். மூன்றாம் தலைமுறையினர் தமது தாயகமாகவே கனடாவைக் கருதுகின்றனர்.

# 03

## கனடாவின் தமிழ்த் தேசிய கீதத்தை இயற்றிய ஈழக்கவிஞர்

1980களில் ஈழப்போர் காரணமாக கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள். இவர்கள் அந்நாட்டில் வேலைவாய்ப்பினைப் பெறுவதில் சிரமங்களை ஏதிர்கொண்டார்கள். கனடாவில் தொழில் முன்அனுபவம் இல்லாத காரணத்தால் அவர்கள் விரும்பிய துறைகளில் உடனடியாகத் தொழில் பெறுவதில் கஷ்டம் இருந்தது. இருந்தபோதிலும் முன் அனுபவம் தேவைப்படாத தொழில்களான பாதுகாவலர் வேலை, எரிபொருள்நிலைய வேலை, உணவகங்களில் சமையல் அறைகளில் வேலை, பத்திரிகைகள் வீட்டுக்குவீடு போடும்வேலை, தொழிற்சாலைகளில் கூலிவேலை போன்றவற்றைச் செய்து பணம் சம்பாதித்தார்கள். அவ்வாறு சம்பாதித்த பணத்தில் ஒரு பகுதியை அவர்கள் ஊரில் தாம்பெற்ற கடனை அடைப்பதற்கும் பெற்றோர் சகோதரர்களைப் பேணுவதற்கும் அனுப்ப வேண்டியிருந்தது. அனேகமானவரின் நிலைமை இவ்வாறானதாகத்தான் இருந்தது. ஆரம்ப

காலத்தில் இத்தகைய தொழில்புரிந்தவர்கள் காலக் கிரமத்தில் கஷ்டத்தின்மத்தியில் தாங்கள் விரும்பிய படிப்பை மேற்கொண்டு கனடிய அனுபவத்துடனான நல்ல வேலைகளைப்பெற்று தமது வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொண்டார்கள்.

இவர்களது அடுத்த தலைமுறையினருக்கு இத்தகைய கஷ்டங்கள் இருக்கவில்லை. அவர்கள் கனடா நாட்டின் தேசிய மொழிகளான ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழிகளில் கல்வியை மேற்கொண்டு அதிக வருமானம் தரக்கூடிய தொழில் துறைகளைத் தேர்ந்தெடுத்து சிறந்த கல்வித் தரத்துடன் உயர்தொழில் புரிபவர்களாக விளங்குகிறார்கள்.

1980களில் ஈழப்போர் காரணமாக பெருந்தொகையானோர் கனடாவுக்கு புலம்பெயர்ந்து வந்தபோதும் அக்காலப்பகுதிக்கு முன்னரே ஈழத்தமிழர் சிலர் கனடாவில் வந்து குடியேறியி ருக்கிறார்கள். இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்றபின் 1956இல் இலங்கையில் ஏற்பட்ட பலதரப்பட்ட அரசியல் பொருளாதார நிலைமைகள் காரணமாக தாய்நாட்டைவிட்டு வெளியேறி அந்நிய நாடுகளில் தமிழர்கள் குடியேறி யிருக்கிறார்கள். சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டம், பாராளுமன்ற உறுப்பினருக்கு இருந்த கோட்டாமுறை மற்றும் கல்வி தொழில்வாய்ப்பு என்பன 1980க்கு முன்னர் ஈழத்தமிழர்கள் தமது நாட்டைவிட்டு வெளியேறி பிற நாடுகளில் குடியேறுவதற்கு காரணமாயிற்று. அந்தவகை யில் முதன்முதலாக 1955இல் புலமைப்பரிசில் பெற்று கனடாவுக்கு வந்த ஈழத்தமிழர் திரு. தாமு விநாயகரத்தினம் என அறியமுடிகிறது. அதன்பின்னர் 1966இல் றொசலின்ட இராசநாயகம், 1967இல் டாக்டர் சகானந்தன், அதே காலப்பகுதியில் டாக்டர் கனகராஜா 1969இல் டாக்டர் சண்முகசுந்தரம் போன்ற புத்திஜீவிகள் கனடாவுக்கு வந்து நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். மேற்குறிப்பிட்ட தகவல்கள்

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்களின் 'கனடாவில் இலங்கைத் தமிழர்களின் வாழ்வும் வரலாறும்' என்ற நூலில் காணப்படுகின்றன.

கனடியச் சூழலில் நம்மவர்கள் எவ்வாறு இசைவாக்கும் பெற்று வாழ்கிறார்கள் என்பதை விளங்கிக்கொள்ள கனடாவின் சமூக அரசியல் பொருளாதார வரலாற்றுப் பின்புலத்தை விளங்கிக்கொள்ளல் பயனுடையதாக அமையும்.

6000 ஆண்டுகளுக்கு முன்னர் எஸ்கிமோவர் என்னும் பழங்குடியினர் முதன்முதலில் கனடாவில் குடியேறினார்கள் என அறியமுடிகிறது. எஸ்கிமோ என்ற சொல்லின் அர்த்தம் பச்சையாக மாமிசம் உண்பவர்கள் என்பதாகும். இவர்களே கனடாவின் ஆதிகுடிகள் ஆவர். வடமேற்கு ஆசியாவில் இருந்து இவர்கள் பெயரிங் கடலைக் கடந்து உணவுதேடி கனடாவுக்குவந்து குடியேறியவர்கள். இவர்கள் குழுக்களாகப் பிரிந்து கனடாவின் வடகரைகளில் பரந்து வாழ்ந்தார்கள். இந்தக் குழுக்கள் தங்களை வெவ்வெறு பெயர்கொண்டு அழைத்தனர்.

கனடிய பழங்குடிமக்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் பின்வரும் மூன்று வகையினராக இனங்காணப்படுகின்றனர்: இன்டியன்ஸ், இனுவிட் (Inuit), மெயிற்றீஸ் (Metis). இன்டியன்ஸ் என்ற சொல் இழிவானதாக கனடிய பழங்குடிகள் கருதியதால், அவர்கள் தங்களை முதற்குடிகள் (First Nations) என்று அழைத்தார்கள். இவர்கள் கனடிய செவ்விந்தியர்கள் என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. கனடாவின் மிகக் குளிரான மேற்பகுதிகளில் வாழ்ந்த பழங்குடியினர்களே இனுவிட் ஆவார்கள். இவர்களை அழைக்க எஸ்கிமோ என்ற (தற்போது இழிவாகக் கருத்தப்படும்) சொல்லும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

நாடுகாண் நோக்குடன் முதலில் பிரெஞ்சுக்காரர் கனடாவுக்கு 1500களில் வந்தனர். இவர்கள் இந்நாட்டில் வாழ்ந்த பழங்குடியினருடன் வணிகத் தொடர்புகளைப் பேணிவந்தனர்.

வணிகத்தில் ஆரம்பித்த இவர்கள் பின்நாளில் இந்நாட்டின் ஆட்சியாளர் ஆனார்கள். அவர்களைத் தொடர்ந்து பிரித்தானியரும் கனடாவின் சில பகுதிகளைக் கைபற்றி ஆட்சிசெய்தனர்.

இந்த நாட்டின் பழங்குடிமக்களின் மொழிகளில் ஒன்றாகிய இராக்கியன் (Iroquoian) மொழியில் குடியிருப்பு, சமூகம், ஊர் என்ற பொருள்தரும் Kanata என்ற சொல்லில் இருந்தே கனடா என்ற பெயர் 1550இல் உருவாக்கப்பட்டது. 1608இல் 'சாமவெல்டி கம்சன்' என்னும் பிரான்ஸியர் சென். லோறன்ஸ் நதிக்கு வடக்காக உள்ள பகுதிகளை "கனடா" என்று அழைக்கத் தொடங்கியதுமுதல் இந்த நாட்டிற்கு கனடா என்ற பெயர் வழங்கலாயிற்று.

ஆங்கிலேயர் பிரஞ்சுக்காரருடன் போரிட்டு கனடாவின் கியூபெக் மாநிலத்தைக் கைப்பற்றினர். 1663இல் அந்த மாநிலம் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இருஆட்சியாளருக்குமிடையே ஏழாண்டுகள் போர் இடம்பெற்றன. பிரித்தானியப்படைகள் போரில் வெற்றிபெற்றன. அதிலிருந்து பிரித்தானியர் கனடாவின் ஆட்சியாளராகவும் உரிமையாளராகவும் திகழ்ந்தனர். 1856இல் விக்டோரியா மகாராணியார் கனடாவின் தலைநகர் 'ஒட்டாவா' எனப் பிரகடனப்படுத்தினார். காலப்போக்கில் மக்கள் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. குடியேற்ற மாநிலங்கள் வகுக்கப்பட்டு தனித்தனியான ஆட்சிப் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டன. கனடியப் பூர்வீகக் குடிகளுக்கு தனித்தனியான ஆட்சிப் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. அந்தவகையில் வடமேற்குப் பிரதேசம், யூகொன் என்னும் இரண்டு பிரதேசங்களும் பூர்வீகக் குடிகளின் பிரதேசங்களாக அமைந்தன. தற்போது கனடா பத்து மாகாணங்களையும் மூன்று ஆட்சிக்குரிய நிலங்களையும் கொண்டு விளங்குகிறது. ஒவ்வொரு மாகாணங்களுக்கும் அதற்கான தலைநகரங்கள் உள்ளன. 1867ஆம் ஆண்டிலிருந்து அரசியல் சட்ட அமைப்புக் கொண்ட ஒரு நவீன கூட்டாட்சி நாடாக கனடா விளங்குகிறது. கனடாவில் மாநகர அரசு, மாகாண அரசு, மத்திய அரசு என்ற மூன்று நிலைப்பட்ட அரசுகள் உள்ளன. சமஷ்டி முறையிலான நாடாளுமன்ற ஆட்சியே நடைபெறுகிறது.

மாகாண அரசுகளுக்கு போதிய அதிகாரங்களை மத்திய அரசு வழங்கிவருகிறது.

கனடா சுதந்திர ஜனநாயக சமஷ்டி முறையிலான அரசியலமைப்புக் கொண்ட நாடாக விளங்குகின்றபோதும் அது இன்றும் பிரித்தானிய செல்வாக்குக்கு உட்பட்டதாக விளங்குகிறது. இன்றும் பொதுநலவாய நாடுகளின் கூட்டில் அங்கம் வகிக்கிறது. 1982வரை கனடாவின் அரசியல் அமைப்பு முறைகளில் ஏதாவது மாற்றங்கள் செய்வதானால் அம்மாற்றங்களை பிரித்தானியப் பாராளுமன்றமே அங்கீகரிக்க வேண்டும் என்ற விதிமுறை இருந்தது. அதன் இன்றைய அரசமைப்பில்கூட பிரித்தானிய அரசிக்குப் பெயரளவில் தலைமையிடம் கொடுக்கப்படுகிறது. ராணியின் பிரதிநிதியாக ஆளுநரும் நியமிக்கப்படுகிறார்.

கனடாவின் சில பெருந்தெருக்களுக்கு ராணி எலிசபெத்வீதி, வின்ஸன் சேர்ச்சில்வீதி போன்ற பெயர்கள் சூட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாறு பிரித்தானியர்கள்மீதுள்ள விசுவாசம் கனடியர்களால் காட்டப்பட்டுவருகிறது.

1868இல் கனடாவின் முதலாவது பிறந்ததினம் கொண்டாடப் பட்டது. 1965இல் கனடாவின் தேசியக்கொடி பிரகடனப் படுத்தப்பட்டது. சிவப்பு, வெள்ளை நிறங்களையும் மோப்பிள் இலையையும் கொண்டமைந்த தேசியக் கொடியை எலிசபெத் மகாராணியார் கனடாவின் தேசியக் கொடியாகப் பிரகடனப்படுத்தினார். 1969ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இருமொழிகளும் கனடாவின் ஆட்சிமொழிகளாகப் பிரகடனஞ் செய்யப்பட்டன.. கனடாவின் தேசியகீதமாக 'O Canada Our Home and Native Land" எனத்தொடங்கும் பாடல் 1981இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கனடா நாட்டின் 150ஆவது சுதந்திர தினம் 2017 ஜூலை 1ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அவ்வேளையில் தமிழ்மொழி உட்பட மொத்தம் 12 மொழிகளில் கனடா தேசியகீதம் வெளியிடப் பட்டது. அதுவரை ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் மட்டுமே இருந்த கனடா தேசியகீதம், தற்போது நாடுதழுவிய

நிலையில் அதிகஅளவில் பயன்படுத்தப்படும் மற்றும் பேசப்படும் தமிழ் உள்ளிட்ட 12 மொழிகளில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்மொழியில் கனடா தேசியகீதத்தை ஆக்கியவர் புலம்பெயர் ஈழத்தமிழரான கவிஞர் கந்தவனம் என்பது எமக்குப் பெருமை தருவது.

அவரது தமிழ் மொழிபெயர்ப்பு பின்வருமாறு அமைந்துள்ளது:

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ
உந்தன் மைந்தர்கள் உண்மை தேசபக்தர்கள்.
நேரிய வடக்காய் வலுவாய் இயல்பாய் நீ
எழில் கண்டு உவப்போம் எங்கும் உள்ள நாம்.

ஓ கனடா! நின்னைப் போற்றி அணிவகுத்தோம்.
எம் நிலப் புகழை, சுதந்திரத்தை என்றும் இறைவன் காத்திடுக!

ஓ கனடா! நாம் நின்னை போற்றி அணிவகுத்தோம்.
ஓ கனடா! நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்.

# 04

## கனடிய அரசு வழங்கும் வழிபாட்டுச் சுதந்திரமும் தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங்களும்

கனடிய அரசாங்கம் சட்ட ரீதியாக பல்லினமக்களும் தத்தமது பாரம்பரியங்களைப்பேணி வாழ் வதற்கு அனுமதியளித்துள்ளது. அந்தவகையில் கனடாவில் வழி பாட்டுச் சுதந்திரம் பேணப்படுவதால் அங்கு புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களும் தமது ஆன்மிகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற் கென பல வழிபாட்டுத்தலங்களை அமைத்துள்ளார்கள்.

கனடாவின் ஒன்ராறியோ மா நிலத்தில் பல்வேறு இடங்களிலும் சைவக்கோயில்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றில் றிச்மன்ட்ஹில் பிள்ளையார் கோயில் கனடாவில் முதன்முதலில் அமைக்கப்பட்டது. இதனைப் பெரியகோயில் எனவும் குறிப்பிடுகின்றனர். அங்குள்ள ரொறன்ரோ ஸ்ரீ துர்க்கேதீஸ்வரம், கனடா ஐயப்பன் ஆலயம் ஆகிய ஆலயங்களும் பெருங்கோயில் களாக அமைந்துள்ளன.

*1973*ஆம் ஆண்டில் கனடா 'இந்து ஆலய சபை' என்ற அமைப்பு அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டு

ஆலயம் அமைப்பதற்கான காணிவாங்கி அதில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அப்போது அந்த ஆலய நிர்மாணத்திற்கு முதலில் செயற்பட்டவர்கள் தென்னிந்தியத் தமிழர்கள். 1983இல் ஈழத்தமிழர்கள் அதிகளவில் கனடாவுக்குச் சென்றடைந்த பின்னர் இருபகுதியினரின் கூட்டுமுயற்சியுடனும் இந்த ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது. இந்த ஆலயத்தின் கட்டிட வேலைகளை மேற்பார்வை செய்து வழிநடத்தியவர் யாழ்ப்பாணம் இளவாலையைச்சேர்ந்த கட்டடக்கலை நிபுணரான திரு. நா.சிவலிங்கம் ஆவார். இவர் "தமிழீழச்சங்கம்" என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் குடியமர்வுத்திட்டம் உருவாக உழைத்தவர்களில் முக்கியமான ஒருவராகவும் போற்றப்படுகிறார்.

இக்கோயிலில் பிள்ளையார், முருகன், விஷ்ணு ஆகிய தெய்வங்கள் மூலமூர்த்திகளாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு 1992இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்கோயில் ஆகம முறைப்படி அமைந்த கோயிலாகும்.

இந்த ஆலயத்தின் பின்னர் தோன்றிய பெரிய ஆலயமாக ரொறன்றோ விக்டோரிய வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீதுர்க்கை அம்பாள் தேவஸ்தானம் விளங்குகிறது. இதன் மகாகும்பாபிஷேகம் 2001ஆம் ஆண்டில் இடம்பெற்றது. அதன்பின்னர் கனடா கந்தசாமி கோயில், ஐயப்பசாமி கோயில் ஆகிய கோயில்களும் ஆகமவிதிப்படி அமைந்த கோயில்களாக விளங்குகின்றன.

கனடாவில் உள்ள பெரும்பாலான கோயில்கள் ஆகம முறைப்படி அமைந்த கோவில்கள் அல்ல. அவற்றில் கோபுரங்களோ ஸ்தூபிகளோ இருப்பதில்லை. ஏதாவது ஒரு கட்டடத் தொகுதியில் ஒரு நீளமான அறையை ஒதுக்கி உள்ளே குளிர் வராதபடி கண்ணாடிக் கதவுகளால் மறைவுகளை ஏற்படுத்தி நடுவிலே கர்ப்பக்கிரகத்தை மரத்தினால் அமைத்து வர்ணம்பூசி அதிலே மூலமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். வசந்தமண்டபம் என்ற அமைப்பில் இடதுபக்கச் சுவரோரமாக அங்கு செப்பு வெண்கல

எழுந்தருளி விக்கிரகங்களை அமர்த்தியிருக்கிறார்கள். கனடாவில் இத்தகைய முப்பதுக்கும் மேற்பட்ட கோயில்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இக்கோயில்களில் அதிகமான பக்தர்கள் வழிபாடுசெய்ய வருகிறார்கள். வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் அதிக கூட்டம் இருப்பதைக் காணமுடிகிறது. வருடாவருடம் இங்கு திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

கனடாவில் வாழும் கிறிஸ்தவ தமிழ் மக்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தேவ ஆராதனைகளை ஆற்றிவருவதாக அறியமுடிகிறது. இவற்றில் சத்தியதேவ திருச்சபை, அற்புத குடும்ப ஆலயம், அறுவடை மிசன், தமிழ்க்கிறிஸ்தவக் குடும்பம் ஆகியன தமது சொந்தக் கட்டடங்களில் தமிழில் ஆராதனைகளையும் பூசைகளையும் செய்துவருகின்றன. மொன்றியல், ரொறன்றோ ஆகிய இருநகரங்களிலும் கத்தோலிக்கர் தமது ஆராதனைகளை பல தேவாலயங்களில் நடத்தி வருகின்றனர். 1987இல் அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த பிதா ஜோக்கிம்பிள்ளை இங்குள்ள கத்தோலிக்கர் தொடர்ச்சியாகக் கூடவும் தமிழில் வழிபாடு நடத்தவும் ஏற்பாடுசெய்து கொடுத்தார் என அறியமுடிகிறது.

கனடாவில் வாழும் தமிழ் முஸ்லிம்கள் அரபு, உருது மொழிகளில் தொழுகை நடக்கும் பள்ளிவாசல்களுக்குச் செல்கின்றனர். 1938ஆம் ஆண்டில் அல்ரஜீத் இறைஇல்லம் என்ற மசூதி கட்டப்பட்டது. தற்போது மதீனா என்ற பள்ளிவாசல் ரொறன்ரொவில் அமைக்கப்பட்டு தமிழில் தொழுகை நடந்து வருகிறது. மேலும் இங்கு பல பள்ளிவாசல்கள் அமைக்கப் பட்டு வருவதாகவும் அறியமுடிந்தது.

ஈழத்தமிழர்கள் அதிகளவில் புலம்பெயர்ந்த நாடு கனடா என்ற வகையில் அதிகளவு புலம்பெயர் தமிழ் எழுத்தா ளர்களைக் கொண்ட நாடாகவும் அதிகளவில் இலக்கிய முயற்சிகள், இலக்கியச் செயற்பாடுகள் இடம்பெறும் நாடாகவும் அது விளங்குகிறது.

நாங்கள் 2018 ஏப்ரல் 19ஆம் திகதி கனடாவைச் சென்றடைந்தோம். ஒருநாள் ஓய்வின் பின்னர் 21ஆம் திகதி ஸ்காபறோ நகரில் இடம்பெற்ற எழுத்தாளர் அ.முத்து லிங்கம் அவர்களின் 60 வருடகால எழுத்துலகப் பணியைப் பாராட்டும் நிகழ்வில் கலந்துகொண்டோம். இந்த விழா ரொறன்றோ தமிழச்சங்கத்தின் தலைவர் டாக்டர் இலம்போதரன் தலைமையில் இடம்பெற்றது. பல அறிஞர்கள் அ.முத்துலிங்கம் அவர்களது படைப்புகள் பற்றி ஆய்வுக்கட்டுரைகள் வாசித்தனர். இந்த விழாவில் வெளியிடுவதற்கென 'எழுத்துலகில் அ. முத்துலிங்கம் 60' என்ற ஞானம் சஞ்சிகையின் சிறப்பிதழை நாம் தயாரித்திருந்தோம்.

முத்துலிங்கம் ஈழத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட ஒரு படைப்பாளி என்பதும், ஈழத்து எழுத்துக்களுக்கு உலகளாவிய ரீதியில் ஓர் ஏற்புடைமையை ஏற்படுத்தியவர் என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தியாகும்.



ஈழத்துப் புலம்பெயர் படைப்பாளிகள் மத்தியில் தலையாய படைப்பாளியாகத் திகழ்பவர் அ. முத்துலிங்கம் என்றால் அது மிகையல்ல. இன்று தமிழகப்பத்திரிகைகளும் உலகளாவிய ரீதியில் வெளிவரும் பத்திரிகைகளும் இணையத்தளங்களும் முத்துலிங்கத்தின் படைப்புகளைக் கேட்டுவாங்கிப் பிரசுரிப்பதில் போட்டிபோடுகின்றன.

ஏனைய புலம்பெயர் எழுத்தாளர்கள் பெரும்பாலும் தாம் நிலைபேறுகொண்ட நாடுகளைப் பகைப்புலமாகக்கொண்டு சிறுகதைகளைப் படைக்க, முத்துலிங்கம் தாம் பயணித்த நாடுகள் யாவற்றையும் கதைக்களமாக்கி அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் அம்சங்களையும் இலக்கியமாக்கினார். அந்தவகையில் இவர் ஆபிரிக்க நாடுகள், பாகிஸ்தான், சூடான், சுவீடன் முதலான நாடுகளில் வாழும் மனிதர்கள்பற்றியும் அவர்களது வாழ்வியல் அம்சங்களையும் முதன்முதலில் இலக்கிய வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளார். இவை பிற புலம்பெயர் எழுத்தாளர்களின் எழுத்துக்களுக்குள் வராத கதைக்களங்களாகும்.

அ. முத்துலிங்கம் சிறுகதை, நாவல், பத்தி, விமர்சனம், நேர்காணல், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், புத்தக மதிப்புரைகள், நாடக - சினிமா விமர்சனங்கள் எனப் பல்துறை சார்ந்து அதிகமாக எழுதியவர். இவர் இருபதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு ஆங்கில எழுத்தாளர்களுடனான நேர்காணல்களை மேற்கொண்டுள்ளார். இப்படியாக அதிகமான இலக்கிய வகைமைகளுள் தன்னை ஈடுபடுத்தி இயங்குவதன் மூலம் ஏனைய எழுத்தாளர்களின் இலக்கியச் செயற்பாடுகளைவிட அதிகமான துறைகளில் இவர் இயங்கிவருகின்றார்.

"அ. முத்துலிங்கம் ஈழத்தவர் என்ற நிலையில் ஈழத்தவர் யாபேருக்கும் பெருமை! உலகின் முன்னணித் தமிழ் எழுத்தாளர் என்ற நிலையில் உலகத் தமிழர் யாபேருக்கும் பெருமை! அவர் தனது 60 ஆண்டுகால இலக்கியச் சேவையை நிறைவுசெய்திருக்கும் இத்தருணத்தில், அவரைப்பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக சிறப்புமலரை வெளியிட்டு, அவரை

வாழ்த்தி மகிழ்வதில் ‘ஞானம்’ பெருமையடைகிறது” என எனது வாழ்த்துரையில் குறிப்பிட்டு சிறுப்புமலரை திரு. அ.முத்துலிங்கத்திடம் கையளித்தேன். அன்றையவிழா அ.முத்துலிங்கத்தின் ஏற்புரையுடன் இனிதே நிறைவேறியது.

இந்தவிழாவில் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற எழுத்தாளர்கள் பலரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எமக்கு ஏற்பட்டது. அவர்களைப்பற்றி இக்கட்டுரைத் தொடரில் பின்னர் சந்தர்ப்பம் வரும்போது குறிப்பிடுவேன்.

# 05

## ஈழத் தமிழர்களின் கேந்திர இடமாக அமைந்த ரொறன்ரோ நகர்

கனடாவில் ஈழத்தமிழர்கள் அதிகளவில் குடியேறிய முக்கிய நகரங்களாக ரொறன்ரோ, வான்கூர், மொன்றியல், கல்காரி ஆகிய நகரங்கள் விளங்குகின்றன. இவற்றுள்ளும் ரொறன்ரோ நகரிலேயே தற்போது அதிக தமிழர்கள் வாழ்கின்றனர்.

கனடாவின் தலைநகராக 'ஒட்டாவா'விளங்கியபோதிலும் கனடாவின் பொருளாதார நகரமாக ரொறன்ரோநகர் விளங்குகிறது. உலகப் பொருளாதார மையங்களில் இந்த நகர் எட்டாவது இடத்தில் இருப்பதாக 2015ஆம் ஆண்டு Globel Financial Center Index என்ற நிறுவனத்தின் அறிக்கை அறியத் தருகிறது. இந்த ஆய்வில் 84 நகரங்களை இவர்கள் ஆய்வு செய்துள்ளனர்.

இது மாத்திரமல்ல உலகத்தில் உள்ள ஏனைய நகரங்களுடன் ஒப்பிடுகையில் இளைஞர் யுவதிகளுக்குப் பொருளாதார ரீதியாக முன்னேறுவதற்கும் வாழ்வதற்கும் உலகில் சிறந்த நகரமாகவும் இந்நகர் இருப்பதாக உலக

வங்கியும் ஆங்கில பொருளாதார சஞ்சிகையும் 2015ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வில் தெரிவித்துள்ளன.

2016ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி ரொறன்ரோவின் சனத்தொகை ஏறத்தாழ 2.7 மில்லியனாகும். இந்நகர் ஒரு பல்கலாசார நகரமாகத் திகழ்கிறது. இங்கு 160க்கும் மேற்பட்ட மொழிகளைப்பேசும் மக்கள் வாழ்கிறார்கள். ஒவ்வொரு இனமக்களும் தமது மொழி பண்பாட்டு விழுமியங்களைப் பேணிவாழ்வதற்கு உரிமையுடையவர்களாக இருக்கிறார்கள்.

இந்த நகர் கனடாவையும் அமெரிக்காவையும் பிரிக்கும் ஐந்து பெரிய ஏரிகளில் ஒன்றான ஒன்ராறியோ ஏரியின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ளது. இந்தநகரின் பரப்பளவு 243 சதுர மைல்களாகும். இந்நகரில் மூன்று சிறிய நதிகள் இருக்கின்றன.

இந்த நகரின் வரலாற்றை எடுத்து நோக்கினால் ஐரோப்பியரின் வருகைக்கு முன்பு ஆதிக் குடிமக்களில் ஒரு இனக்குழுவான 'ஈரோகியூயிஸ்' (Iroquois)என்னும் இனத்தவர்கள் 1500 ஆண்டுகளுக்குமுன் இங்கு வாழ்ந்தார் களாம். அவர்கள் இந்த இடத்தைத 'ரிக் கரொன்ரோ' (Tkaronto) என அழைத்தார்கள். அவர்களது மொழியில் இதன் கருத்து தண்ணீருக்குள் மரங்கள் நிற்கும் இடம் என்பதாகும். காலப்போக்கில் அந்தச்சொல் திரிபடைந்து ரொறன்ரோவாக மாறியுள்ளது.

1813இல் அமெரிக்கச் சுதந்திரப்போர் முடிந்த பின்னர் 1834இல் ரொறன்ரோ என்ற பெயர் உத்தியோகபூர்வமாக உருவாக்கப்பட்டது. 1854ஆம் ஆண்டு அங்கு யூனியன் ரெயில்வே நிலையம் கட்டப்பட்டது. பல்வேறு ரெயில்பாதைகள் அங்கீகரிக்கப்பட்டு ஏனைய இடங்களுடன் இணைக்கப்பட்ட பின்னர் இந்த நகரின் பெருமை வட அமெரிக்கக் கண்டத்தில் முக்கியத்துவம் பெறத்தொடங்கியது.

1860ஆம் ஆண்டு வட அமெரிக்காவிலேயே பெரிய மது உற்பத்திச்சாலை ரொறன்ரோவில் இருந்தது. தற்போதும் இங்கு அதன் எச்சங்கள் உள்ளன, 'டிஸ்டிலறி டிஸ்றிக்' என்று இப்பகுதியை அழைக்கிறார்கள். பெரும்பாலான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாகவும் இது விளங்குகிறது.



1904ஆம் ஆண்டு இங்கு ஒரு பெரிய தீவிபத்து ஏற்பட்டதாம். நகரின் பெரும்பாலான பகுதிகள் எரிந்து சாம்பராகின.

1800ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதாவது கைத்தொழிற் புரட்சிக் காலத்தில் இங்குள்ள பெரும்பாலான பகுதிகள் தொழிற்சாலைகளாக இருந்தன. இங்குள்ள 'கிங்ஸ்றீற்' பகுதியில் விவசாய உற்பத்திக்கான உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள் இருந்துள்ளன. அந்த இடங்களில் தற்போது புதிய மாடிக்குடியிருப்புகள் ஏற்பட்டுவிட்டன.

ரொறன்ரோ நகர் உயர்கல்வி கற்பதற்குப் பல்வேறு பல்கலைக் கழகங்களையும் கல்லூரிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. முக்கியமாக இங்குள்ள ரொறன்ரோ பல்கலைக் கழகம் உலகில் உள்ள சிறந்த 20 பல்கலைக்கழகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இப்பல்கலைக்கழகம் ஒரு அரச ஆய்வுப் பல்கலைக் கழகமாகும். 1827ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழகம் முதலில் 'கிங்ஸ் கல்லூரி' என அழைக்கப் பட்டது. அக்காலத்தில் இது இங்கிலாந்து தேவாலயத்தால் நிர்வகிக்கப்பட்டதாம். இப் பல்கலைக்கழகத்தில் மூன்று வளாகங்கள் உள்ளன. மருத்துவம், சட்டம், அறிவியல் ஆகிய

துறைகளுக்கு இப்பல்கலைக்கழகம் சிறப்பாக அறியப் படுகிறது. இங்கு ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் மாணவர்கள் பயில்கின்றனர். 'இன்சுலின் மருந்து', 'குருத்தணு', 'எதிர்மின்னி நுண்நோக்கி', 'பல்முனைத் தொடுஇடைமுகம்', 'கருந்துளை' ஆகியவை இந்தப் பல்கலைக்கழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டவை.

இங்கு படித்த மாணவர்களில் சிலர் கனடிய ஆளுநர் களாகவும், கனடியப் பிரதமர்களாகவும், நீதிபதிகளாகவும் பணியாற்றியுள்ளனர். இங்குபடித்த பத்துமாணவர்கள் நோபல் பரிசைப் பெற்றுள்ளனர்.

1983க்குப் பின்னர் ஈழத்தமிழர் வாழ்வியலிலும் ரொறன்ரோ நகர் மிகமுக்கியமான நகராகத் திகழ்கிறது. ஆரம்பக் காலங்களில் இங்குவந்தவர்கள் உணவகங்களில் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்தார்கள். காலப்போக்கில் அவர்கள் பொருளாதார வளர்ச்சி அடைந்தனர். தங்கள் விடாமுயற்சியின் துணையோடு கனடிய மண்ணில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர். தாங்கள் வசிக்கும் இடங்களில் தங்களது கடைகள், வழிபாட்டுத் தலங்கள், வீதிகளுக்குத் தமிழ்ப்பெயர் சூட்டுதல், கோயில்களுக்குத் தங்கள் ஊரில் உள்ள கோயில்களின் ஞாபகார்த்தமாகப் பெயர் சூட்டுதல், கடைகளுக்கு ஊரில் உள்ள கடைகளின் ஞாபகமாகப் பெயர் சூட்டுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் தங்களது பிறந்த மண்ணின் நினைவுகளை மீட்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்கி வாழப் பழகிக்கொண்டார்கள். இன்று ஈழத் தமிழர்கள் சிலர் ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஈழத்தமிழர் ஒருவரை கனடா பாராளுமன்றத்துக்கு அனுப்பி யவர்கள் ரொறன்றோ தமிழர்கள்தான்.

கனடா முழுவதும் தமிழர்களுக்கென ஒரு பாரம்பரிய மாதமான (Heritage Month) தை மாதத்தினைக் கொண்டாடு வதற்குப் பின்புலமாக அமைந்தவர்களும் ரொறன்ரோவாழ் ஈழத் தமிழர்கள்தான்.

# 06

## நிலக்கீழ் அறையை பிரதான இடமாகக் கொண்டியங்கும் கனடா வீடுகள்

கனடாவில் நான் அவதானித்த முக்கிய விடயங்களில் ஒன்று அந்நாட்டில் உள்ள வீடுகளின் அமைப்பாகும். அங்குள்ள பெரும்பாலான வீடுகள் நிலக்கீழ் அறையுடன் (Basement) கூடிய ஒரேவிதமான அமைப்பைக் கொண்டவையாக இருக்கின்றன. குளிர்ப் பிரதேசத்துக்கு ஏற்றவகையில் அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறைக்குத் தகுந்தவகையில் அந்த வீடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

வீடுகள் அனேகமானவை மூன்று தளங்களைக் கொண்டிருக்கும். வீட்டின் முன்வாசலையொட்டி இரண்டு கார்கராஜ் அருகருகாக அமைந்திருக்கும்.வாசலைத் திறந்து உள்ளே சென்றால், வரவேற்பறை. அங்கு ஏழெட்டுப்பேர் வசதியாக அமரலாம்.வரவேறப்பு அறைக்குப் பின்னால் சாப்பாட்டுமேசை. அதனை அடுத்து சமையல் அறை. வெளியில் இருந்து வருபவர்கள் வீட்டின் உள்ளே நுழைந்ததும் தாம் அணிந்திருக்கும் தடித்த ஓவர்கோட், தொப்பி முதலியவற்றைக் கழற்றித் தொங்க


விடுவதற்கான சிறிய கபினெற். அதனருகில் கழிப்பறை. இந்தக் கழிப்பறை வெளியார்கள் வந்தால் பாவனைக்குரியதாக அமைந்திருக்கும். குளிர்நாடு என்பதால் இத்தகைய அமைப்பு முக்கியமானது. வீட்டின் முன்வாசலை குளிர் உள்ளே வராமல் எந்த நேரமும் மூடி வைத்திருப்பார்கள்.

படியேறி மேலே சென்றால் குடும்பத்தினரின் படுக்கை அறைகள், விருந்தினர் தங்கும் அறை. 'கொம்புயூற்றர்' அறை, சிறிய சுவாமிஅறை போன்றவற்றைக் காணலாம். கனடாவில் வீடுவைத்திருப்பவர்கள் தமது ஆண் பெண் குழந்தைகளுக்கு தனித்தனி அறைகள் கொடுக்கவேண்டும். எல்லோரையும் சேர்த்து ஒன்றாகப் படுக்கவைத்தால் நீங்கள் கனடிய சட்டத்தை மீறுகிறீர்கள் என்று அர்த்தம்.

நிலத்தளத்தில் இருந்து கீழே செல்லும் படிகளில் இறங்கினால் வீட்டின் நிலக்கீழ்அறை (Basement) நிலமட்டத்திற்கு அடியில் பூமிக்குள் கட்டப்பட்டிருக்கும். இந்த அறை, வீட்டின் பிரதான இணைப்புகளுடன் தொடர்புடையது. மேல் வீட்டளவு விஸ்தீரணம் கொண்டதாக இந்த அறையும் அமைந்திருக்கும். நிலக்கீழ் அறைப்பகுதியும் தனிவீடு போன்று பாவனைக்கு உகந்ததாக சகலவசதிகளுடனும் அமைந்திருக்கும்.

கனடா குளிர்நாடு என்பதால் குளிர் காலத்தில் பயன் படுத்தும் வெப்பக்காற்றுக் கருவிகள் (Heating System) வீடு முழுவதற்கும் பொருத்தப்பட்டிருக்கும். காலநிலைக் கேற்றவாறு வெப்பதட்ப நிலைமைகளைக் கூட்டிக்குறைக்கும் வசதிகள் பொருந்தியதாக இவை அமைந்திருக்கும். வீட்டுக்குத் தேவையான மின்சாரம், மின்சார அடுப்பு, தண்ணீர், துவைத்து உலரவைக்கும் யந்திரங்கள், என எந்தநேரமும் மின்சாரத்தின் பாவனையுடனேயே வீடு இயங்கிக்கொண்டிருக்கும். நிலக்கீழ் வீட்டிலேதான் மேற்குறிப்பிட்ட கருவிகளின் யந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கும்.

வெளியேயிருந்து வீட்டுக்குத் தொடுக்கப்பட்டிருக்கும் தண்ணீர்க் குழாய்கள் குளிர் தாக்காதவாறு நிலத்துக்கடியில் ஐம்பது அடி ஆழத்தில் இருக்கும்.



வீட்டுக்குத் தொடுக்கப்பட்டிருக்கும் தண்ணீர்க் குழாய்கள் மற்றும் மின்சார விநியோகம் யாவுமே நேரடியாக நிலக்கீழ் அறையில் உள்ள பிரதான 'மீற்றரு'டன் (Meter) தொடர்பு பட்டிருக்கும்.

வீட்டின் சொந்தக்காரர்கள் வீட்டைப் பூட்டிவிட்டு ஒரு மாத லீவில் வெளிநாடுசெல்ல நேரிட்டாலும் வீட்டின் உள்ளே மின்சார இயக்கத்தை நிறுத்திவைத்துவிட்டுச் செல்லமுடியாது. தண்ணீர்க் குழாய்களில் வரும் தண்ணீர் பனிக்கட்டியாகி உறைந்து குழாய்கள் வெடித்துவிடாமல் இருப்பதற்கும் வீட்டை மின்சாரத்தின் உதவியோடு எந்தநேரமும் சூடாக வைத்திருக்க வேண்டியுள்ளது.

பெரும்பாலான வீடுகளில் நிலக்கீழ் அறையின் ஒரு பகுதியை பொருட்கள்வைக்கும் களஞ்சியமாகவும் பாவிப் பார்கள். உடற்பயிற்சிக் கருவிகள், குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் இங்கேதான் வைக்கப்பட்டிருக்கும்.

இந்த வீடுகள் யாவும் கம்பிகள், சுண்ணாம்பு, சீமெந்துக் கலவைகள் கொண்டு அமைக்கப்பெற்றவை. படிக்கட்டுகள் கைப்பிடிகள், வரவேற்பறையின் தளங்கள் தடித்த பலகைகள் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். இங்கு கொங்கிறீட்

கற்களினால் உறுதியான வீடுகள் கட்டப்படுவதில்லை. அப்படிக் கட்டினால் கடுங்குளிருக்குத் தாக்குப் பிடிக்கமுடியாமல் அமுக்கம் ஏற்பட்டு வெடித்துவிடுமாம்.

இலங்கையைப் போன்று காணிகளுக்கிடையே வேலிகளை அல்லது சுற்றுமதில்களை கனடாவில் காணமுடிவதில்லை. இரு வீடுகளுக்கு இடையே சுமார் பத்தடி அகலமான புற்தரைகளை அவ்வீடுகள் கொண்டிருக்கின்றன. வீட்டின் பின்புறத்தில்மாத்திரம் காணியின் எல்லையைக் குறிக்கும் மரத்தினாலான தடுப்புகளைக் காணமுடிகிறது.

கோடை காலத்தில் வீட்டின் பின்புறத்தே உள்ள நிலப்பரப்பில் சிலர் ஆர்வம் காரணமாக தொட்டிகளில் மூன்று மாதத்தில் பயன்தரக்கூடிய காய்கறிச்செடிகளை வளர்ப்பார்கள். குளிர்காலத்தில் அச்செடிகள் பட்டுப்போய்விடும். வீட்டின் பின்பறத்தில் பிள்ளைகள் விளையாடுவதற்கான ஊஞ்சல், சிறிய நீர்த்தடாகம் போன்றவற்றை சிலர் அமைத்திருப்பார்கள்.

சில வீடுகளின் பின்புறத்தில் வட்டவடிவிலான இரும்பு மேசை அதைச்சுற்றி நாற்காலிகள் போடப்பட்டிருக்கும். பொதுவாக கறுப்பின மக்களினதும் வெள்ளைக்காரர்களதும் வீடுகளில் இந்த அமைப்பைக் காணமுடிகிறது. கோடை காலத்தில் அவர்கள் அங்கிருந்து சூரியக்குளியலுடன் மது அருந்தி மகிழ்வார்களாம். அங்கே பச்சை இறைச்சிகளை வாட்டிச் சாப்பிடுவதற்கான இரும்பு அடுப்புகளையும் காணலாம். அவ்வாறு பச்சை இறைச்சிகளை வாட்டி உண்பதை 'பாபக்கியூ' என்று குறிப்பிடுகிறார்கள்.

நிலத்தோடுகூடிய தனியான வீடுகளே இத்தகைய அமைப்பைக் கொண்டுள்ளன. ஆனால் 'அப்பார்ட்மென்ட்ஸ்' என்றழைக்கப்படும் தொடர்மாடிவீகளின் அமைப்பு வேறானது. அவை தூய்மையானதாகவும், அமைதியானதாகவும் பாதுகாப்பானதாகவும் பல வசதிகளைக் கொண்டதாகவும் அமைந்திருக்கும். நிலக்கீழ் அறைகள்கொண்ட வீடுகளில் காணப்படும் அனைத்து வசதிகளும் இந்தத் தொடர்மாடி வீடுகளின் ஒரேதளத்தில் அமைந்திருக்கும். நிலத்தளம் முழுவதும் அங்கு குடியிருப்பவர்களின் வாகனைங்களை

நிறுத்திவைப்பதற்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும். அதே தளத்தில் வாசலில் பொதுவரவேற்பறை, உட்காருவதற்கான இருக்கைகள், பொதுத் தொலைபேசி, பத்திரிகைகள், பாதுகாவலர் அறை, விசாரணைப் பீடம் என்பன அமைந்தி ருக்கும். விசாரணைப்பீடத்தில் நாம் வந்திருப்பதைத் தெரிவித்தால் வீட்டின் உரிமையாளர் எம்மைச் சந்திப்பதற்குத் தயாராவார். மாடிக்குச் செல்வதற்கான மின்தூக்கிகளில் குறிப்பிட்ட ஒருவரின் வீட்டைச் சென்றடையலாம்.

கனடாவில் தனது விட்டைத்தானே அமைத்துக்கொள்ள எத்தனிப்பவர்கள் மிகச்சிலராகத்தான் இருக்கமுடியும். வீடுகளை அமைப்பதற்கு மாநகரசபையின் சிரமமான நடைமுறைகளால் பொதுவாக கட்டி முடிக்கப்பட்ட வீடு களையே மக்கள் வாங்குகிறார்கள்.

பெரும் மூலதனத்தைக்கொண்ட கட்டடநிர்மாணத் துறையில் அறிவும் அனுபவமும் ஆளணி வசதிகளையும் கொண்ட பெருநிறுவனங்கள் அரசிடமிருந்து காணிகளைக் கொள்வனவுசெய்து மாநகரசபையின் விதிகளுக்கு அமைய வரைபடங்களைத் தயாரித்து அனுமதிபெற்ற பின்னர் இத்தகைய குடியிருப்புகளை அமைத்து வீடுகளை விற்பனை செய்கின்றன.

கனடாவில் வீடுவாங்குவது ஒன்றும் பெரியவிடயமல்ல. வங்கிக்கடன்பெற்று வீடுவாங்கிவிடலாம். வங்கிக்கடன் பெறுவதற்கு தேவையானது ஒரேயொரு விடயம்தான். நீங்கள் தொழில்பார்ப்பவர்களாகவும், நிரந்தரவருமானம் உடையவர்களாகவும் இருக்கவேண்டும். வீட்டின் பெறுமதியில் 95 வீதத்தை வங்கிகடனாகக் கொடுக்கும். மீதம் ஐந்து வீதத்தை நீங்கள் முற்பணமாகச் செலுத்தினால் வீடு வாங்கி விடலாம். வீட்டுக்கடனை தவணைமுறையில் உங்கள் சம்பளத்தில் இருந்து வங்கி மீளப்பெற்றுக்கொள்ளும்.

கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களில் பெரும்பாலானோர் இன்று சொந்தவீடுகள் வாங்கி வசதியாக வாழ்கிறார்கள்.

# 07

## கனடாவின் அற்புதம் உலகப் புகழ்பெற்ற நயகரா நீர்வீழ்ச்சி

நாங்கள் கனடாவுக்குச் சென்ற காலத்தில் வின்றர் காலநிலையின் நீட்சிமாறாத நிலை இருந்ததாக முன்னரே குறிப்பிட்டிருந்தேன். கனடாவின் காலநிலை அவதானிப்பு நிலையம் கனடா நாட்டின் முக்கியமான நகரங்களின் அடுத்துவரும் சிலநாட்களுக்கான காலநிலையை முன்கூட்டியே அறிவித்துவிடுகிறது. எங்கே மழை பெய்யும், எங்கே வானம் பிரகாசமாக இருக்கும் எத்தனை செல்சியஸ் பாகையில் வெப்பதட்ப நிலைமைகள் எந்தெந்த மாகாணங்களில் நிலவும் என்பதைக் கணித்துச் சொல்லிவிடுகிறார்கள். கனடா வாழ்மக்கள் அதற்கேற்றவாறு தமது அன்றாட செயற்பாடுகளுக்கான நிகழ்ச்சிநிரல்களைத் தயாரித்துக்கொள்கிறார்கள்.

காலநிலை சாதகமான, குளிர் அதிகம்இல்லாத ஒருநாளில் நாங்கள் நயகரா நீர்வீழ்ச்சியைப் பார்க்கச் சென்றோம்.

கனடாவில் சுற்றுலாப் பயணிகளை அதிகமாக ஈர்ப்பது நயகரா நீர்வீழ்ச்சியாகும். உலகிலேயே

பிரமாண்டமான இந்த நீர்வீழ்ச்சி கடந்த இரண்டு நூற்றாண்டுகாலமாக சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.

இந்த நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்காக நாங்கள் தங்கி யிருந்த ‘பிரம்டன்’ நகரில் இருந்து காரில் புறப்பட்டோம். தம்பி புவனும் மருமகன் கோபியும் எம்மை அழைத்துச்சென்றனர். நாம்சென்ற கார் குயின் எலிசபெத் வீதியால் (Queen Elizabeth High Way) நயகராவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. ஏறத்தாழ நான்கு மணித்தியாலம் பயணிக்கவேண்டியிருந்தது. போகும்வழியில் ‘ரொறன்ரோ யோர்க் சாயி நிலைய’த்தில் சிறிது நேரம் தரித்துநின்றோம். அன்று சாயிபாபா முத்தியடைந்தநாள் என்பதால் பெரிய அளவில் சாயிபாபா பக்தர்கள் அங்கு நிறைந்திருந்தனர். பஜனை மற்றும் தியானம் சொற்பொழிவுகள் நடந்து கொண்டிருந்தன. இந்த வழிபாட்டில் அதிகளவில் தமிழர்கள், குஜராத்தி இனத்தவர், மலையாளிகள், வெள்ளைக்காரர்கள், சிங்களவர் எனப் பல இனத்தவரும் கலந்து கொள்வதைப் பார்க்கமுடிந்தது.

அங்கிருந்து புறப்பட்டுப் போகும்வழி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாகக் காணப்பட்டது. போர்ட் கார் தொழிற் சாலை, ஹமில்டன் இரும்பு உருக்குத் தொழிற்சாலை. வைன் முந்திரிகைப் பழச்சாறு உற்பத்தித் தொழிற்சாலை போன்றவற்றைக் காணமுடிந்தது. அவற்றை அடுத்து வீதியோரக் கிராமங்கள் பலவற்றைக் காணக்கூடியதாக இருந்தது. அங்கு பரந்த வயல்கள், சோளப்பயிர்கள், அப்பிள் தோட்டங்கள், பீச்பழமரங்கள், காய்கறித் தோட்டங்கள் பலவற்றைக் காணமுடிந்தது. கனடாவின் செல்வவளத்தை இவை பறைசாற்றிநின்றன.

அமெரிக்கா, கனடா நாடுகளின் எல்லையைப் பிரிப்பதாக நயகரா நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. நாங்கள் அங்குசென்ற வேளை மப்பும் மந்தாரமுமாக இருந்தது. காரை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு நயகராவை தூர இருந்து பார்த்தவாறே அதை நோக்கி நடந்தோம். அந்த நதியின் பிரமாண்டமும் ‘சோ’ என்ற

இரைச்சலுடன் பாய்ந்துவரும் கம்பீரமும் எம்மைப் பிரமிக்க வைத்தன. அருகே நெருங்கியபோது உயரத்திலிருந்து கீழே விழுவதனால் ஏற்படுகின்ற நீராவி மெல்லிய மேகம்போல மிதந்து கொண்டிருந்தது. வெண்பஞ்சு மேகங்களாகத் தெரியும் நீராவித் துளிகளும் தூவானம் போன்று தெறித்துக் கொண்டிருந்தன. ஆஹா! அழகோ அழகு! நான் மெய்ம்மறந்து நின்றுவிட்டேன். அந்த அழகுக்காட்சியை வார்த்தைகளால் வடித்துவிடமுடியாது.

நீர்வீழ்ச்சிக்கு அருகே உள்ள பெருந்தெருவில் பக்க மாக உள்ள நடைபாதையில் உறுதியான ஐந்தடி நீளக் கொங்கிறீட் தூண்கள் எழுப்பி கம்பிகளினால் தடுப்புவேலி அமைத்திருந்தார்கள். யாரும் தவறி விழுந்துவிடாமல் இருப்ப தற்கான பாதுகாப்பு நடவடிக்கைதான் அது. கம்பிவேலியை ஒட்டினாற்போல நின்றவர்கள் நீர்வீழ்ச்சியின் ஓசையையும் அதுதரும் அழகுக்கோலங்களையும் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தனர். மலைப்பாறையின் மேலிருந்துவிழும் நீரின் பேரிரைச்சல் பலமைல் தூரத்துக்குக் கேட்கிறது.

இந்த நயகரா நீர்வீழ்ச்சியைப் பார்க்க ஆண்டுதோறும் இரண்டுகோடி மக்கள் வருகிறார்கள் என்று ஒரு கணிப்புக் கூறுகிறது. இது உலகிலேயுள்ள அருங்காட்சிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்தப் பேரருவி கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள எல்லையில் ஓடும் நயகரா என்ற 56 கிலோ மீற்றர் நீளமான ஆற்றின் பாதித் தொலைவில் அமைந்துள்ளது. இது இரண்டு பெரிய அருவிகளைக் கொண்டது. சுமார் 85 வீதம் நீர் கனடாவில் உள்ள 'ஹோஸ்ஷு' என ஆங்கிலத்தில் வழங்கப்படும் குதிரைலாட வடிவிலான அருவியிலும் மீதி அமெரிக்கப் பகுதியில் உள்ள அமெரிக்கன் அருவியிலும் விழுகிறது. கனடா பகுதியில் உள்ள குதிரைலாட அருவி 792 மீற்றர் அகலம்கொண்டது. நயகராப் பேரருவியில் ஆறு மில்லியன் கன அடிக்கும் அதிகமான நீர் ஒவ்வொரு நிமிடமும் பாய்ந்து செல்வதாகக் கணக்கிட்டுள்ளார்கள்.



நயகரா நிர்வீழ்ச்சி சுமார் 12000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது என்றும் இப்பொழுது உள்ள இடத்திலிருந்து 11கி.மீ. தொலைவில் அப்பால் இருந்ததாகவும் கூறுகிறார்கள்.

அழகிற்குப் பெயர்போன நயகரா நீர்வீழ்ச்சியின் நீர் மின்சாரத்திற்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குமான ஒரு பெறுமதிமிக்க இயற்கை வளமாகும். இந்த நீர் வீழ்ச்சியிலிருந்து 40 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி பண்ணப்படுகிறது. இரண்டு பெரிய மின்நிலையங்கள் இந்த மின் உற்பத்தியை மேற்கொள்கின்றன. நீரோட்டத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் மின்சாரம் ஆகையால் சுற்றுச்சூழலுக்கு பெருங்கேடு விழைவதில்லை.

இந்த நயகரா நீர்வீழ்ச்சியைவிட உயரமான நீர்வீழ்ச்சி வெனிசுலா என்ற நகரில் உள்ள 'தேவைதை' அருவியாகும். இது 979 மீட்டர் உயரம்கொண்டது. ஆனால் அது குறைந்த கொள்ளளவு நீரையே தருகிறது. நயகரா அருவியின் உயரமும் கொள்ளளவும் சேர்ந்தே அதற்கு உலகப் புகழைக் கொடுக்கிறது.

இந்த அருவியின் அருகேசென்று பார்ப்பதற்கு 'மெயிட் ஒ.்.ப் த மிஸ்ற்' என்னும் படகுச்சேவை உள்ளது. சுற்றுலாப் பயணிகள் அந்தப் படகுச்சேவையைப் பாவித்து அருவியின் மிகஅருகில் சென்று பார்வையிட முடியும். இந்தப் படகோட்டம் மிகப்பிரபலமானது. 1846ஆம் ஆண்டு முதலே இந்தப்படகுச் சேவை இடம்பெறுவதாக அறியமுடிகிறது. இதுவரை காலத்தில் இந்தப் படகுச்சேவையில் பயணித்தவர்களில் 'றோகர் வூட்வாட்' என்ற ஏழு வயதுச் சிறுவன் 1960ஆண்டில் படகு விபத்தின் காரணமாக அருவிக்குள் வீழ்ந்து நீரில் அடித்துச் செல்லப்பட்டான். அப்போது வேறொரு படகில் வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் காப்பாற்றப் பட்டதான செய்தி, அறிவித்தல் பலகையொன்றில் காணக் கூடியதாக இருந்தது. விபத்துக்குள்ளான படகோட்டி மரணமடைந்துவிட்டதாகவும் அந்தச்செய்தி கூறுகிறது.

இங்கே 'வானவில் பாலம்' என்ற பெயரில் அமைந்த பாலம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இந்தப் பாலம் நயகரா அருவியின் அருகில் உள்ளது. இப்பாலம் கனடாவையும் அமெரிக்காவையும் இணைக்கிறது. இந்தப் பாலத்தின் நடுவே கடைகளும் உள்ளன. அமெரிக்காவுக்கான விசா இருந்தால் அந்தப் பாலத்தின் வழியாக அமெரிக்காவுக்குள் நடந்து சென்றுவிடலாம். அத்தோடு அமெரிக்கா பக்கத்தில் உள்ள நயகரா வீழ்ச்சியையும் கண்டுமகிழலாம்.

இந்த அருவியைப் பார்க்க கோடைகாலத்தில் காலை மாலை என இருபொழுதுகளிலுமே அதிக பார்வையாளர்கள் வருகிறார்கள். கனடா நாட்டிலுள்ள நயகராவின் பகுதியில் வெள்ளொளிகளை அருவியின் இரண்டு பக்கங்களிலுமிருந்து பாய்ச்சுகிறார்கள். இது வழக்கமாக நள்ளிரவுவரை நீடிக்கிறது.

இந்த நீர்வீழ்ச்சியின் துமிகளினூடாக சூரிய ஒளி பாயும்போது உண்டாகும் பல அற்புதமான வண்ணக் கோலங்களையும் வானவில்களின் எழிற்கோலங்களையும் காணமுடிகிறது.

நீர்வீழ்ச்சியின் உள்ளே சென்று பின்புறத்தில் இருந்து நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்கு சுரங்கப்பாதைகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்பாதைகளில் கிளைப்பாதைகளும் உள்ளன. அந்தப் பாதைகளில் உள்நுழைந்துசென்று பல்வேறு நிலைகளில் நீர்வீழ்ச்சியைப் பார்த்து இரசிக்க முடிகிறது.

நயகரா நீர்வீழ்ச்சிக்கு அருகேயும் தென்புறத்து நகர்ப்பகுதியிலும் சுற்றுலாப்பயணிகள் தங்குவதற்கு பலஹோட்டல்கள் உள்ளன. அங்கே விளையாட வசதியான புற்தரைகள், நிழல்மரங்கள், பூஞ்செடிகள் போன்றவற்றோடு கசினோ கிளப்புகள், உணவுச்சாலைகளும் இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் பலரும் சிலநாட்கள் அந்த ஹோட்டல்களில் தங்கியிருந்து நயகரா நீர்வீழ்ச்சியை முழுமையாக இரசித்துச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

நயகராவின் அருகே சில கிலோமீட்டர் தூரத்தில் அமெரிக்கா வுக்குச் செல்லும் தெருப்பாதை உள்ளது. அதேபோன்று காட்டுப்பாதை வழியாகவும் அமெரிக்காவிற்குள் நுழைந்து விடமுடியும். வீசாஇல்லாமல் அக்கரைக்குச் செல்வது சட்டப்படி குற்றமாகும்.

# 08

## அற்புதக் காட்சிகள் நிறைந்த நயகரா தாவரப் பூங்காவில் ஆச்சரியம் தரும் வண்ணத்துப் பூச்சிகள் வளர்ப்பகம்!

நயகரா நீர்வீழ்ச்சியைப் பார்த்து விட்டுத் திரும்பும் வழியில் சுமார் 10 மைல் தூரத்தில் நயகரா தாவரப்பூங்கா இருக்கிறது. இந்தப் பூங்காவும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முக்கிய இடமாகும்.

99 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இந்தப்பூங்கா 1936ஆம் ஆண்டில் தோட்டக்கலை பயிலும் மாணவர் களுக்கான பாடசாலையாக ஆரம்பிக் கப்பட்டதாம். அந்தப்பாடசாலை தற்போது இந்தத் தாவரப் பூங்காவில் ஓரிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தத் தாவரப்பூங்காவில் வெவ் வேறு தோப்புகளாக மருத்துவ மூலிகைச்செடிகள் வளர்க்கப்படு கின்றன. இன்னொரு பகுதியில் தேவதாரு (Pine) ஊசியிலை மரங்கள் *(Fir)* ‘எலும்’, மற்றும் ‘மாப்பிள்’ ஆகிய பெயர்களைக்கொண்ட மரங்களைக் காணமுடிகிறது. இன் னோர் பகுதியில் மரப்பலகைத் தேவைக்கேற்ற மரங்கள் கூட்ட மாகக் காணப்படுகின்றன. பிறி தொரு பகுதியில் விவசாயப் பயிர் கள் காணப்படுகின்றன. இங்கு




தாவரங்களின் வாழ்க்கை வட்டம் மற்றும் தொகுப்பு முறைப் படி அமைந்த தாவரங்களின் தோப்புகள் அவற்றிற்கான விளக்கப்பட்டியல்கள் போன்றவற்றைக் காணமுடிகிறது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெவ்வேறுவகையான மரங் களையும் தாவரங்களையும் இங்கு பார்க்கமுடியும் என அறியமுடிந்தது.

இங்குள்ள ரோஜாத்தோட்டம் உலகப்புகழ் பெற்றது. ரோஜாத்தோட்டத்தின் நடுவே ஒரு நீர்த்தொட்டியை அமைத்து அந்த நீர்த்தொட்டியின் நடுவில் ஓர் நீர்த்தாரையிலிருந்து நீரை சீறியடிக்க வைத்துள்ளார்கள். பார்ப்பவர்களைப் பரவச மூட்டும் 2400 வகையான ரோஜாச்செடிகள் விதம்விதமாகப் பூத்துக்குலுங்குவதைக் காணமுடிகிறது. சில செடிகளில் கொத்துக்கொத்தாகப் பூக்கள் மலர்ந்து செடிகளை மூடியிருந்தன. வெவ்வேறு நிறங்களில் நாம் வாழ்நாளில் கண்டு அனுபவிக்காத அழகிய ரோஜாமலர்களை ஒன்றுசேரக் காணமுடிந்தது. அங்குள்ள ரோஜாப்பாத்திகளில் உள்ள தகவல் பலகைகளில் ரோஜா இனம், நட்ட ஆண்டு போன்ற விபரங்களை எழுதிவைத்துள்ளார்கள்.

**வண்ணத்துப் பூச்சிகள் வளர்ப்பகம்**

தாவரப்பூங்காவின் முக்கிய காட்சிக்கூடமாக விளங்குவது வண்ணத்துப்பூச்சிகள் வளர்ப்பகம். (Butterfly conservatory) இந்த வளர்ப்பகத்தைப் பார்ப்பதற்கு 15 கனடியன் டொலர் செலுத்தி நுழைவுச்சீட்டுப் பெறவேண்டும்.

அதிகூடிய குளிர் அல்லது அதிகூடிய வெப்பநிலை கொண்ட கனடாச் சுவாத்தியம் வண்ணத்துப்பூச்சிகள் வாழ்வதற்கு ஏற்றதல்ல. அதன்காரணமாக கனடா சுவாத்தியத்துக்குள் ஒரு மத்தியதரைச் சுவாத்தியத்தை அதாவது சூடும் ஈரப்பசுமையும் சேர்ந்த 27 பாகை 'செல்சியஸ்' சூட்டைக்கொண்ட சுவாத்திய அமைப்பை செயற்கைமுறையில் ஏற்படுத்தி அதற்குள் வண்ணத்துப் பூச்சிகளை வளர்க்கிறார்கள். இதற்கென குவிமாட அமைப்பில் ஒரு பிரமாண்டமான கண்ணாடி மாளிகையை அமைத்துள்ளார்கள். இந்தக் கண்ணாடிமாளிகை 11000 சதுரஅடி பரப்பினைக்கொண்டது. அதன் உள்ளே 590 அடி நீளமுள்ள பாதை அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்ணாடி மாளிகையை 'கிறீன்ஹவுஸ்' எனப் பெயரிட்டுள் ளார்கள். இதுவே வட அமெரிக்காவின் மிகப்பெரிய வண்ணத்துப்பூச்சிகள் வளர்ப்பகமாகும். இந்த வளர்ப்பகம் அங்கு தோட்டக்கலை பயிலும் மாணவர்களது திறந்தவெளி வகுப்பறையாகவும் இயங்குகிறது.

இந்தக் குவிமாட அமைப்பிலுள்ள கண்ணாடி மாளிகையில் ஒரு மணித்தியாலத்தில் 300 பேர்வரை உள்நுழைந்து பார்வை யிடக்கூடிய வசதியிருக்கிறது.

கண்ணாடி மாளிகையின் உள்ளே வண்ணத்துப் பூச்சிகள் விரும்பியுண்ணும் மத்தியதரைச் சுவாத்தியத்தில் வளருகின்ற இலைத்தாவரங்களை மிகநெருக்கமாக சாடிகளில் வளர்க்கிறார்கள்.

வண்ணத்துப்பூச்சிகள் பல்வேறு வண்ணங்கள் கொண்டவை. பெரும்பாலான சமயங்களில் அவை தங்களது சூழலின் நிறத்துடன் இயைந்து தம்மைத் தற்காத்துக்கொள்கின்றன எனவும் அறியமுடிந்தது.




இந்த வண்ணத்துப் பூச்சிகளிள் வளர்ப்பகத்தின் உள்ளே சிறிய குன்றுகள், நீர்வீழ்ச்சிகள் போன்றவற்றை செயற்கையாக அமைத்துள்ளார்கள். அங்குள்ள ஓடைகளில் ஆமைகளும் நத்தைகளும் காணப்படுகின்றன.

வண்ணத்துப் பூச்சிகள் இரண்டு முதல் நான்கு வாரங்களே உயிர்வாழக்கூடியன. இதன்காரணமாக ஒவ்வொரு மாதமும் 3000 வண்ணத்துப் பூச்சிகளை உலகிலுள்ள வண்ணத்துப் பூச்சிகள் வளர்ப்பிடங்களிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள். குறிப்பாக எல்சல்வடோர், பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்தே அதிகளவில் இறக்குமதி செய்வதாக அறியமுடிந்தது.

இவற்றைவிட வண்ணத்துப் பூச்சிகளின் வாழ்க்கை வட்டத்தை பார்வையிடுவதற்கென பெரிய கூடுகளை அமைத்துள்ளார்கள். இங்கு 45000 வண்ணத்துப் பூச்சிகள் வருடம் ஒன்றுக்கு உற்பத்தியாகின்றன என அறியமுடிந்தது. அங்கு நூற்றுக் கணக்கான முட்டை, புழு, கூட்டுப்புழு, பறக்கும்பூச்சி என வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை வெவ்வேறு நிலைகளில் ஒரே நேரத்தில் அருகிலிருந்து பார்க்கும்

அனுபவம் புதுமையானது. வண்ணத்துப்பூச்சிகளை உற்பத்திசெய்யும் பலவேறு உலகநாடுகளிலிருந்து பெருந் தொகையான முட்டைப்புழுக்களை கப்பல்களில் வர வழைத்து அதிலிருந்து வண்ணத்துப்பூச்சிகளை உற்பத்தி செய்கிறார்கள் என்ற செய்தியை அங்குள்ள விளம்பரப் பலகையில் காணமுடிந்தது.

பார்வையாளர்கள் தமது உடல்மீது வண்ணத்துப் பூச்சிகள் வந்து அமரவேண்டுமெனில் அவர்கள் பிரகாசமான உடைகளை அணியவேண்டும் எனவும் வாசனைபொருந்திய திரவங்களை உடலில் பூசிக்கொள்ளவேண்டும் எனவும் மெதுவாக நடந்துசெல்லவேண்டும் எனவும் பரிந்துரை செய்கிறார்கள்.

'அட்வாஸ்மாத்' என்ற வண்ணத்துப்பூச்சி இனம் உலகின் உள்ள வண்ணத்துப்பூச்சி இனங்கள் யாவற்றையும்விட உருவத்தில் பெரிதாக வளரக்கூடியது எனக் கூறுகிறார்கள். இந்தவகை வண்ணத்துப்பூச்சிகள் நமது தோளிலும் உள்ளங் கையிலும் பயமின்றி வந்து உட்காருகின்றன.

பலவேறு நிறங்களில் உள்ள வண்ணத்துப் பூச்சிகளை ஒன்றுசேரப் பார்ப்பதும் அவை எம்மைச் சுற்றிப் பறந்து திரிவதும் ஒருசில எமது உடலில் வந்து உட்காருவதும் மறக்கமுடியாத அனுபவம். சில வண்ணத்துப்பூச்சிகளின் இறக்கைகளில் ஆந்தையின் கண்களைப்போன்ற வடிவம் காணப்படுவது அதிசயம். இதனை அவற்றின் தற்காப்பு உத்தி என்று சொல்கிறார்கள். சில வண்ணத்துப்பூச்சிகள் சிறகடிக்கும்போது சிறகின் கோணத்திற்கு ஏற்ப சிறகின் நிறத்தை மாற்றிக்காட்டுவது அதிசயத்திலும் அதிசயம்!

'மோனார்க்' என்ற வகை வண்ணத்துப் பூச்சி ஆறுமாத காலம் உயிர் வாழக்கூடியதெனவும் கோடையில் அது கனடாவிலும் பின்பு அங்கு குளிர்காலம் ஆரம்பிக்கும்போது தெற்குநோக்கிப் பயணித்து அமெரிக்காவுக்குச் சென்று பின்னர் மெக்சிக்கோவரை பல கிலோமீட்டர் தூரம் பயணிப்பவை என்ற தகவல் அங்கு காணப்படுகிறது.

இந்தச் வளர்ப்பகத்தின் அப்பால் சென்றால் அங்கு ஒரு தடாகம் அமைந்துள்ளது. அந்தத் தடாகத்தின் அருகே ஒரு பிரமாண்டமான 'மலர் மணிக்கூடு' (Floral Clock) காணப்படுகிறது. இந்த மணிக்கூடு நிலமட்டத்திலிருந்து நான்கு அடி உயரத்தில் கிடையாக அமைந்துள்ளது. இதன் முகப்புப் பகுதியை பூத்துக் குலுங்கும் பூஞ்செடிகளால் (Carpet Plants) ஆக்கியுள்ளார்கள். 16000 எண்ணிக்கை கொண்ட அந்தப் பூஞ்செடிகளில் பல நிறங்களில் பூக்கள் மலர்ந்து அழகூட்டுகின்றன. அந்த மணிக்கூடு 15 நிமிடத்திற்கு ஒருமுறை ஓசை எழுப்புகிறது.

அழகும் அற்புதக்காட்சிகளும் நிறைந்த இந்தத் பிரமாண்டமான தாவரப்பூங்காவை வழிகாட்டியின் உதவியுடன் குதிரை வண்டியில் அமர்ந்து சுற்றிப்பார்ப்பதற்கும் வசதி இருக்கிறது.

# 09

## இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட முதலாவது கனடா பாராளுமன்ற உறுப்பினர் தமிழில் ஆற்றிய பாராளுமன்றக் கன்னிப்பேச்சு!

நாங்கள் தங்கியிருந்த ரொறன்ரோ நகரில் இருந்து ஒட்டா வாவுக்கு சுற்றுலாப்பயணிகளோடு இணைந்து பஸ்ஸில் பயணம் செய்தோம். ஏறத்தாழ ஐந்து மணிநேரப் பயணத்தின் பின்னர் ஒட்டாவா நகரைச் சென்ற டைந்தோம்.

ஒட்டாவா நகர்பற்றி சுற்றுலாத் தகவல் மையத்திலிருந்து பெற்றுக் கொண்ட கையேட்டில் பின்வரும் தகல்களைப் பெறக்கூடியதாக இருந்தது. அத்தோடு ஒட்டாவா நகரி லேயே கனடா பாராளுமன்றமும் அமைந்திருப்பதால் கனடாவில் நடைமுறையில் இருக்கும் அரசி யல் முறைமை பற்றியும் வாசித்து அறிந்துகொண்டேன்.

ஒட்டாவாநகர், கனடா நாட்டின் நான்காவது பெரிய நகரமாகும். இது தெற்கு ஒன்டாரியோவின் கிழக்குப் பகுதியில் ஒட்டாவா ஆற்றின் தென் கரையில் அமைந்துள்ளது. ஒட்டாவா ஆறு ஒன்ராறியோ, கியூபெக் ஆகிய மாகாணங்களில் ஓடுகிறது. இந்த ஆறு பெரும்பாலும் இவ்விரு மாகாணங்களின் எல்லையாகவும்

அமைந்துள்ளது. இந்த ஆற்றின் நீளம் 1271 கிலோ மீற்றர். ஒட்டாவா நகரில் ஒட்டாவா, காட்டினேயூ, ரிடியூ ஆகிய மூன்று நதிகள் கூடுகின்றன. ஒட்டாவா தலைநகர் 4700 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது.

கனடாவைப் பொறுத்தவரையில் ஒட்டாவாநகர் சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த நகரமாகவும் விளங்குகிறது. 15ஆம், 16ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஆறுகள் மூலமாகவே போக்குவரத்து பிரதானமாக இடம்பெற்று வந்தது. வீதிகள் புகையிரதப்பாதைகள், விமானங்கள் ஆரம்ப மாவதற்குமுன் மக்கள் பிரயாணம் செய்யவும் பொருட் களைக் கொண்டுசெல்லவும் நீர்வழிகள்தான் உதவின. புதிய இடங்களைக் கண்டுபிடிக்கும் ஆர்வலர்கள் மற்றும் வர்த்த கர்கள் ஆறுகள் மூலமாகவே பிரயாணம் செய்தார்கள். பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையில் இடம்பெற்ற நெப்போலிய யுத்தத்தின்போது கப்பல் கட்டும் மரங்கள் இங்கிலாந்திற்கு அதிகளவில் தேவைப்பட்டபோது ஒட்டாவா பள்ளத்தாக்கில் இருந்து தேவையான மரங்கள் ஆறுகள் மூலமாகவே அனுப்பப்பட்டன. 1812ஆம் ஆண்டு பிரிட்டனுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது 'ரிடியூ' நதிமூலமாக போக்குவரத்துச் செய்வதே பாதுகாப்பானதாகக் கருதப்பட்டது. ஆறுகள் மூலமான போக்குவரத்து அதிகரிப்பின் காரணமாக ஒட்டாவா துரிதகதியில் வளர்ச்சி அடைந்தது.

ஒட்டாவா என்பது உள்ளூர் மொழியில் 'அடவே' என்ற சொல்லில் இருந்து வந்துள்ளது. இதன்பொருள் வணிகமாடல் என்பதாகும். ஒட்டாவா கனடாவின் அரசியலுக்கும் தொழில் நுட்பத்திற்கும் மையமாக விளங்குகிறது.

கனடாவில், படித்தவர்கள் அதிகமாக வாழும் நகரமாகவும் உயர்ந்த வாழ்க்கைத் தரமும் குறைந்த வேலையற்றோர் தொகையும் கொண்ட நகரமாகவும் இது விளங்குகிறது. இங்கு பல உயர்கல்வி, ஆய்வு மற்றும் பண்பாட்டு மையங்கள் அமைந்துள்ளன. ஒட்டாவா நகரில் உள்ள 'ரிடோ' கால்வாய் உலகப் பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1857ஆம் ஆண்டு விக்ரோறியா மகாராணியால் ஒட்டோவா தலைநகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இவர் தற்போதுள்ள இரண்டாவது எலிசபெத் மகாராணியின் பூட்டியாவார்.

கனடாவின் அரசியல் அமைப்புப்பற்றி விளங்கிக் கொள்ளல் இங்கு முக்கியமானது.

பிரித்தானிய பாராளுமன்றத்தின் 'வெஸ்ட் மினிஸ்டர் முறைமையைப் பின்பற்றி இயங்கும் கனடா, ஒரு கூட்டாட்சி அரசாகும். சனநாயக பாராளுமன்ற முறைமையையும், யாப்பில் முடியாட்சியையும் கொண்டதே கனடிய அரசாங்க முறைமை யாகும்.

மகாராணி இரண்டாவது எலிசபெத், கனடாவின் சம்பிரதாய பூர்வமான நாட்டுத் தலைவியாக இருக்கிறார். மகாராணியைப் பிரதிநிதிப்படுத்துபவராக ஆளுநர் இருப்பார். அவர் மகா ராணியின் சார்பாக மரபுரீதியான சில முக்கிய கடமை களை ஆற்றுவார்.

கனடா அரசாங்கம் மூன்று படிநிலைகளில் இயங்குகின்றது. அவை மத்தியஅரசு, மாகாணங்களும் பிரதேசவாரியான அரசாங் கங்களும், மாநகரசபைகள் என்பனவாம். பொறுப்புகள் யாவும் இந்தமூன்று படிநிலை அரசாங்கங்களுக்கிடையே பகிர்ந்த ளிக்கப்பட்டுள்ளன.

மத்தியஅரசே கனடாவை ஒரு நாடு என்ற வகையில் முன்னிறுத்துகின்றது. குறிப்பாக கூட்டரசுநிர்வாகம், தேசிய பாதுகாப்பு, வெளியுறவுக்கொள்கை, ஏனைய நாடுகளுடனான வியாபாரம், பிரஜாவுரிமை, குடிவரவு ஆகியவற்றை மத்திய அரசு கவனிக்கிறது. முழு நாட்டையும் பாதிக்கக்கூடிய விடயங் களை இது மேற்பார்வை செய்கிறது.

மாகாண அரசுகள் உள்ளூர் அரசுகளின் அதிகாரங்களையும் கடமைகளையும் வரையறைசெய்கின்றன. சுகாதார நலன் பேணல், பாடசாலைகள், கல்லூரிகள், தொழில் வாய்ப்பு, போக்கு வரத்து, வீட்டுவசதிகள், குடும்பங்களுக்கான சிலசேவைகள், திருமண பிறப்புச் சான்றிதழ், சிறுவர் நலசேவைகள் சிவில் குற்றவியல் நீதிச்சேவைகள் போன்றவற்றிற்கு மாகாண அரசுகள் பொறுப்பாக இருக்கும்.

மாநகராட்சியானது, நகரங்கள், கிராமங்கள் போன்றவற்றை நிர்வாகம் செய்யும். தீயணைப்பு, பொலிஸ் சேவைகள், சுத்தமான நீர், பொதுச்சுகாதாரம், பூங்காக்களைப் பராமரித்தல் வாசகசாலைகளை முகாமைத்துவம்செய்தல் போன்ற விடயங்களை மாநகராட்சி நிர்வகிக்கின்றது.

மக்களால் தேர்தல் மூலம் நேரடியாகத் தெரிவு செய்யப் பட்ட 308 உறுப்பினர்களைக்கொண்ட மக்கள் அவையே கனடிய பாராளுமன்றத்தின் முக்கியபிரிவு ஆகும்.

கனடாவில் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு கனேடியப் பிரஜையாகவும் 18வயதுக்குக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு வாக்களிக்கத் திட்டமிட்டுள்ள நகரத்தில் வசிப்ப வராகவும் இருத்தல்வேண்டும்.

கனடா மத்தியஅரசு பாராளுமன்றத்திற்கு முதன்முதலில் தெரிவுசெய்யப்பட்ட இலங்கையைப் பூர்வீகமாகக்கொண்ட தமிழ்ப்பெண்மணி ராதிகா சிற்சபேசன். இவர் தனது பாராளுமன்ற கன்னிப்பேச்சை தமிழில் ஆற்றிய பெருமைக் குரியவராவார்.

இவர் 2011 மே 2ஆம் திகதி நடந்த தேர்தலில் 'ஸ்கார்பரோ - ரூச் ரிவர்' என்ற தொகுதியில் புதிய சனநாயகக் கட்சியின்



சார்பில் போட்டியிட்டு 18,856 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். இவரே கனடா நாடாளுமன்றம் சென்ற முதல் தமிழர் ஆவார்.

இலங்கையில் யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தை பிறப்பிட மாகக்கொண்ட ராதிகா, தனது ஐந்தாவது வயதில் கனடா வுக்குக் குடிபெயர்ந்தார். இவர் சிறுவயதிலேயே அங்குள்ள தமிழ் கற்பிக்கப்படும் பாடசாலையில் சேர்ந்து தமிழைக் கற்றார். ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் பட்டப்படிப்பை மேற்கொண்ட இவர், பின்னர் தொடர்ந்து 'கார்ல்டன்' பல்கலைக்கழகத்தில் வர்த்தகவியலில் இளமாணிப் பட்டத்தைப்பெற்றார். அதன்பின்னர் 'குயின்ஸ்' பல்கலைக்கழகத்தில் முதுமாணிப்பட்டத்தையும் பெற்றார். இவர் ரொறன்ரோ பல்கலைக்கழக தமிழ்மாணவர் ஒன்றியத்தின் தலைவராகவும் செயற்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

ராதிகா, புதிய சனநாயகக் கட்சியில் 2004ஆம் ஆண்டில் இணைந்தார். அன்றில் இருந்து அக்கட்சியின் பல செயற் பாடுகளில் தீவிரமாகப் பங்குபற்றி வருகிறார்.

இவரை அடுத்து மத்தியஅரசு பாராளுமன்றத்திற்கு 2015இல் தெரிவுசெய்யப்பட்ட இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர் திரு. ஹரி ஆனந்தசங்கரி ஆவார். இவர் ஸ்காபரோ றூஜ்பார்க் தொகுதியில் தாராண்மைவாதக் கட்சியில் போட்டி யிட்டு வெற்றிபெற்றவர் 2006ஆம் ஆண்டில் Osgoode Hall Law கல்லூரியில் சட்டம் பயின்றவர். உலகளாவிய நிலையில் மனித உரிமைக்காகக் குரல்கொடுக்கும் வழக்கறிஞராகத் தன்னை வளர்த்துக்கொண்டவர். மனித உரிமை தொடர்பாக ஐக்கிய நாடுகள்சபையின் செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக்கொண்ட இவர், கனடாவில் சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்பவர்.

மேலே குறிப்பிட்ட இருவர் மட்டுமே இதுவரை காலத்தில் கனடா பாராளுமன்றம் சென்ற தமிழர்களாவர்.

# 10

## கனடா பாராளு மன்றத்தின் உள்ளும் புறமும் அற்புதக் காட்சிகள்

கனடாவின் தலைநகர் ஒட்டாவா விற்கு வருபவர்கள் யாபேருமே முதலில் பார்க்க விரும்புவது கனடா பாராளுமன்றத்தைத்தான். இந்தப் பாராளுமன்றத்தில் சுற்றுலாப் பயணிகள் பார்த்து மகிழக்கூடிய பல அற்புதக்காட்சிகள் அமைந்துள் ளன. அதன்காரணமாக பாராளு மன்றத்தை ஒரு சுற்றுலாமையம் போலவும் அமைத்துள்ளார்கள். பாராளுமன்றத்தைச் சுற்றிக் காட்ட வழிகாட்டிகள் இருக்கி றார்கள்.

20 பேருக்கு ஒரு வழிகாட்டி என்ற கணக்கில் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச்சென்று ஆங்கிலத்திலும் பிரஞ்சு மொழியிலும் விளக்கம் தருகிறார்கள்.

கனடா பாராளுமன்ற வளாகம் ‘ப’வடிவிலான கட்டடத் தொகுதி களால் ஆனது. கிடைக்கோடுபோல இருப்பது பாராளுமன்றம். இரண்டு பக்கங்களிலும் இருப்பவை அரசுச் செயலகங்களாகும். கனடா பாராளு மன்றத்தைப் பார்வையிடுவதற்கு உள்நுழையும்போது பாதுகாப்புச் சோதனைகள் செய்கிறார்கள்.

தண்ணீர் போத்தலைத்தவிர வேறுபொருட்கள் எதனையும் உள்ளே கொண்டுசெல்ல அனுமதியில்லை.

உள்ளே வழிகாட்டி எம்மை அழைத்துச்சென்று விளக்கம் தருகிறார். இந்தப் பாரளுமன்றக் கட்டிடடம் விக்டோரியா மகாராணியின் ஆணைப்படி கட்டப்பட்டதாகவும் 1860இல் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணவேலைகள் 1876இல் நிறைவடைந்ததாகவும் அறியமுடிந்தது. இக்கட்டடத்தில் 1916ஆம் ஆண்டில் பாரிய தீவிபத்து ஏற்பட்டதாகவும் அதன் பாதிப்புத் தெரியாமல் சீரமைத்துள்ளார்கள் எனவும் கூறினார்கள். அதனைத் தொடர்ந்து கட்டடத்தின்மீது ஓர் உயர்ந்த கோபுரத்தை நிறுவி அதற்கு ‘அமைதிக்கோபுரம்’ என்று பெயரிட்டுள்ளார்கள். பாராளுமன்றக்கட்டடம் ஒன்பது தளங்களைக் கொண்டது. இத்தளங்களுக்குச் செல்வதற்கு மின்தூக்கி வசதிகள் உள்ளன.

பாராளுமன்றக் கூட்டத்தொடர் அரங்கம் தனியழகுடன் காட்சிதருகிறது. அங்கு சுற்றிவர அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள் மரவேலைப்பாடுகள் அந்த மண்டபத்துக்கு அழகூட்டு கின்றன.

அடுத்து நாம் பாராளுமன்ற நூலகத்தைப் பார்வையிட்டோம். இங்கு 60,000 நூல்கள் இருப்பதாக அறியமுடிந்தது. அவற்றைத் தங்க நிறத்தில் ஒளிரும் மரப்பேழைகளில் அழகாக அடுக்கி வைத்துள்ளார்கள். நூலகத்தின் நடுப்பகுதியில் வெண்பளிங்கில் அமைந்த விக்டோரியா மகாராணியின் சிலை பார்ப்பவர்களைக் கவரும்வகையில் அமைந்துள்ளது.

வெவ்வேறு காலகட்டங்களில் பணிபுரிந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், ஆளுநர்கள் ஆகியோரின் படங்களை காட்சிப்படுத்தும்வகையில் அமைத்து அவர்களைப்பற்றிய வாழ்க்கைக்குறிப்புகளையும் அங்கு எழுதிவைத்துள்ளார்கள்.

மின்தூக்கியில் மேலேசென்றால் அமைதிக்கோபுரத்தை அடையமுடிகிறது. இந்த அமைதிக்கோபுரம் 92 மீற்றர் உயரமுடையது. அங்கு உச்சியில் நாற்புறமும் அமைந்

திருக்கும் பிரமாண்டமான கடிகாரங்கள் அந்த நகரத்துக்கே நேரம்சொல்வதுபோல ஒலியெழுப்புகின்றன. அங்கிருந்து ஒட்டாவா நகரின் அழகை பறவைப்பார்வையாக (Bird Eye View) பார்க்கமுடிந்தது. ஒட்டாவா ஆறு கரைபுரண்டோடும் காட்சி, அந்த ஆற்றின் மேலால் குறுக்காக அமைந்த பாலங்கள், உயர்ந்த மாடிக்கட்டடங்கள், தூரத்தே தெரியும் அமெரிக்கத் தூதரகம், ஒட்டாவா நகரின் தெருக்கள், அவற்றிலே காணப்படும் வாகனப் போக்குவரத்துகள் எனப் பலவற்றையும் காணமுடிந்தது.

பனிக்காலத்தில் ஒட்டாவாஆறு கட்டியாக மாறிப் பனிச்சறுக்கு நிலமாக மாறிவிடும் என்றும் அதன் கரையோர நடைபாதைகளும் வாகனச்சாலைகளும் பனியால் நிரம்பிக் கிடக்கும் என்றும் வழிகாட்டி கூறியபோது அக்காட்சியைக் கற்பனையில்தான் பார்க்கமுடிந்தது.

அமைதிக் கோபுரத்திலிருந்து இறங்கிக் கீழேவந்தால் கட்டடத்தின் ஒரு பகுதியாக இருக்கும் போர்வீரர் நினைவு மண்டபத்தைக் காணமுடிகிறது. அங்குள்ள சுவர்களில் மகாயுத்தங்கள் பற்றிய விபரக்குறிப்புகளை பொன்னிறத் தகடுகளில் பொறித்து வைத்துள்ளார்கள். அந்த அறையில் பெரிய புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்தப் புத்தகங்களில் நாட்டுக்காக போரில் உயிர்நீத்த போர் வீரர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

அமைதிக்கோபுரத்தின் உச்சியில் கனடா தேசியக்கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தது. அக்கொடிபற்றிய வரலாற்றையும் வழிகாட்டி விளக்கத் தவறவில்லை.

கனடாவின் தேசியக்கொடி 1965ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது. இந்தக் கொடியில் கனடா காடுகளில் அதிகமாகக் காணப்படும் ‘மோப்பில்’ மரத்தின் இலை இலச்சினையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. மோப்பில் மரத்தில் இருந்து தித்திப்பான தேன்பாணி கிடைக்கிறது. நீண்டகாலமாக மோப்பில் இலை கனடாவுடன் தொடர்புகொண்ட சின்னமாக



விளங்கி வந்துள்ளது. 1868ஆம் ஆண்டு ஒன்ராறியோ மற்றும் கியூபெக் மகாணங்களின் மரபுரிமைச் சின்னமாக மோப்பில் இலை போற்றப்பட்டு வந்துள்ளது. இரண்டாவது உலகமகா யுத்தத்தின்போது மோப்பில் இலை கனடியப் படைகளின் சிறப்புக் குறியீடுகளில் இடம்பெற்றுள்ளது. தேசியக்கொடியில் மோப்பில் இலை சிவப்பு நிறத்தில் அமைந்துள்ளது.

வெளியே வந்ததும் முகப்பில் அமைந்துள்ள ஓர் அணையாச் சுடரினைப் பார்வையிட்டோம். அது ஓர் அதிசயச்சுடராகவும் எமக்குத் தோன்றியது. அங்குள்ள வட்டவடிவமான தொட்டியில் தண்ணீர் ஒரு ஊற்றிலிருந்து பெருக்கெடுக்கிறது. அதே ஊற்றிலிருந்து தீச்சுடர் கொளுந்துவிட்டு எரிகிறது. நீரும் நெருப்பும் தோழமை கொள்ளும் காட்சி அது. இந்தச் சுடரை 'நூற்றாண்டுச்சுடர்' (Centennial Flame) என்று பெயரிட்டுள்ளார்கள். இந்தச்சுடர் கனடாவின் நூற்றாண்டுப் பிறந்ததின விழாவின்போது முதன்முதலில் 1967ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி ஏற்றிவைக்கப்பட்டதாம். அன்றுமுதல் இத்தீபம் அணையாச்சுடராக எரிந்துகொண்டிருக்கிறது. இந்தச்

சுடர் எரிவாயுவின் உதவியுடன் எரிவதன் காரணமாக பனிக்காலத்தில் நீர்த்தாரையில் உள்ள நீரும் சூடேற்றப்பட்டு கட்டியாவதில்லை என அறியமுடிந்தது. அதனைச் சூழ வுள்ள வட்டவடிவமான நீர்த்தொட்டியில் கனடாவின் 13 மாகாணங்களைக் குறிக்கும் உலோகத்தினாலான கேடயங்கள் காணப்படகின்றன.

இந்த அணையாச்சுடரைச் சுற்றியுள்ள நீர்த்தாரையில் பாராளுமன்றத்தைப் பார்வையிடவரும் சுற்றுலாப்பயணிகள் சில்லறைக் காசுகளை வீசுகிறார்கள். அப்படி வீசுவதால் அவர்களுக்கு அதிர்ஷ்டம் ஏற்படும் என்பது ஐதீகம். அங்கு வீசப்பட்ட சில்லறைக்காசுகள் காலத்துக்குக்காலம் வெளியே எடுக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டபின் அரச வங்கியில் வைப்புச் செய்யப்படுகிறது எனவும் பின்னர் உரிய முறையில் பயன்படுத்தப்படுகிறது எனவும் அறியமுடிந்தது.

கனடாவின் நாணயம் கனடிய டொலர். ஒரு கனடிய டொலர் 100 சதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு சத உலோக நாணயத்தை லூணி (Loonie) என்கிறார்கள். இரண்டு டொலர் உலோகநாணயத்தை ரூணி (Twonie) எனக் குறிப்பிடுகிறார்கள். தற்போது ஒருசத நாணயம் அதிகம் புழக்கத்தில் இல்லை. எம்மிடமிருந்த ஒரு ரூணி நாணயத்தையும் இரண்டு டொலர் பெறுமதியான ஒரு நாணயத்தையும் அந்த நீர்த்தொட்டியில் நான் வீசி எறிந்தேன். அந்த நாணயங்களை இலங்கைக் காசாக மாற்றினால் ஏறத்தாழ 300 ரூபா கிடைத்திருக்கும் என்பது அப்போது என் மனத்திரையில் ஓடியது.

பாரளுமன்றத்தின்முன் நின்று அந்த அணையாச் சுடரைப் பார்வையிட்டபோது எனக்குப் பழைய நினைவுகள் சில மனதில் தோன்றின. முன்னர் பாரிஸ் நகரிலும், இந்தியாவின் டெல்கி நகரிலும் பார்வையிட்ட அணையாத் தீபங்கள் நினைவில் வந்தன. பாரிஸ் நகரில் 1806இல் நெப்போலியன், தான்பெற்ற வெற்றியின் நினைவாக ஒரு வெற்றிவளைவை அமைத்தான். அந்த வெற்றிவளைவின் அருகே ஒரு கல்லறை இருக்கிறது. அது முதலாவது

உலகமகா யுத்தத்தின்போது உயிர்நீத்த பெயர் தெரியாத போர்வீரர்களின் கல்லறையாகும். இந்தக் கல்லறையின் அருகே ஓர் அணையாத் தீபம் ஏற்றப்பட்டுள்ளது. *1920*ஆம் ஆண்டிலிருந்து இனங்காணப்படாத போர்வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இது எரிந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவில் டில்லியில் உள்ள இந்தியாகேட் நினைவுத் தூபியின் வளைவுப்பகுதியின் கீழேயும் ஒரு சிறிய கோயிலில் அமரஜோதி ஒன்று அணையாமல் எரிந்துகொண்டிருக்கிறது. இது இந்தியா பாகிஸ்தான் போரில் உயிர்நீத்த இராணுவ வீரர்களின் நினைவாக அமைக்கப்பட்டு, இந்தியா கேட்டுடன் இணைக்கப்பட்டது. இங்குள்ள ஜோதி *1971* டிசம்பரிலிருந்து அணையாது எரிந்துகொண்டிருக்கிறது.

கனடா பாராளுமன்றத்தின் முன்னால் நின்றுகொண்டிருந்த போது, பாரிஸ்-டெல்கி ஆகிய நாடுகளில் நான் பார்த்த அணையாச்சுடர்கள் திரைப்படக்காட்சிபோன்று என் மனத் திரையில் ஓடிக்கொண்டிருந்தன.

# 11

## கனடா தலைநகரில் வருடாவருடம் இடம்பெறும் உலகின் மிகப்பெரிய 'ரூலிப்' மலர்விழா

கனடா பாராளுமன்றத்திலிருந்து சிறிது தூரம் நடந்து சென்றால் ஒட்டாவா நகரில் உள்ள 'ரிடோ' (Rideau) என்ற கால்வாயைப் பார்வையிடமுடியும். ஒட்டாவா நகரின் அழகுக் காட்சிகளைப் பார்ப்பதற்கு ஏற்ற இடமாகவும் அதேவேளை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் நவீன பொழுதுபோக்கு விளையாட்டு அம்சம்கொண்ட இடமாகவும் இந்தக் கால்வாய் அமைந்துள்ளது.

இந்தக் கால்வாய் அமைக்கப்பட்டதன் நோக்கம் போர் சார்ந்தது. 1812இல் பிரித்தானியரின் குடியேற்றப் பகுதிகளைக்கொண்ட நாடாக கனடா விளங்கியது. அக்காலத்தில் இடம்பெற்ற போரில் அமெரிக்கா நீர்வழிப் பாதைகளினூடாக உள்நுழைந்து பிரித்தானியரின் ஆட்சிப் பிரதேசங்களைக் கைப்பற்ற முனைந்தது.

அவ்வேளையில் கப்பல் போக்குவரத்துக்கு ஒரு பாதுகாப்பான நீர்வழிப்பாதை பிரித்தானிய ஆட்சியாளருக்குத் தேவைப்பட்டது. அதன்



காரணமாக அமைக்கப்பட்ட நீர்வழிப்பாதையே 'ரிடோ' கால்வாய் ஆகும்.

இந்தக் கால்வாயின் நிர்மாணவேலைகள் 1826இல் ஆரம்பிக்கப்பட்டு 1832இல் நிறைவேறியது. இந்தக் கால்வாய் வெட்டிமுடிந்தபோது போர் முடிந்திருந்தது. எனவே இந்தக் கால்வாய் போர்த்தேவைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை. ஆனாலும் கனடாவின் ஆரம்பகாலகட்ட வளர்ச்சிக்கு இந்தக் கால்வாய் பலவழிகளில் உதவியுள்ளது. வியாபார நோக்கத்திற்காகவும் பயணிகளை ஏற்றிச்செல்வதற்கும் அதிபாரமான பொருட்களைக் கொண்டுசெல்வதற்கும் இந்தக் கால்வாய் உதவியிருக்கிறது. பல நீராவிக்கப்பல்கள்,

கட்டுமரங்கள், சிறிய கப்பல்கள், பாய்க்கப்பல்கள் போன்றவை ஆரம்பகாலங்களில் சேவையில் ஈடுபட்டன.

இந்தக் கால்வாய் 202கிலோ மீற்றர் நீளமானது. 1832இல் திறந்துவைக்கப்பட்ட இந்தக் கால்வாய் இன்று உல்லாசப் படகோட்டிகளின் இடமாகவும், சுற்றுலாப்பயணிகளை படகுகளில் ஏற்றிச்சென்று மகிழ்விக்கும் இடமாகவும் பயன் படுத்தப்படுகிறது.

கனடாவில் இன்றுள்ள மிகப்பழமை வாய்ந்த கால்வாயாகவும் தொடர்ந்து பாவனையில் உள்ள கால்வாயாகவும் இது விளங்குகிறது. இதன் முக்கியத்துவம் கருதி 2007இல் இக்கால்வாயை ‘உலக மரபுரிமைப் பிரதேசமாக’ யுனஸ்கோ நிறுவனம் பிரகடனப்படுத்தியுள்ளது.

212 கிலோ மீற்றர் நீளமான இக்கால்வாயில் 45 இடங்களில் மரக்கதவிலான தடுப்புகள் (Locks) உள்ளன. இந்தத் தடுப்புகளை, தேவைப்படும்போது திறக்கவும் மூடவும் முடியும். இந்தத் தடுப்புகள் மூலம் நீர்மட்டத்தை உயர்த்தியும் தாழ்த்தியும் கப்பல் போக்குவரத்தை அக்காலத்தில் சீர்ப்படுத்தி னார்கள் என்று அறியமுடிந்தது. இந்தத் தடுப்புகள் அமைந்துள்ள பகுதிகளில் அருகே உள்ள புற்தரைகளில் சுற்றுலாப்பயணிகள் தரித்துநின்று வேடிக்கைபார்க்கும் இடங்கள் உள்ளன. சில இடங்களில் தடுப்புகளை இயக்குபவர்களின் வீடுகள் காணப்படுகின்றன. இங்கு சுற்றுலாப்பயணிகள் இளைப்பாறு வதற்கும் தரித்திருந்து உணவருந்துவதற்கும் வசதியாக சிறிய மேசை கதிரைகள் போடப்பட்டுள்ளன.

கனடாவின் வெப்ப காலங்களில் இந்தக் கால்வாயின் இருமருங்கிலுமுள்ள பாதைகளில் அழகு நிறைந்த காட்சி களைக் காணமுடியும். உடற்பயிற்சி செய்பவர்கள், நடப்ப வர்கள், ஓடுபவர்கள், சைக்கிள்பயணிகள், உல்லாசப் பயணிகள் என எந்தநேரமும் மக்கள்நடமாட்டம் நிறைந் திருக்கும். குளிர்காலத்தில் கால்வாய் பனிக்கட்டியாக மாறிவிடும்.

ஒட்டாவா நகரில் சுற்றுலாப்பயணிகளைக் கவரும் இடங்களில் மற்றொன்று 'ரூலிப்' மலர்த்தோட்டமாகும். ரூலிப் மலர் கனடாவின் தேசியமலர் என்றும் சொன்னார்கள். சர்வதேச நட்பை வெளிக்காட்டும் மலராகவும் இது கொள்ளப்படுகிறது. நாட்டின் முக்கியமான அரசபூங்காக்களிலும் ரூலிப் மலர்ச் செடிகளை வளர்க்கிறார்கள்.

வருடாவருடம் ஒட்டாவா நகரில் மே மாதத்தில் 'ரூலிப் மலர்விழா' Canada Tulip Festival கொண்டாடப்படுகிறது. நாங்கள் அங்கு சென்றவேளையில் அதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதைக் காணமுடிந்தது. இந்தவிழா உலகின் மிகப்பெரிய ரூலிப்மலர் விழா எனக் கூறினார்கள். இவ்விழாவில் பத்துலட்சத்திற்கும் கூடுதலான மலர்கள் காட்சிப்படுத்தப் படுகின்றன. வருடாவருடம் ஆறுலட்சத்து ஐம்பதினாயிரம் மக்கள் இந்த விழாவுக்கு வருகைதருகிறார்கள்.

அந்த விழா நடக்கும் இடமான பூங்கா 'டோவ்ஸ்' ஏரியிலிருந்து ரிடோ கால்வாய் ஓடும் நீர்ப்பரப்பின் ஓரம்வரை நீள்கிறது.

இந்த விழாவிற்கான ஒரு வரலாற்றுப் பின்னணி இருக்கிறது. அதனைச் சுற்றுலாப் பயணிகள் வழிகாட்டி எமக்கு விளக்கினார். இரண்டாவது உலகமகா யுத்தத்தின்போது 1940களில் கிட்லரின் நாஜிப் படைகள் நெதர்லாந்து நாட்டில் புகுந்துகொண்டன. அந்த நாட்டின் அரசி வில்ஹெமினா உள்ளிட்ட அரச குடும்பத்தினர் பிரித்தானியாவின் ஆளுகைக்கு உட்பட்ட நாடொன்றில் தலைமறைவாக இருப்பது பாதுகாப் பானது என முடிவுசெய்தனர். அவ்வேளையில் இங்கி லாந்திலும் போர்மேகங்கள் சூழ்ந்திருந்தன. எனவே அவர்கள் ஒட்டாவா நகருக்கு கப்பல்மூலம் வந்துசேர்ந்தனர். ஒட்டாவாவில் தஞ்சம்புகுந்த இளவரசி ஜூலியானா அங்கு இருக்கும் மருத்துவமனையில் 1943இல் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார்.

நெதர்லாந்து அரச வழக்கப்படி தங்கள் நாட்டுக்கு வெளியே பிறந்த ஒருவருக்கு அரசு உரிமை கிடையாது. கனடாவில் பிறந்ததால் அந்தக்குழந்தை அரசுரிமையை இழந்துவிடக்கூடாது என்பதற்காக கனடா நாட்டின் மருத்துவமனையில் நெதர்லாந்துக் கொடியை ஏற்றி அந்தப் பகுதியை நெதர்லாந்து நாட்டின் ஒருபகுதியாக ஒட்டாவா அரசாங்கம் அப்போது அறிவித்தது. நெதர்லாந்து நாட்டுமக்கள் தமது நாட்டின் ஆளுகைக்குட்பட்ட பகுதியிலேதான் அரச குடும்பத்தின் வாரிசு பிறந்ததாக ஏற்றுக்கொண்டார்கள்.

*1945*இல் சுதந்திரமடைந்த நெதர்லாந்து நகருக்கு அரசகுடும்பத்தினர் திரும்பினார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பாக இராணுவவீரர்களும் சென்றுள்ளார்கள். ஐந்து ஆண்டுகள் அரசகுடும்பத்திற்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாப்புக்காக இராணுவவீரர்களையும் அனுப்பிவைத்ததன் நன்றிக்கடனாக படைவீரர்களுக்குப் பரிசுப்பொருட்களைக் கொடுத்ததோடு ஒரு லட்சம் ரூலிப் மலர்க்கண்டுகளையும் அரச குடும்பத்தினர் அனுப்பிவைத்தார்கள். அடுத்த ஆண்டிலும் மேலும் *20500* ரூலிப் மலர்ச்செடிகளை அனுப்பிவைத்தார்கள்.



1948இல் ஜூலியானா நெதர்லாந்தின் அரசியானார். அன்று முதற்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் பெருந்தொகையான ரூலிப் மலர்களை அரசி அனுப்பிவந்தார். 1980வரை தொடர்ந்த அந்த வழக்கம் அவளையடுத்து வந்த அரசியின் ஆட்சியோடு முடிவுக்கு வந்தது. இந்த நிகழ்வு மலர்காட்சிவிழாவாக மாறியதற்குக் காரணம் உலக அளவில் புகழ்பெற்ற ஒரு புகைப்படக்காரர்தான். அவர் நெதர்லந்திலிருந்து வந்த மலர்ச்செடிகளில் மலர்ந்த மலர்களை விதம் விதமாகப் படம்பிடித்து பத்திரிகைகளில் வெளியிட்டார். அவரது வேண்டுகோளை ஏற்று கனடா நாட்டின் தேசியத் தலைநகர் ஒட்டாவா வணிகக்கழகம் வருடாவருடம் மே மாதத்தில் ரூலிப் மலர்க்காட்சித் திருவிழாவை நடத்திவருகிறது. இந்த மலர்விழாவில் நூற்றுக்குமேலானவகை ரூலிப் மலர்களைப் பார்க்கமுடியும். இந்த மலர்விழா முதன்முதலில் 1953இல் கொண்டாடப்பட்டது. 1967இல் அரசி ஜூலியானா இந்தக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டார். இந்த மலர்விழாவின் 50ஆவது ஆண்டுவிழா 2002இல் இடம்பெற்றபோது ஒட்டாவா மருத்துவமனையில் அரசி ஜூலியானா பெற்றெடுத்த இளவரசி மார்கிரெற் கலந்து சிறப்பித்தார்.

நெதர்லாந்து அரசியின் அன்பளிப்பால் கனடாவில் உருவாகிய ரூலிப்மலர் தோட்டங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது, நெதர்லாந்து நாட்டுக்கு நாங்கள் சுற்றுலாப் பயணம் சென்றவேளையில் அங்கு பார்த்த பிரமாண்டமான ரூலிப் மலர்த் தோட்டங்களும் அவற்றின் நடுவே அமைக்கப்பட்டிருந்த காற்றாலைகளும் என் நினைவுத் திரையில் ஓடிக்கொண்டிருந்தன. அங்குதான் 'அந்நியன்' திரைப்படத்தில் வரும் 'குமாரி' பாடல்காட்சி படமாக்கப்பட்டது என்பதை அந்தப்படத்தைப் பார்த்தவர்களுக்கு அறியத்தரலாம். ரூலிப் மலர்த்தோட்ங்களின் கொள்ளைஅழகை அந்தத் திரைப்படத்தைப் பார்த்தவர்கள் கண்டு இரசித்திருப்பார்கள்.

# 12

## கனடா போர் அருங் காட்சியகத்தில் சர்வாதிகாரி ஹிட்லர் பாவித்த கார்

கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் சுற்றுலாப்பயணி களைக் கவர்ந்திழுக்கும் மற்று மொரு இடமாக விளங்குவது ‘ கனடா போர் அருங்காட்சியகம்’ (Canadian War Musium) ஆகும். ஒட்டாவா ரூலிப் மலர்த்தோட்டத் தைப் பார்வையிட்ட பின்னர் இந்த அருங்காட்சியகத்தைப் பார்வை யிடச் சென்றோம். அங்கிருந்து ஏறத்தாழ இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் அந்த அருங்காட்சி யகம் அமைந்துள்ளது. போகும் வழியில் கனடா பிரதமர் இல்லம், கனடா வங்கி, கனடா ஏரி போன்ற வற்றை வெளிப்பார்வையாகப் பார்க்கமுடிந்தது.

கனடா போர் அருங்காட்சிய கத்தில் அந்நாட்டில் இடம்பெற்ற முதலாவது போர்பற்றிய தகவல் களிலிருந்து இறுதியாக நடந்த பனிப்போர் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. கனடா நாட்டின் போர் குறித்த தகவல் களஞ்சியமாக இந்த நிலையம் திகழ்கிறது என்ற

தகவலை அங்கு எம்மை அழைத்துச் சென்ற சுற்றுலாப்பயண வழிகாட்டி கூறினார்.

இந்த அருங்காட்சியகம் கனடா மக்களிடையே காணப்பட்ட தேசபக்தி, தியாகம், மற்றும் வீரம் போன்ற நற்பண்புகளை எடுத்தியம்புவதாகவும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு நாட்டுப்பற்றை ஏற்படுத்த வல்லதாகவும் அமைந்துள்ளது.

1880இல் உருவாக்கப்பட்ட இந்த அருங்காட்சியகத்தில் ஏறத்தாழ ஐந்துலட்சம் போர்குறித்த பொருட்களும் ஆவணங்களும் இருப்பதாக அறிய முடிந்தது. போர்வீரர்களின் உடை, அவர்கள் அணிந்திருந்த பதக்கங்கள், காலணிகள், கேடயம், துப்பாக்கி, கத்தி, தோட்டாக்கள் போன்ற பலவற்றை இங்கு பார்க்கமுடிந்தது.

இன்னொரு புறத்தில் யுத்தத்தில் பாவிக்கப்பட்ட பெரிய பீரங்கிகள், கப்பல்களின் பாகங்கள், தொலைபேசி உபகரணங்கள், றொக்கட்லோஞ்சர்கள், கைக்குண்டுகள், வாக னங்கள், பெரிய பீரங்கிகள் போன்றவற்றைக் காணமுடிந்தது.

கனடா நாட்டின் இராணுவ சக்தியை அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு இந்த அருங்காட்சியகம் ஒரு தகவல் களஞ்சியமாகத் திகழ்கிறது.

1880இல் தொடங்கப்பட்ட இந்த அருங்காட்சியகம் 2005இல் தற்போதைய நவீன கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதாக அறியமுடிந்தது. பார்வையாளர்களுக்கு முழு விளக்கத்தையும் அறியத்தரும் நோக்கத்துடன் இந்த அருங்காட்சியகத்தை ஐந்து அரங்குகளாக வகுத்துள்ளனர். முதலாவது அரங்கில் 1885களுக்கு முன்னர் கனடா மண்ணில் நிகழ்ந்த போர்பற்றிய விடயங்களை அறியக்கூடியதாக இருந்தது.

இரண்டாவது அரங்கு 1931முதல்1945 வரையான இரண்டாம் உலகமகாயுத்தம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. மூன்றாவது அரங்கு 1945க்குப் பின்னரான பனிப்போர் குறித்த அரங்கு.

நான்காவது அரங்கினை கனடிய ‘லீஜியன்’ அரங்கு எனப் பெயர்கொண்டு அழைக்கிறார்கள்.

ஐந்தாவது அரங்கிற்கு 'நினைவக அரங்கு' எனப் பெயரிட்டுள்ளார்கள். இந்த அருங்காட்சியகத்தின் ஒரு பகுதியில் 'இராணுவ வரலாற்று ஆய்வு மையம் (Military History Research Center) எனப்படும் சகல வசதிகளுடனும்கூடிய ஆராய்ச்சி மையம் காணப்படுகிறது. இந்த மையத்தில் போர்க்காலத்தில் எழுதப்பட்ட கடிதங்கள், நாட்குறிப்புப் புத்தகங்கள், வரைபடங்கள், குறிப்புப் புத்தகங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், 65000க்கும் மேற்பட்ட புகைப் படங்கள் காணப்படுகின்றன.

இந்தப் போர் அருங்காட்சியகத்தில் உள்ள பொருட்களில் எனது மனதை விட்டு அகலாத பொருளாக நான் கருதுவது ஹிட்லர் பாவித்த கார் ஆகும். இரண்டாம் உலகப்போர் மூள்வதற்கும் அதன்மூலம் ஆறுகோடி பேருக்குமேல் மரண மடைவதற்கும் காரணமாக இருந்தவன் ஜேர்மனியின் சர்வாதிகாரியாக விளங்கிய ஹிட்லர். போர்க்காலத்தில் அவன் பாவித்த கார் 1945இல் அமெரிக்கப் படைகளால் கைப்பற்றப்பட்டது. சிலவருடங்களின் பின்னர் அவர்கள் அந்தக் காரினை கனடாவுக்குக் கொண்டுவந்தார்கள்.



அந்தக் காரினை அங்கு காட்சிப்படுத்தி அது தொடர்பான விளக்கத்தையும் எழுதிவைத்துள்ளார்கள்.

கனடாவில் இருக்கும் போர் அருங்காட்சியகத்தைப் போன்ற ஒரு அருங்காட்சியகத்தை நாங்கள் இலண்டன் சென்ற வேளையில் அங்கும் பார்திருக்கிறோம். அந்த அருங்காட்சியகம் முதலாம் இரண்டாம் உலக மகா யுத்தங்களின்போது இங்கிலாந்து மக்களிடையே காணப்பட்ட தேசபக்தி, தியாகம் மற்றும் வீரம்போன்ற நற்பண்புகளை எடுத்தியம்புவனவாகவும் இன்றைய தலைமுறையினருக்கு நாட்டுப்பற்றை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. அந்த 'இம்பீரியல்' அருங்காட்சியகத்தில், யுத்தத்தில் பாவிக்கப்பட்ட பெரிய பீரங்கிகள், துப்பாக்கிகள், கப்பல் களின் பாகங்கள், கைத்துப்பாக்கிகள், தொலைபேசி உபகர ணங்கள், பதுங்குகுழிகள், றொக்கட்லோஞ்சர்கள், ஆட்டி லறிகள், கடல்மூழ்கிக் கப்பல்கள், கைக்குண்டுகள், போர்க்கால வாகனங்கள், போர்க்காலப் பத்திரிகைகள், தொலைத்தொடர்புச் சாதனங்கள் போர்வீரர்கள் அணிந்த உடைகள், அவர்கள்பெற்ற பட்டயங்கள் - விருதுகள், போர்க்காலத்தில் வாழ்ந்த ஒரு குடும்பத்தின் இடர்சுமந்த வாழ்க்கை இப்படியாகப் பலதரப்பட்ட விடயங்களை அங்கே காட்சிப்படுத்தியிருந்தார்கள்.

புதிய தலைமுறையினருக்கு நாட்டுப்பற்றை ஏற்படுத்தும் வகையில் நடந்துமுடிந்த போரின் தடயங்களை பலவேறு நாடுகளிலும் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் காட்சிப் படுத்துகிறார்கள்.

போரின் தடயங்கள் நாட்டுப்பற்றைத் தூண்டுவன என்ற காரணத்தினால் எமது நாட்டில் போரின் சுவடே தெரியாமல் அழிக்கப்பட்டுவிட்டன என்ற எண்ணம்தான் கனடாவில் அமைந்திருக்கும் அருங்காட்சியகத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்தபோது எனது எண்ணத்தில் ஓடியது.

அடுத்து நாம் கனடா வரலாற்று அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டோம். இந்த அருங்காட்சியகம் ஒட்டாவா ஆற்றின்




அருகே அமைந்துள்ளது. அங்கிருந்து பார்க்கும்போது தூரத்தே கனடா பாராளுமன்றத்தையும் காணமுடிகிறது. இந்த அருங்காட்சியகம் மனித வரலாற்றின் 20000 வருடகால வளர்ச்சியைக் காட்டுவதாகக் கூறுகிறார்கள்.

இங்கே காணப்படுகின்ற கனடா வரலாற்று மண்டபம் 2017இல் திறந்து வைக்கப்பட்டதாம். இந்த மண்டபத்தில் 15000 வருட கனடா வரலாற்றை வெளிப்படுத்தும் 1500க்கும் மேற்பட்ட வரலாற்றுச் சின்னங்களைக் காணமுடிகிறது

இந்த அருங்காட்சியகத்தின் மாபெரும் மண்டபத்தை அடைந்தால் உலகிலே அதிகூடிய உயரமான மரபுச்சின்ன தூண் கம்பங்கள் எம்மை வியக்கவைக்கின்றன.

முன்மண்டபம் எனப்படும் பகுதியில் கனடா பூர்வீகக் குடியினரின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் அவர்களது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் சின்னங்களையும் காணமுடிகிறது.

அத்தோடு இந்த அருங்காட்சியகத்தில் கனடாவினதும் உலகின் பல்வேறு பகுதியினதும் கலைசார்ந்த வளர்ச்சிப்

போக்குகளைப் பிரதிபலிக்கும் பலதரப்பட்ட பொருட்களைக் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த அருங்காட்சியகத்தின் ஒரு பகுதியாக சிறுவர் களுக்கான பகுதி அமைந்துள்ளது. சிறுவர்கள் உலகின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களின் கலாசாரங்களைப் புரிந்துகொள்ள இப்பகுதி வழிவகுக்கிறது. சிறுவர்களுக்கான பல்வேறு மக்களின் உடைகள், சிறுவர் பாவனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகள் போன்ற வற்றைக்காண முடிகிறது.

இந்த அருங்காட்சியகத்தின் வேறோர் பகுதியில் சினிமா அரங்குகள் காணப்படுகின்றன. அங்கு இருபரிமாண, முப்பரிமாணத் திரை அரங்குகள் உள்ளன. அங்கு கனடாவின் வரலாற்றுடன் தொடர்புள்ள பல காட்சிகளை உள்ளடக்கிய சினிமாப் படங்களைக் காண்பிக்கிறார்கள்.

இந்த அருங்காட்சியகத்தில் நான் பார்த்து அதிசயித்த எமது நாட்டுடன் தொடர்புடைய காட்சி ஒன்று உண்டு. அங்குள்ள மாபெரும் மண்டபத்தில் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள மரபு சார்ந்த பொருட்களைக் காட்சிப்படுத்தும் பகுதியில் 'பௌத்தாலோக மாவத்தை' என்று தமிழிலும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட பெயர்ப்பலகை ஒன்று அந்த மண்டபத்தின் உத்தரத்தில் தொங்குகின்றது.

# 13

## உயர்தரத்தில் விளங்கும் கனடாவின் சுற்றுலாத்துறை

நாங்கள் இந்தச் சுற்றுலாவை மேற்கொள்வதற்குமுன்னர் டொரன்ரோ நகரில் இருக்கும் சுற்றுலா மையங்கள் சிலவற்றிற்குச் சென்று தகவல்களைச் சேகரித்தோம். டொரன்ரோ நகரில் சுற்றுலாக்களை ஒழுங்குசெய்து பயணிகளை அழைத்துச் செல்லும் நிறுவனங்கள் பல இருக்கின்றன. அந்த நிறுவனங்களில் ஒன்றான ‘ரூர் ஃபோர்பன்’ (Tour4Fun) என்ற நிறுவனத்தினர் ஒழுங்கு செய்த மூன்றுநாள் சுற்றுலாவில் இணைந்துகொண்டு நாம் பயணித்தோம். கனடாவில் வாழும் சீன இனத்தவர் சிலரால் இந்த நிறுவனம் நடத்தப்படுகிறது. பகல் முழுவதும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்த்துவிட்டு இரவிலே தனித்தனியாக ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கி இளைப்பாற உயர்ந்தரக ஹோட்டல்களையும் ஒழுங்குசெய்து தருகிறார்கள்.

மிகவும் வசதியான பஸ்களில் அவர்கள் பயணிகளை அழைத்துச் செல்வதால் பயணக்களைப்பே தெரிவதில்லை. அந்த பஸ்ஸில்

கழிப்பறை இருக்கிறது. பஸ்ஸிற்குள் இணையவசதி (WiFi) இருக்கிறது. நாம் கொண்டுசெல்லும் தொலைபேசியில் 'சார்ஜ்' தீர்ந்துவிட்டால் அதனை மீண்டும் சார்ஜ் செய்ய இருக்கைகளின் முன்னால் மின்சார இணைப்பு இருக்கிறது. இத்தகைய வசதிகளால் பயணிகள் நவீன தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்த முடிகிறது. சொந்த நாட்டில் இருக்கின்ற எமது உறவுகளுடன் கைத்தொலை பேசியில் (Face Time) முகம்பார்த்துப் பேசவும் முடிந்தது. பயணிகளின் தூரப்பயணங்களைச் சோர்வடையவிடாது இந்தப் பயணஒழுங்கமைப்பாளர்கள் கவனித்துக்கொள் கிறார்கள்.

எமது பஸ்ஸில் பயணிகள் வழிகாட்டியாக இருந்தவர் 'ஐவி' என்ற பெயருடைய சீனத்து இளமங்கை. அப் பெண்ணுக்கு சீன, ஆங்கில, பிரெஞ்சு மொழிகளில் சரளமாக உரையாட முடிந்தது. அவள் பயண வழிகாட்டியாக மட்டும் இருக்கவில்லை. பஸ்ஸில் பயணித்த அத்தனைபேருடைய நலன்களையும் கவனிப்பதில் திறமையுடன் செயற் பட்டாள். கனடாவில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி எத்தகைய உயர்தரத்தில் இருக்கிறது என்பதை மேற்கூறிய வற்றிலிருந்து வாசகர்கள் புரிந்துகொள்ளலாம்.

நாங்கள் பயணம்செய்த பஸ் ஒட்டாவா நகரில் இருந்து புறப்பட்டு மொன்றியல் என்ற இடத்தை நோக்கிச் சென்றது. எமது பயண வழிகாட்டி ஐவி அந்த நகர்பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை பஸ்ஸில் பயணித்தபோது சிறிய மைக் ஒன்றின்மூலம் கூறிக்கொண்டேவந்தார்.

மொன்றியல் நகரம் கனடாவின் கியூபெக் மாகாணத்தின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள ஒரு தீவு. இத்தீவின் பெரும்பகுதி சென்ற்லோறன்ஸ், ஒட்டாவா நதிகள் சங்கமிக்கின்ற இடத்தில் அமைந்துள்ளது. சென்ற்லோறன்ஸ் நதியில் அமைந்துள்ள துறைமுகம் கடல்வழி நோக்கியதாகவும் அதன் வாயிற்பகுதி அத்திலாந்திக் சமுத்திரத்துடன் இணைந்தும் உள்ளது. இந்நகரில் ஏறத்தாழ 4000 வருடங்களுக்கு முன்னரே கனடிய ஆதிவாசிகள்

வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் கி.பி.1000 ஆண்டுகளில் சோளப்பயிர் செய்கையில் ஈடுபட்டார்கள் எனவும் பல கிராமங்கள் சூழ்ந்த இடமாக இந்நகர் இருந்ததாகவும் ஆராய்ச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. 1500களில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மக்கள் இங்கு வந்து குடியேறினர். அவர்கள் 'விலே மாரி' என்ற பெயரில் இந்த நகரை ஸ்தாபித்து அங்கு ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் ஒரு வைத்திய நிலையமும் அமைத்தனர். அவர்களைத் தொடர்ந்து வந்த பிரித்தானியரும் கனடாவின் சில பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சிசெய்தனர். பிரித்தானியர் பிரெஞ் ஆட்சியாளருடன் போரிட்டு கியூபெக் மாநிலத்தைக் கைப்பற்றினர். 1663இல் கியூபெக் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற போரில் பிரித்தானியப்படைகள் வெற்றிபெற்றன. கனடா பிரித்தானியரின் உடமையாக்கப்பட்டது.

'பிரெஞ்சு' மொன்றியலின் உத்தியோக மொழியாகும். உலகில் அதிகளவில் பிரெஞ்சுமொழி பேசுபவர்கள் பரிஸ் நகரில் உள்ளார்கள். அதற்கு அடுத்தபடியாக உலகிலே அதிகமாக பிரெஞ்சுமொழி பேசும் இடமாக மொன்றியல் விளங்குகிறது. பிரெஞ்சுமொழிக்கு அடுத்தபடியாக இங்கு ஆங்கிலம் பேசும்மக்கள் உள்ளனர். மொன்றியல்நகர் கனடாவின் இரண்டு மொழிபேசும் (Bilingual City) பிரதேசமாகக் கணிக்கப்படுகிறது. 1970க்கு முன்னர் மொன்றியல் கனடாவின் பெரிய நகரமாகத் திகழ்ந்துள்ளது.

1844 முதல் 1849 வரை மொன்றியல் கனடாவின் தலைநகராக விளங்கியிருக்கிறது. அக்காலத்தில் புரட்சி யாளர்கள் சிலர் அங்கிருந்த பாராளுமன்றத்தைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டனர். அதன்பின்னரே விக்ரோறியா மகாராணி 1856இல் ஒட்டாவாவை தலைநகராக்கினார் என அறிய முடிகிறது. இரண்டாவது உலகமகாயுத்தகாலத்தில் அரச பரம்பரையினரின் வாசஸ்தலமாகவும் மொன்றியல் விளங்கி யுள்ளது.

மொன்றியல் நகரை பழைய நகரம் நவீன நகரம் என பிரித்துள்ளார்கள். நாங்கள் முதலில் பழைய நகரைச் சுற்றிப் பார்த்தோம்.



பழைய நகரில் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டடங்களைக் காணமுடிந்தது. ஏறத்தாழ நூற்றைம்பது வருடங்களுக்கு மேலாக மொன்றியல் நகர் கனடா நாட்டின் கைத்தொழில் நகராகவும் பொருளாதார மையமாகவும் விளங்கி வந்துள்ளது. இதன்காரணமாக பழைய நகரில் பழைமை வாய்ந்த உற்பத்திச்சாலைக் கட்டடங்கள், பாரம் தூக்கும் யந்திரங்கள், பண்டகசாலைகள், தொழிற்சாலைகள், சுத்திகரிப்புச் சாலைகள் என்பனவற்றைக் காணமுடிந்தது. இவை நகரின் வரலாற்றை எடுத்துக்கூறுவனவாக அமைந்துள்ளன. இக்கட்டிடங்கள் மூன்று நூற்றாண்டுக்கு முற்பட்ட கட்டட நிர்மாணக் கலைநுட்பங்களை எடுத்துக் கூறுவதாக உள்ளன. இந்தக் கட்டிடங்கள் பல பிரெஞ்சு கட்டடக் கலையின் தனித்துவத்துடன்கூடியதும் சாம்பல் நிறக் கற்களால் அமைந்த கட்டடங்களாகவும் தென்பட்டன.

மொன்றியல் தீவின் நடுவே முக்கோண கூம்பு வடிவிலான கடல் மட்டதிலிருந்து 761அடி உயரமான மலை ஒன்று இருக்கிறது. அதனை ‘மவுன்ட் றோயல்’ (Mount Royal) என அழைத்தனர். அந்த மலையின் பெயரே திரிபடைந்து மொன்றியல் ஆகியுள்ளது என அறியமுடிந்தது.

இந்நகரில் நிலத்தின்கீழ் அமைந்த நகர் (Under Grond City - Officialy RESO) சுற்றுலாப்பயணிகளை அதிகம் கவர்ந்திழுக்கும் பகுதியாக அமைந்துள்ளது. அங்கு நிலத்தின் மேல்மட்டத்திலிருந்து கீழேயும் தொடர்புள்ள பல அங்காடிகள் உள்ளன. அதனூடாக நடந்து சென்றால் அங்கு ஹோட்டல்கள், உணவுச்சாலைகள், சுரங்கப்பாதைகள், பலவற்றினூடாக நடந்துசெல்லமுடிகிறது. இந்த இடம் மொன்றியல் நகரில் அதிகூடிய மக்கள் வாழும் இடமாகவும் அமைந்துள்ளது.

மொன்றியல் நவீனநகரம் 1960களில் 'எக்ஸ்போ67' என்னும் உலகசந்தை நடைபெற்றதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது. அதன்போது வானளாவும் உயர்கட்டிடங்கள், புதிய கடுகதிப் பாதைகள், 'மொன்றியல் மெற்றோ' என்ற பெயரில் சுரங்க வழி ரயில்பாதைகள் அமைக்கப்பட்டன. 2002ஆம் ஆண்டில் சூழவுள்ள 27 மாநகரசபைகள் இணைக்கப்பட்டு இந்நகர் மொன்றியல்தீவு என்னும் பெயரில் இயங்கத் தொடங்கியது.

மொன்றியல் நகர் தற்போது வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும், விண்வெளிக்கலம் சார்ந்த தொழில் நுட்பப் பிரதேசமாகவும், போக்குவரத்து, நிதி, மருந்துகள், தொழில்நுட்பம், வடிவமைப்பு திட்டமிடல், கல்வி, கலை, கலாசாரம் சுற்றுலா, நாகரிகம், உணவு, விளையாட்டு, சினிமா, மற்றும் உலகவிடயங்கள் நிறைந்த நகராகவும் விளங்குகிறது.

மொன்றியல் நகர் 2006ஆம் ஆண்டில் உலகின் திட்டமிட்டு அமைக்கப்பட்ட அழகியநகர் என யுனெஸ்கோ நிறுவனம் பிரகடனப்படுத்தியுள்ளது. 2017இல் நடத்தப்பட்ட கணிப்பின்படி உலகிலே சிறந்த வாழ்க்கைத் தரத்தைக்கொண்ட இடமாக 12ஆவது இடத்தில் மொன்றியல் இருக்கிறது. இந்த நகரிலே சர்வதேச மாநாடுகள் பல அடிக்கடி நடப்பது வழக்கம். 2016இல் கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் இங்குதான் இடம்பெற்றன.

# 14

## மொன்றியல் நகரில் உலகப் புகழ்பெற்ற 'பசிலிக்கா' புனித கிறிஸ்தவ தேவாலயம்

நாம் மொன்றியல் நகரில் இருந்தபோது இந்த நகருக்கும் இலங்கைத் தமிழருக்குமான ஒரு முக்கிய தொடர்பு என் நினைவில் வந்தது. 1983இல் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகப் புலம் பெயர்ந்து கனடாவுக்கு வந்தபோது அவர்களில் பெரும்பாலோர் முதன் முதலில் மொன்றியல் நகரிலேதான் அடைக்கலம் புகுந்தனர். அதே காலத்தில் வணக்கத்துக்குரிய யோசேப் பிரான்சிஸ் சேவியர் என்ற பெயர்கொண்ட அடிகளாரும் மொன்றியலுக்கு வந்துசேர்ந்தார். அவர் இலங்கையிலிருந்து வந்து சேர்ந்த அகதிகளுக்குப் பெரிதும் உதவினார். புதிதாக வந்தவர்களுக்கு பிரெஞ்சுமொழி தெரியவில்லை. பிரெஞ்சுமொழி தெரிந்த சேவியர், அகதிகளுக்கு உதவுவதில் ஆர்வமுடன் செயற்பட்டார். அத்தோடு தனக்கு அறிமுகமான அங்கிலிக்கன் தேவாலய மத குருவுடன் பேசி அத்தேவாலயத்தின் கீழ்மாடித்தளத்தைப்பெற்று, இலங்கை அகதிகள் சந்திப்பதற்கும்

தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் ஏற்ற இடமாக அதனை ஏற்படுத்தினார்.

அங்கு கூட்டுப்பிரார்த்தனை நடத்துதல், ஆலோசனை பெறுதல், பிரெஞ்சுமொழி கற்றல் போன்ற தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய இடமாக அந்த மண்டபம் பயன்பட்டது.

அந்த மண்டபத்தில் வளர்ந்தோருக்குப் பிரெஞ்சுமொழி வகுப்புகள், பிள்ளைகளுக்குத் தமிழ்மொழி வகுப்புகள் என்பன சிறந்த முறையில் நடத்தப்பட்டன. அத்தோடு அனைத்துமத வழிபாடுகளும் நடத்தப்பட்டன. காலப்போக்கில் அனைவரும் சேர்ந்து 'கியூபெக் தமிழீழச் சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கி அதனூடாக புதிதாக வருபவர்களுக்குப் பலதரப்பட்ட சேவைகளை வழங்கியதாக அறியமுடிகிறது.

இச்சங்கத்தினூடாக கனடா குடிவரவுத் திணைக்கள அரச அலுவலர்களை அழைத்து தமிழர் பண்பாடு, குடும்ப விழுமியங்கள், சமூக வழக்காறுகள் என்பவற்றை அவர்கள் புரிந்துகொள்ளும்வகையில் நிகழ்வுகள், உரையாடல்கள் நடத்தப்பட்டன. அச்செயற்பாடுகள் அகதி வழக்கு விசாரணை களுக்கு உதவியாக அமைந்தன என்றும் அறியமுடிகிறது. இதுபோன்று 'தமிழர் ஒளி' என்ற அமைப்பும் புதிதாக கனடாவுக்கு வந்துசேரும் தமிழர்களுக்கு பல்வேறு வகைகளிலும் உதவியதாக பிரான்சிஸ் சேவியர் குறிப்பிட் டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட, இலங்கைத் தமிழரின் வருகை தொடர்பான தகவல்கள் பேராசியர் பாலசுந்தரம் எழுதிய 'கனடாவில் இலங்கைத் தமிழரின் வாழ்வும் வரலாறும்' என்ற நூலில் காணப்படுகிறது.

நாம் பயணித்த பஸ் மொன்றியல் நகரில் புகழ்பெற்ற கிறிஸ்தவப் பெருங்கோயிலின் முன் நிறுத்தப்பட்டது. இத் தேவாலயத்தை 'பசிலிக்கா' (Basilika) என்று அழைக்கிறார்கள். பசிலிக்கா என்ற சொல் ஆரம்ப காலங்களில் ரோம் நகரில் கட்டப்பட்ட பொதுக் கட்டிடங்களைக் குறிக்கப் பயன்



படுத்தப்பட்டன. கிரேக்கமொழியில் அதன் பொருள் ‘அரச உறைவிடம்’ என்பதாகும். காலப்போக்கில் இந்தச் சொல் முக்கிய கிறிஸ்தவக் கோயில்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

உலகில் உள்ள கத்தோலிக்கத் தலங்களை தேவாலயம் என்றும், மாதாகோயில் என்றும், அழைப்பர். ஆயர்கள் தங்கியிருக்கும் இடங்களைச் சேர்ந்த ஆலயங்களை பேராலயம் என்றும் பிரசித்திபெற்ற ஆலயங்களைத் திருத்தலம் என்றும் அழைப்பர். அற்புதங்கள் புதுமைகள் நடைபெறும் ஆலயங்களை ‘பசிலிக்கா’ என்று போப்பாண்டவர் அறிவிப்பார். பசிலிக்கா என்றால் அற்புதங்களால் பல நாட்டு மக்களை ஈர்க்கும் திருத்தலம் என்று அர்த்தம். உதாரணமாகக் கூறுவதானால் தமிழ்நாட்டில் உள்ள வேளாங்கண்ணி ஆலயம் பசிலிக்கா தரத்தில் உள்ள ஆலயமாகும்.

நாம் சென்றுபார்த்த ‘பசிலிக்கா’ மொன்றியல் நகரின் வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த பகுதியில் அமைந்துள்ளது. இதன் அமைவிடம் நோட்ரேடாம் தெருவில் 110ஆம் இலக்கத்தில் இருப்பதால், இத்தேவாலயத்தின் பெயர், ‘நோட்ரேடேம் டி மொன்றியல் பசிலிக்கா’ என்று வழங்கப்படுகிறது.

1667இல் ரோமன்கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மக்கள் இன்று மொன்றியல் என அழைக்கப்படும் நகரில் குடியேறினார்கள். அக்காலத்தில அந்தப் பகுதி 'வில்லே மேரி' (Ville - Marie) என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்டதாம். அங்கு குடியேறியவர்கள் மேரியின் புனிதப்பெயரால் ஒரு தேவாலயத்தை 1672இல் அமைத்தனர். 1824இல் இந்தத் தேவாலயத்துக்கு வருவோர் தொகை அதிகரித்தது. எனவே புதிய தேவாலயம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டனர். நீயூயோர்க் நகரைச் சேர்ந்த ஐரிஷ் புரட்டஸ்தாந்து மதத்தவரான ஜேமீஸ் ஓடொன்னெல் என்பவரிடம் புதிய தேவாலயத்தை வடிவமைக்கும்பணி ஒப்படைக்கப்பட்டது. 'கோதிக்' மறுமலர்ச்சிக் கட்டிடக்கலையின் ஆதரவாளரான அவர் அப்பாணியிலேயே தேவாலயத்தை வடிவமைத்தார்.

இந்தத் தேவாலயம் 1830இல் வழிபாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டதாம். தேவாலயத்தின் முன்பு உள்ள இரட்டைக் கோபுரங்கள் 1843இல் கட்டிமுடிக்கப்பட்டது என்ற பதிவுகளைக் காணமுடிந்தது. இந்தத் தேவாலயத்தை வெளியே இருந்து பார்க்கும்போதே அதன் பிரமாண்டம் பிரமிப்பை ஏற்படுத்துகிறது. இத்தேவாலயத்தின் உயரம் 200அடி, நீளம்259அடி, அகலம்151அடி என அறியமுடிந்தது.

இந்தக் கட்டிடம் கவனத்தை ஈர்க்கும் உலகின் சிறந்த கட்டிடக் கலைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இத் தேவாலயத்தின் பெரும்பகுதி பல நிறங்களுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. இதன் விதானம் (Celing) கருநீல நிறம் பூசப்பட்ட பொன்நிற நட்சத்திர வடிவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. உட்பகுதிகள் நீலம், சிவப்பு, கத்தரிப்பூ, ஆகாயநீலம் (Sky Blue), வெள்ளி, பொன் நிறங்களில் அலங்கரிக்கப்பட்டுள்ளன. உள் மண்டபம் நூற்றுக்கணக்கான நுண்ணிய மரச்செதுக்குவேலைப்பாடுகளினாலும் சமயம் சார்ந்த பல சிலைகளாலும் அலங்கரிக்கப்படடுள்ளது. இதன் பின்புறச் சுவரில் அமைந்துள்ள நிறக்கண்ணாடி வேலைப் பாடுகள் வழமையான தேவாலயங்களில் இருப்பது போன்று

பைபிள் சம்பந்தப்பட்ட காட்சிகள் சித்திரிக்கப்படாமல் மொன்றியல் நகரின் சமயம் சார்ந்த வரலாற்றுக் காட்சிகளைச் சித்திரிக்கின்றன. இந்தத் தேவாலயத்திற்கு 1982இல் பசிலிக்கா என்ற தரத்தினை வழங்கியவர் இரண்டாவது போப் ஜோன்போல் ஆவார்.

இந்தத் தேவாலயத்தில் உள்ள மண்டபத்தின் ஒரு பகுதியில் ஒரு பெரிய இசைப்பேழை (Organ) இருக்கிறது. இந்த இசைப்பேழையில் 1891ஆம் ஆண்டிலிருந்து இசை மீட்கப்படுகிறதாம். அதில் 92 தந்திகளும் நான்கு சுருதிக் கட்டைகளைத் தாங்கும் பாகமும் (Key Boards) அமைந்திருப்பதைக் காணமுடிந்தது.

இத்தேவாலயம் கட்டி முடிக்கப்பட்ட காலத்தில் இதுவே வட அமெரிக்காவில் மிகப்பெரிய தேவாலயமாக விளங்கியது.

# 15

## கனடா ஒலிம்பிக் கிராமத்தில் உலகத்திலேயே உயரமான சாய்ந்த கோபுரம்

எமது கனடாச் சுற்றுலாவில் மேலும் பல சுவாரஸ்யமான அனுபவங்களை பெற்றுக்கொண்டோம். எம்முடன் பயணம் செய்தவர்களில் பல இன மக்களும் இருந்தனர். இந்தியா, அமெரிக்கா, நெதர்லாந்து, ரேக்கி, சைனா, ஆபிரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இருந்தனர். நானும் மனைவியும் மட்டுமே இலங்கையர். சுற்றுலாச் செய்த மூன்று நாட்களும் இந்தப் பயணிகள் பரஸ்பரம் மற்றவர்களோடு அளவளாவி மகிழ்ந்ததும் தத்தம் நாடுகள்பற்றியும் கலாசாரம் பற்றியும் மற்றப் பயணிகளுடன் அளவளாவியதும் தனியான அனுபவமாக இருந்தது. உதாரணத்துக்கு ஒரு செய்தியை இங்கு பதிவுசெய்வது சுவாரஸ்யமானது.

ரேக்கியில் இருந்து ஒரு வயோதிபத் தம்பதியினர் வந்திருந்தனர். அவர்களுடைய மகன் கனடாவில் தொழில்புரிகிறான். இங்கு வாழும் சீன மங்கையை காதலித்துள்ளான். அவர்களது திருமணம் சீனமுறைப்படி கனடா

வில் நடைபெற்றது. இந்த ரேக்கி தம்பதி தமது மகனின் திருமணத்தில் கலந்துகொள்வதற்காகவே கனடா வந்தார்களாம். திருமணத்தின்பின் இப்போது கனடாவைச் சுற்றிப் பார்க்கிறார்கள். ஆனாலும் தாங்கள் ரேக்கி நாட்டுக்குத் திரும்பும்போது புதுமணத் தம்பதியினரைத் தம்முடன் அழைத்துச்சென்று தமது மதஆசாரத்தின்படி அவர்களுக்கு ரேக்கி நாட்டிலும் திருமணம் செய்துவைப்பதாகக் கூறினார்கள். இருப்பினும் அவர்கள் இருவரும் தமது மகனின் இனம்மாறிய திருமணத்தால் மிகவும் கவலையுடன் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

நான் அத்தம்பதியிடம் கூறினேன், குடும்பச் சிதைவுகள் ஏற்படுதல் மேலைத்தேய நாட்டுக் கலாசாரத்தில் ஊறிப் போய்விட்ட ஒன்றாகக் காணப்படுகிறது. கனடாச் சூழலில் இளைய தலைமுறையினர் வீட்டுக்கு வெளியே நடத்தும் சந்திப்புக்கள், தங்கியிருத்தல் (Dating) போன்ற செயற்பாடுகள் அவர்களது எதிர்காலத்தை மாற்றியமைக்கின்றன. காதலர் இருவர் அல்லது உயர்கல்விப் பாடசாலையில் கற்கும் நண்பர்களாகிய ஆணும் பெண்ணும் பெற்றோருக்குத் தெரியாமல் ஒன்றாகத் தங்குதல் தவிர்க்கமுடியாதது. மேலும் நவீன தொடர்பு சாதனங்களே இளம் சந்ததியினரை வழிநடத்துவதால் சுயமாகச் சிந்திப்பதோ அல்லது குடும்ப விழுமியங்கள்பற்றி சிந்திப்பதிலோ அவர்கள் கவனம் செலுத்துவதில்லை.

அவரிடம் நான் கனடாவுக்கு வந்தபின் அறிந்துகொண்ட இதேபோன்ற திருமண விடயமொன்றைக் கூறினேன். யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்துவாழும் எனது நண்பரின் மகள் இங்குவந்து குடியேறிய ஆங்கிலேயர் ஒருவரைக் காதலித்தாள். அவர்களது திருமணம் முதலில் மணமகனது மதவழக்கப்படி கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்றது. அந்தத் திருமணத்தை மணமகளின் பெற்றோரும் கலந்துசிறப்பித்தனர். ஆனாலும் அதன்பின்னர் அவர்களுக்கு சைவமுறைப்படி ஒரு கோவில் திருமணமண்டபத்தில் திருமணம்

நடத்தினார்களாம். ஆங்கில மணமகன் தமிழ் முறைப்படி வேட்டிகட்டி தலைப்பாகை அணிந்து திருமணக் கிரியைகளில் பங்குபற்றி மணப்பெண்ணின் கழுத்தில் தாலிகட்டினான். அவர்கள் அக்கினி வலம்வந்து, அம்மி மிதித்து அருந்ததி பார்த்த காட்சியை வீடியோ காட்சியாக நானும் மனைவியும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த விடயத்தை நான் அந்த ரேக்கித் தம்பதிகளுக்குக் கூறினேன்.

இன்று உலகமயமாதல் சூழலில் கனடா போன்ற பல்கலாசார மக்கள் வாழ்கின்ற நாட்டில் பெற்றோர் பார்த்துச் செய்துவைக்கும் திருமணங்கள் குறைவடைந்து வருகின்றன. இவை தவிர்க்கமுடியாதவை என்பதையும் நான் அந்தத் தம்பதியினருக்குக் கூறினேன். தற்போது கனடாவிற்கு வந்து குடியேறிய பலவகை இனத்தவரும் இத்தகைய கலப்புத் திருமணங்களை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். கனடாவில் ஏறத்தாழ 195 நாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் 160க்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசுகிறார்கள். எனவே கனடா போன்ற நாடுகளிலே வாழும் மக்களிடையே பண்பாட்டுக் கலப்புகளும் இனம்சார்ந்த விழுமிய மீறல்களும் மற்றைய நாடுகளைவிட அதிகமாக இருப்பது தவிர்க்க முடியாதது என விளக்கினேன்.

நாம் பயணித்த சுற்றுலாப் பயணிகள் பஸ் மொன்றியல் ஒலிம்பிக் மைதானத்தைச் சென்றடைந்தது. 1976இல் கனடாவில் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்றன. இதுவே கனடாவில் இடம்பெற்ற ஒரேயொரு கோடைகால ஒலிம்பிக் போட்டியாகும். அந்த ஒலிம்பிக் விளையாட்டுமைதானம் தற்போது சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாகத் திகழ்கிறது. கனடாவில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டி பற்றிய சில சுவாரஸ்யமான விபரங்களை எமது சுற்றுலாப் பயண வழிகாட்டி எமக்கு எடுத்துரைத்தார்.

இந்த ஒலிம்பிக் விளையாட்டுக்கள் இடம்பெற்றவேளை ஒலிம்பிக் மைதானத்தைச் சுற்றியுள்ள இடங்களில் இராணுவப் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாகக் காணப்பட்டதாம்.



அதற்கான முக்கியகாரணம் அதற்குமுன்னர் ஜேர்மன் நாட்டில் இடம்பெற்ற ஒலிம்பிக் விளையாட்டின்போது இடம்பெற்ற உலகை உலுக்கிய ஒரு கோரச்சம்பவம் ஆகும்.

1972இல் ஜேர்மன் நாட்டின் மூனிச் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்றன. அவ்வேளையில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் ஒலிம்பிக் மைதானத்துக்குள் புகுந்து இஸ்ரேலிய வீரர்கள் 11பேரை துப்பாக்கி முனையில் பணயக் கைதிகளாக்கிக்கொண்டனர். இஸ்ரேலியச் சிறைச்சாலைகளில் இருக்கும் தங்களது சகாக்கள் 234 பேரை விடுதலை செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். அது தொடர்பில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் ஒன்பது இஸ்ரேலிய விளையாட்டுவீரர்கள், ஐந்து பலஸ்தீனத் தீவிரவாதிகள், ஒரு பொலிஸ் அதிகாரி ஆகியோர் இறந்தனர். ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 24 மணிநேரம் நிறுத்தி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றாது தமது

நாட்டுக்குத் திரும்பிவிட்டனர். அத்தகையதோர் நிகழ்வு கனடாவில் இடம்பெறும் ஒலிம்பிக்போட்டியிலும் நடந்து விடக்கூடாது என்பதாலேயே கனடா ஒலிம்பிக்போட்டிகளின் போது பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாக இருந்தன.

நாங்கள் ஜேர்மனிக்குச் சென்றிருந்த வேளையில் மேலே குறிப்பிட்ட கோரச்சம்பவம் இடம்பெற்ற 'மூனிச் ஒலிம்பிக் பார்க்'கைப் பார்த்திருக்கிறோம். அங்கு நடந்த கோரச்சம்பவம் பற்றிய விரிவான விளக்கத்தை நான் எழுதிய 'ஐரோப்பிய பயண அனுபவங்கள்' என்ற எனது பயணக்கட்டுரை நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

கனடா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் 92 நாடுகளைச் சேர்ந்த 6084 விளையாட்டுவீரர்கள் கலந்து கொண்டார்களாம். 198 வகையான போட்டிகள் இடம்பெற்றன. 1976 ஜுலை 17ஆம் திகதியிலிருந்து ஆகஸ்ட் 1ஆம் திகதி வரை இடம்பெற்ற இந்தப் போட்டிகளை இரண்டாவது எலிசபெத் மகாராணியார் ஆரம்பித்து வைத்தார்.

கனடா ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்பவிழாவில் 73000 பார்வையாளர்கள் கலந்துகொண்டார்களாம். இங்கு ஒலிம்பிக் மைதானத்தில் 56040 இருக்கைகள் உள்ளன. தேவைகருதி மேலதிக இருக்கைகளை தற்காலிகமாகச் சேர்த்துக்கொள்ளவும் வசதியிருக்கிறது. இந்த விளையாட்டுப் போட்டியில் எலிசபெத் மகாராணியின் மகள் இளவரசி ஆன் அவர்களும் பிரித்தானிய விளையாட்டு வீராங்கனையாகக் கலந்துகொண்டார் என்ற தகவலையும் அறியமுடிந்தது.

ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்கவிழாவின்போது பங்குபற்றும் நாடுகளின் சார்பில் அந்தந்த நாட்டு வீரர்களின் அணிவகுப்பு நடப்பது வழக்கம். கனடாவில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுகளின் அணிவகுப்பின்போது இஸ்ரெயில் விளையாட்டுவீரர்கள் தமது நாட்டின் தேசியக் கொடியில் கறுப்புப்பட்டி அணிந்து அணிவகுப்பில் கலந்து கொண்டார்களாம். முன்னைய ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் தமது நாட்டுவீரர்களுக்கு ஏற்பட்ட துன்பியல்

நிகழ்வை நினைவுகூரும் முகமாக அவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து அணிவகுப்புச் செய்தார்கள் என அறியமுடிந்தது.

இந்த ஒலிம்பிக் விளையாட்டரங்கம் மொன்றியலில் உள்ள 'ஒலிம்பிக்பார்க்' என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த விளையாட்டு மைதானத்தை அமைக்கும் வேலைகள் 1970ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டதாம். ஆனாலும் பலதரப்பட்ட பிரச்சினைகளால் கட்டிடவேலைகள் தாமதமாகியது எனவும் கூறினார்கள். இந்த விளையாட்டு அரங்கின் கூரை ஒரு ரொட்டித்துண்டு போன்று (Doughnut) தோற்றம் அளிக்கிறது. இந்தக் கூரையை மேலேயிருந்து தூக்கித் திறந்து மூடக்கூடிய ஒரு பொறிமுறையில் அமைத்திருக்கிறார்கள். கூரையின்மேலே 'கேபிள்'களைத் தொடுத்து அதனை ஓர் உயரமான கோபுரத்துடன் இணைத்துள்ளார்கள். அந்தக் கேபிள்களைத் தாங்கிப்பிடிக்கும் கோபுரம் 574அடி உயரமானதும் 45 பாகையில் சரிந்திருப்பதும் பார்ப்பவர்களை பிரமிப்பில் ஆழ்த்துகிறது. இந்தச் சரிந்தகோபுரம் உலகின் அதியுயரமான சரிந்த கோபுரமாக அமைந்துள்ளது. இந்தக் கோபுரத்தின் கீழ்பகுதியிலே ஒலிம்பிக் நீச்சல் போட்டி களுக்கான நீர்த்தடாகங்கள் அமைந்துள்ளன. இந்த ஒலிம்பிக் விளையாட்டுத் திடலை வடிவமைத்தவர் பிரெஞ்சு கட்டடக் கலை நிபுணரான 'றோகர் ரெயில்லி பேர்ட்' (Roger Taillibert) என்பவராவார்.

ஒலிம்பிக் கோபுரம் ஒரு தனித்துவமான பார்வைக் கூடமாகவும் வடிவமைக்கப் பட்டுள்ளது. அந்தப் பார்வைக் கூடத்தின் உள்ளே இருந்து ஒலிம்பிக் பிரதேசத்தையும் சூழவுள்ள மொன்றியல் நகரையும் பார்வையிடமுடிகிறது. இந்தக் கோபுரத்தை வருடா வருடம் நாற்பது இலட்சத்துக்குக் குறையாத சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுகிறார்களாம்.

இந்தக் கோபுரத்தின் உச்சியை அடைவது ஒரு விந்தையான அனுபவம். கோபுரத்தின் வெளிப்புறத்தில் மின்சாரத்தினால் மேலேஇழுக்கப்படும் ஒரு வண்டியில் (Elevator cabin) பயணிக்கவேண்டும். இந்தவண்டி மணிக்கு

6மைல் வேகத்தில் மேலே இழுத்துச்செல்லப்படுகிறது. இது 872 அடி நீளமான தண்டவாளத்தில் பயணித்து மேலேசெல்கிறது. இந்தத் தண்டவாளம் மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் சற்று உள்குவிந்து (Curved tower's spine) காணப்படுகிறது. பயணிகளை ஏற்றிச்செல்லும் வண்டி ஒரு உள்குவிவான சரிவானபாதையில் மேலேசென்றாலும் பயணிகளின் இருக்கைகள் நேரான நிலையைப் பேணும் தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. இந்த வண்டியில் ஒரேதடவையில் 76 பேர் பயணிக்க முடிகிறது.

இந்தக் கோபுரத்தின் உச்சியிலிருந்து ஒலிம்பிக் கிராமம், ஒலிம்பிக் மைதானத்தின் தொங்கு கூரை, மொன்றியல் நகரின் பெரும்பகுதிகள் ஆகியவற்றைப் பார்வையிடமுடிகிறது. வானம் தெளிவான நாட்களில் 80 கிலோ மீற்றருக்கும் அப்பால் உள்ள ‘லோறென்ரியன்’ மலைத்தொடரை இந்தக் கோபுரத்தின் காட்சிக்கூடத்திலிருந்து பார்க்கமுடியுமாம்.

உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக இத்தாலி நகரில் உள்ள ‘பிஸ’ (Pisa) சாய்ந்தகோபுரம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. அதன் உயரம் 186 அடி ஆகும். அது 5 பாகை மட்டுமே சரிந்துள்ளது. அதனோடு ஒப்பிடுகையில் கனடாவின் ஒலிம்பிக் கோபுரம் பெரும் பிரமிப்பை ஏற்படுத்துகிறது!

# 16

## கனடாவில் பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாக விளங்கும் ஒரு பிரெஞ்சு நகரம்

மொன்றியல் நகரைச் சுற்றிப் பார்த்தபின் நாம் கியூபெக் நகரைச் சென்றடைந்தோம். கியூபெக் நகர், கியூபெக் மாகாணத்தின் தலை நகராகும். வட அமெரிக்காவின் தனித்துவமான சுற்றுலாமைய மாகத் திகழும் இந்நகரில் பிரெஞ்சுக் கலாசாரம் பேணிப் பாதுகாக்கப் படுவதுடன் பல சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த இடங்களும் காணப்படுவதால் உலகப் புகழ் பெற்ற சுற்றுலாத் தலமாகவும் இது விளங்குகிறது.

கனடாவில், கியூபெக் மாகாணம் மட்டுமே பிரெஞ்சு மொழியை உத்தி யோக மொழியாகக் கொண்ட மாகா ணமாகும். கியூபெக் நகரில் ஏறத்தாழ 80 லட்சம் மக்கள் வாழ்வதாகவும் அதில் 65 லட்சம் மக்கள் பிரெஞ்சு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் எனவும் அறிய முடிந்தது. இந்த நகரில் எங்கு பார்த்தாலும் வானளாவிய கட்டிடங் களையே பார்க்க முடிகிறது. இங்குள்ள 20க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் 246 அடிக்கும் கூடுத லான உயரத்தைக் கொண்டவை.

கடல்வழிப் பயணங்கள் இடம்பெற்ற ஆரம்ப காலங்களில் 1535இல் பிரெஞ்சு இனத்தவர் இங்குள்ள 'ரோயல்' துறைமுகப் பகுதியில் குடியேறினர். அவர்களைத் தொடர்ந்து 1610இல் ஆங்கிலேயர் குடியேறினர். 17ஆம் 18ஆம் நூற் றாண்டுகளில் இங்கு ஏற்கனவே வாழ்ந்துவந்த சுதேசிகளும் பின்னர்வந்த ஆங்கிலேயரும் பிரெஞ்சு மக்களுடன் போரில் ஈடுபட்டுவந்தனர். இந்தப் போர் 1759இல் முடிவுக்கு வந்து பிரிட்டிஷ்ஆட்சி ஏற்பட்டது. பரிஸ் உடன்படிக்கையில் இருநாட்டினரும் கையொப்பமிட்டு கனடா பிரித்தானியரின் உரிமையாக்கப்பட்டது.

கியூபெக் நகர் தற்போது இரண்டு பிரிவுகளாக அமைந்துள்ளது. பழையநகர், புதியநகர் என இவற்றிற்குப் பெயரிட்டுள்ளார்கள். இந்தப் பழையநகரை மேல்நகர், கீழ்நகர் என மேலும் இரண்டு பிரிவுகளாக வகுத்துள்ளனர். பழையநகர் கனடா நாட்டில் முதன்முதலில் யுனஸ்கோ மரபுரிமை நகராகப் பிரகடனப்படுத்தப்பட்ட பெருமைக்குரிய நகராகும்.

இந்தப் பழைய நகரினூடாக நடந்துசெல்லும்போது அங்கே வாகனங்கள் செல்லமுடியாத மிகஒடுக்கமான தெருக்களைக் காணமுடிகிறது. அந்தத் தெருக்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெள்ளைக் கற்களிலாலான பழைய கட்டடிங்கள், ஹோட்டல்கள், கடைகள் காணப்படுகின்றன. அங்கு காதலர்கள் பலர் கைகோத்தபடி உலாவிவரும் காட்சி அந்தப் பகுதியை காதலர் சுற்றுலாப்பகுதியோ என எண்ணத் தோன்றுகிறது. சிறிதுதூரம் சென்றால் மாகாண சபையின் பாராளுமன்றத்தைக் காணமுடிகிறது. 1887இல் கட்டிமுடிக்கப்பட்ட அந்தக் கட்டிடம் பிரெஞ்சுக் கட்டிடக் கலையின் அழகைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. பழைய நகர்ப்பகுதியில் பல கிறிஸ்தவ தேவாலயங்கள் காணப்படுகின்றன. அவை நகரின் சமய வரலாற்றை பறைசாற்றுவனவாக அமைந்துள்ளன.

'மாரி கயாட்' (Marie_Guyart) என்பது இந்த நகரில் உள்ள அதிஉயர்ந்த மாடிக்கட்டிடம். 433அடி உயரமான இக்கட்டிடம்



*31* மாடிகளைக்கொண்டது. இந்தக்கட்டிடம் *1972*இல் கட்டி முடிக்கப்பட்டதாம். *1987*இல் இந்தக் கட்டிடத்திற்கு உத்தியோக பூர்வமாக ‘எடிபிஸ் மாரி கயாற்’ (Edifice Marie Guyart) எனப் பெயர்சூட்டப்பட்டதாம். இது உருசுலைன் தாதி ஒருவரின் பெயராகும். இவரே உருசலைன் நாட்டில் சமயத்தை ஸ்தாபிப்பதில் பங்காற்றியவராவார். இந்தக் கட்டிடத்தில் கல்வித் திணைக்களம், விளயாட்டுக்களுக்குப் பொறுப்பான

திணைக்களம் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தித் திணைக்களம் போன்றவை அமைந்துள்ளன.

இதன் 31ஆவது மாடி பார்வைக்கூடமாக அமைந்துள்ளது. பார்வைக்கூடத்தின் சுவர்களில் கியூபெக் மாகாணத்தைப் பற்றிய சரித்திர வரலாறுகள் அடங்கிய ஓவியங்கள் மற்றும் வரைபடங்கள், தகவல்பேரேடுகள் காணப்படுகின்றன. அந்தப் பார்வைக்கூடத்திலிந்து கியூபெக் நகரின் அதியுயர் கட்டிடங்கள், தாவரவியல் தோட்டங்கள், பெருந்தெருக்கள், பாராளுமன்றம், இராணுவமுகாம் கட்டங்கள், ரோஜாத்தோட்டம் போன்ற பலவற்றைப் பார்க்கமுடிகிறது.

இந்த நகரில் உள்ள 'போர்க்களப் பூங்கா' (Battle Fields Park) மிகப் பிரசித்திபெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்படுகிறது. இந்த இடத்திலேதான் 1759இல் நடந்த யுத்தத்தில் பிரெஞ்சுப் படைகள் பிரித்தானியப் படைகளிடம் தோல்வியடைந்தன. 4500இராணுவ வீரர்கள் இங்கே நடத்திய 20 நிமிடத் தாக்குதலில் பிரெஞ்சுப் படைகள் வீழ்ச்சியடைந்த செய்தியையும் அறியமுடிந்தது. இங்குதான் கனடாவின் தேசியகீதமான 'ஓ கனடா' முதன்முதலில் 1880 ஜுன் 24ஆம் திகதி பாடப்பட்டதாம். இந்தப் பூங்கா தற்போது சுற்றுலாச் செல்வதற்கும் பலதரப்பட்ட விளையாட்டுப்போட்டிகள் நடத்துவதற்கும் சைக்கிள் ஓட்டப் பந்தயங்கள் நடத்தவும் பயன்படுகிறது.

அடுத்து நாம் மேல்நகர் (Upper Town) பகுதியைப் பார்வையிட்டோம். அங்குள்ள ஹோட்டல் Chateau Frontenac உலகப் பிரசித்திபெற்றது. 650அறைகள் கொண்ட இந்த ஹோட்டல் கியூபெக் நகரின் பெருமைமிக்க ஹோட்டல்களில் ஒன்றாகத் திகழ்கிறது. அதன்கூரை செப்புத் தகட்டினால் வேயப்பட்டிருக்கிறது. இந்த ஹோட்டலும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் ஓர் இடமாகும். இந்த ஹோட்டலில் எலிசபெத் இளவரசியும் இளவரசர் பிலிப்பும் வந்து தங்குவார்களாம். அத்தோடு ஹொலிவூட் நடிகர்களும் வந்து தங்குவார்களாம். நெதர்லாந்து இளவரசி ஜூலியா னாவும் இங்கு வந்து தங்கியுள்ளார் என்ற தகவலை எமது சுற்றுலாப்பயண வழிகாட்டி கூறினார்.

கீழ்நகரப் பகுதிக்கு சென்றடைவதற்கு 'கேபிள்'களால் இழுத்துச்செல்லப்படும் ஒரு தனித்துவமான சிறியவகை 'ரயில்' வண்டி (Funicular railway) பாவனையில் உள்ளது. இந்த ரயில் கீழ்நகர்சென்று மீண்டும் மேல்நகருக்கு வருகிறது. கீழ்நகர் மிக ஒடுங்கிய தெருக்களைக்கொண்ட தாகக் காணப்பட்டது. கீழ்மட்ட உழைப்பாளிகள், பொது மக்கள் வாழும் பிரதேசமாகவும் காணப்பட்டது. இங்கு சிறு வியாபாரிகளும் மிருகத்தோல் ஏற்றுமதிசெய்யும் வியாபா ரிகளும் தொழில்புரிகின்றனர்.

கனடாவைப் பிறப்பிடமாகக்கொண்ட நாடுகாண் பயணி ஜோலியற் இங்கு பிறந்ததாகவும் அவரே மார்க்குவேற் என்ற பாதிரியாருடன் இணைந்து மிஸிஸிப்பி ஆற்றைக் கண்டுபிடித்தாகவும் கூறினார்கள்.

இங்குள்ள 'ரயூ டி பெரிற் சம்பிளெயின்' (Rue de Petit Champlai) என்ற தெரு வட அமரிக்காவின் அதிபழைய தெருவாகக் கணிக்கப்படுகிறது. இத்தெரு 1608இல் அமைக்கப் பட்டதாம். அப்பகுதி ஒரு சிறு கிராமம் போன்று அமைந்துள்ளது. 50 கடைகள்வரை அங்கு காணப்படுகின்றன. அக்கடைகள் பலவற்றில் நினைவுப் பரிசுப்பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், உடுப்புகள், கண்ணாடிப் பொருட்கள், 'செரிமிக்' அணிகலன்கள், தோல்பைகள், கைத்தொழில்பொருட்கள் விற்கும் கடைகளைக் காணமுடிந்தது. இங்குள்ள கட்டி டங்கள் சில 1600களில் கல்லால் கட்டப்பட்டவை என அறிய முடிந்தது.

அரசியல் ரீதியாக 1970இலிருந்த கியூபெக் மாகாணம் தனிநாடாகப் பிரியவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துச் செயற்பட்டுவருவதாக அறியமுடிந்தது. ஆனாலும் ஒன்றிணைந்த கனடாவையே பெரும்பான்மை மக்கள் விரும்புவதால், கியூபெக் மாகாணம் பிரிந்து செல்லாதவாறு மத்தியஅரசு பலதரப்பட்ட சலுகைகளை அந்த மாகாணத்துக்கு வழங்கிவருவதாகவும் அறியமுடிகிறது.

# 17

## பழைமை மிக்கதும் இயற்கைக் காட்சிகள் நிறைந்ததுமான கிங்ஸ்ரன் நகர்

எமது சுற்றுலாப் பயணத்தில் இடங்களைப் பார்ப்பது ஒருவகை அனுபவம் என்றால், எம்மோடு சேர்ந்து பயணிக்கும் பல்வேறு நாட்டினர்களோடு அளவளாவுவதும் அவர்களது நாட்டைப்பற்றிக் கேட்டு அறிந்து கொள்வதும் பிறிதொரு அனுபவமாக எமக்கு இருந்தது.

தினமும் நாம் பயணிக்கும் பஸ் இருக்கைகளை சுழற்சி முறையில் மாற்றிவிடுகிறார்கள். அதாவது முதல்நாள் பஸ்ஸின் முன்பகுதி ஆசனத்தில் இருந்து பயணித்தவர்கள் அடுத்தநாள் நடுப் பகுதி ஆசனங்களில் அமர வேண்டும். மூன்றாம்நாள் அவர்கள் பின்வரிசை ஆசனங்களில் பயணிக்க வேண்டும். பயணிகளின் வசதிகள் சமமாக இருக்கவேண்டும் என்பதற் காகவே இந்த ஏற்பாடு. இரண்டாம் நாள் பயணத்தின்போது எங்க ளுக்கு முன்பகுதியில் இருந்து பயணிக்கும் வாய்ப்புக்கிடைத்தது. எமக்குப் பக்கத்து வரிசையில் இருந்தவர் நெதர்லாந்தைச் சேர்ந்தவர். அவர் பெர்ஸி நாட்டில் பிறந்தவராம். தற்போது நெதர்லாந்தில் வாழ்கிறார். அவரது

மனைவி ஓர் இந்தியப்பெண். மலையாளத்தைச் சேர்ந்தவர். அவர்கள் இருவரும் சில ஆண்டுகளுக்குமுன் இந்தியாவில் சுற்றுலா மேற்கொண்டார்களாம். அவர்கள் இந்தியாவில் இருந்த காலத்திலேதான் பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார். இலங்கைப் பிரச்சினையில் ராஜீவ்காந்தி தேவையற்ற முறையில் மூக்கை நுழைத்தபடியால்தான் அவர் கொல்லப்பட்டார் என்ற கருத்தை அவர் கூறினார். அத்தோடு இலங்கையில் நடைபெற்ற போர் காரணமாகவே உலக அரங்கில் ஸ்ரீலங்கா பற்றி பலருக்கும் தெரியவந்துள்ளது என்ற கருத்தையும் கூறினார்.

பக்கத்தில் இருந்த ஆங்கிலேயர் அவரது கூற்றை மறுத்துரைத்தார். கிறிக்கட்போட்டியில் உலக சம்பியன் பட்டத்தை ஸ்ரீலங்கா பெற்றுக்கொண்டபோதுதான் தனக்கு அந்த நாடுபற்றி தெரியவந்தது என்றார்.

இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த பலரும் தற்போதய இலங்கை அரசியல்பற்றி எம்மிடம் கேட்டுத் தெரிந்துகொண்டனர். நாங்கள் தமிழர் என்று அறிந்து கொண்டதும் சிலர் அனுதாபத்துடன இலங்கையில் தமிழர்களின் தற்போதைய நிலைமை பற்றி விசாரித்தனர். ஒருசிலர் தமது நாடுகளிலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் குடியுரிமை பெற்று சுதந்திரமாக நல்லநிலையில் வாழ்கின்றனர் என்றனர்.

நான் அந்த நெதர்லாந்துக்காரரிடம் கூறினேன், “உங்கள் நாட்டைப்பற்றிய கதையொன்று எனக்குத் தெரியும். ‘நாடுகாத்த சிறுவன்’ என்ற அந்தக் கதையை நான் சிறுவயதில் படித்திருக்கறேன்” என்றேன்.

அந்தக்கதை அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. அதைக் கூறுங்கள் என்றார். “நெதர்லாந்து கடல்மட்டத்துக்குக் கீழே இருக்கும் நாடு. அங்கு கடல்நீர் அடிக்கடி உள்ளேவந்து பேரழிவை ஏற்படுத்துவதால் அதைத்தடுக்கும்பொருட்டு கடலோரமாக மிகப் பெரிய அணை ஒன்றைக் கட்டினார்கள். அப்படிக் கட்டிய அணையில் ஒருநாள் சிறிய துவாரம் ஒன்று ஏற்பட்டு நீர்கசிவதை ஒரு சிறுவன் கண்டான். கடல்நீர் ஊருக்குள் செல்வதைத்தடுக்க தனது பெருவிரலால் அந்தத் துவாரத்தை மூடிக்கொண்டே இருந்தான். அவனை

யாரும் காணவில்லை.உதவிக்கு யாரும் வரவில்லை. இரவு முழுவதும் துவாரத்தை அடைத்தபடி இருந்தான். துவாரம் வரவரப் பெரிதாகி கடைசியில் சிறுவனையும் உதைத்துக் கொண்டு நாட்டினுள் நீர் புகுந்து சிறுவனையும் அள்ளிச்சென்றது. சிறுவனது உயிர்பிரிந்தது. இக்கதை ஐரோப்பிய நாடுகளில் பரவி இன்று உலக நாடெங்கும் சிறுவர்க்கான கதையாகியுள்ளது. ஒரு காலத்தில் எமது நாட்டின் கல்வித்திணைக்களத்தின் பாடநூலில் இக்கதை இடம் பெற்றிருந்தது" என்றேன்.

தான் பேர்சிநாட்டில் சிறுவயதில் கல்வி கற்றதனால் அந்தக் கதையை அறியும் சந்தர்ப்பம் தனக்கு ஏற்படவில்லை என்றார் அவர்..

நாங்கள் பயணித்த பஸ் 'கிங்ஸ்ரன்' நகரைச் சென்றடைந்தது. இந்த நகர் ஒரு கடற்கரையை ஒட்டிய நகராகும். அங்குள்ள கடற்கரையின் ஓரமாகப் பல படகுத் துறைகளைக் காணமுடிந்தது. உல்லாசப் பயணிகளைத் தமது படகுகளில் ஏற்றிச்சென்று கடல் பயண அனுபவத்தைத் தரும் படகோட்டிகள் மும்முரமாகத் தமது தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கிங்ஸ்ரன் நகரில் சிறிது தூரம் உலாவி வந்தோம். கடற்கரையின் இதமான குளிர்காற்று உற்சாகத்தைத் தந்தது. பரந்த பிரதேசத்தைக்கொண்ட நகர் ஆகையால் எங்கு பார்த்தாலும் மேல்மாடிகளற்ற பெரிய வீடுகளைக் காணமுடிந்தது. நாம்சென்ற மற்ற நகர்களில் காணப்பட்டதுபோன்று மாடிவீடுகளை இங்கு காணமுடியவில்லை. சுற்றுலாப்பயணிகள் தங்குவதற்கான ஹோட்டல்கள் மற்றும் கேளிக்கைக்கூடங்கள் இந்நகரில் அதிகமாகக் காணப்பட்டன. பெருந்தெருக்கள் திட்டமிட்ட முறையில் அமைந்திருப்பதையும் காணமுடிந்தது. மொத்தத்தில் பழமைமிக்கதும் இயற்கைக் காட்சிகள் நிறைந்ததுமான ஒருநகரமாக கிங்ஸ்ரன் நகரைப் பார்க்கமுடிந்தது.

இங்குள்ள 'கிங்ஸ்ரன் நகர மண்டபம்' 19ஆம் நூற்றாண்டில் கனடாவில் கட்டப்பட்ட மிகச்சிறந்த கட்டிடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது கனாடாவின் தேசிய மரபுரிமைப் பிரதேசமாக 1961இல் அரசாங்கத்தால் பிரகடனப்

படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் உள்நாட்டவர்களும் இந்த நகரமண்டபக் கட்டிடத்தைப் பார்வையிடுகிறார்கள்.

1840களில் கிங்ஸ்ரன் நகரை கனடாவின் மாகாணத் தலைநகராக்கத் தீர்மானித்தார்களாம். அதன் காரணமாகவே இந்த நகரமண்டபம் நவீனமோஸ்தரில் அமைக்கப்பட்டது. இந்த மண்டபம் அக்காலத்தில் புகழ்பெற்ற வடிவமைப்பாளரான 'ஜோர்ஜ் பிறவுன்' என்ற வடிவமைப்பாளரால் வடிவமைக்கப் பட்டது. ஆனால், பின்னர் கிங்ஸ்ரன் நகரைத் தலைநகராக்கும் திட்டம் கைவிடப்பட்டதென அறியமுடிந்தது. இந்த மாபெரும் கட்டிடம் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டது. ஒன்ராறியோ ஆற்றை நோக்கி அமைந்திருக்கும் இந்த நகரமண்டபத்தின் மேற்பகுதி ஒரு குவிமாட அமைப்பில் உள்ளது. அதன் நான்கு புறத்திலும் மணிக்கூடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இக்கட்டிடத்தில் அரசாங்க அலுவலகங்கள் ஒருபுறத்தில் இருக்கின்றன. மறுபுறத்தில் தபாற்கந்தோர், சுங்கத் திணைக்களம், கலையரங்கு, களஞ்சியஅறைகள், வங்கிக்கட்டிடங்கள், போன்றவற்றைக் காணமுடிந்தது. கட்டிடத்தின் மேற்குப் பகுதியில் விரிவுரைமண்டபங்கள், பொதுக்கூட்டங்கள் நடைபெறும் மண்டபங்கள் காணப் படுகின்றன. இக்கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்ட காலத்திலிருந்தே இங்கு ஒரு பொலிஸ் நிலையமும் இயங்கிவருகிறது.

இந்த கிங்ஸ்ரன் நகருக்கு முக்கியத்துவத்தையும் பெருமையையும் அளிப்பது இங்குள்ள 'குவீன்ஸ் பல்கலைக்கழகமா'கும் (Qeeens University). பழமைவாய்ந்த இந்தப் பல்கலைக்கழகம் 1841இல் அப்போதைய அரசியாக இருந்த விக்டோரியா மகாராணியின் பணிப்பின்பேரில் உருவாக்கப்பட்டது. தற்போது இங்கு 28,272 மாணவர்கள் கல்விகற்கிறார்கள் எனவும் 3925 கல்விசார் உத்தியோகத்தர்கள் பணிபுரிகிறார்கள் எனவும் அறிந்தபோது இந்தப் பல்கலைக் கழகத்தின் பிரமாண்டத்தை அனுமானிக்க முடிந்தது.

இந்த நகரை நாம் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் கடற்கரையோரமாக சில அதிசயப் பறவை களைக் காணமுடிந்தது. அவற்றைக் 'கனடாவாத்து' எனப்



பயணிகள் வழிகாட்டி கூறினாள். கனடாவிலே மட்டும் இந்த இன வாத்து காணப்படுவதால் இதனைக் கனடாவாத்து (Canada Goose) என்கிறார்கள். இந்தப் பறவையின் முதுகுப்புறமும் பின்பகுதியும் காவிநிறத்தில் உள்ளன. அதன் தலையும் கழுத்தும் கறுப்பு நிறம். தாடை வெள்ளை நிறம். இந்த வாத்து பறக்கும்போது தலையைச் சிலுப்புகிறது. அப்பொழுது அதன்தாடை பளபளப்பாகத் தோன்றுகிறது. நன்றாக வளர்ந்த ஆண் வாத்து எட்டு கிலோகிராம் வரை இருக்கும் எனச் சொல்கிறார்கள். கனடாவில் குளிர்காலம் வந்துவிட்டால் இந்த வாத்துக்கள் தென்புலத்தில் உள்ள ஐக்கிய அமெரிக்கா, மெக்சிக்கோ போன்ற நாடுகளுக்கு இடம்பெயருமாம். அவ்வேளையில் அவை கூட்டம் கூட்டமாக ஓயாது சத்தம் எழுப்பியபடி பறந்துசெல்வதைப் பார்த்தும் கேட்டும் மகிழக்கூடியதாக இருக்கும் என்கிறார்கள். இடப்பெயர்வின்போது அவை பல்லாயிரம் கிலோமீட்டர்வரை பறந்துசெல்லுமாம். இப்பறவை கனடாவின் தேசியப்பறவை என்றும் அறியமுடிந்தது.

# 18

## கனடாவில் ஆச்சரியம் தரும் ஆயிரம் தீவுகள்!

நாங்கள் விசைப்படகு ஒன்றில் பயணித்து ஆயிரம் தீவுகளைச் சுற்றிப் பார்த்தோம். அப்படகு மூன்று தளங்களைக்கொண்டது. ஐந்நூறு பேர்கள்வரை அதில் ஒரே சமயத்தில் பயணிக்க முடிகிறது.

“அதெப்படி ஆயிரம் தீவுகள் கூட்டமாக ஒரே பகுதியில் தோன்றின?” மனைவி ஞானம் தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை சுற்றுலாப் பயண வழிகாட்டியிடம் கேட்டாள்.

“கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஓடும் நதி ‘செயின்ற் லோறன்ஸ்’. இந்த நதி இரண்டு நாடுகளுக்கும் இடையில் எல்லைக் கோடாக அமைந்துள்ளது. வடதுருவத்தில் உறையும் பனிக் கட்டிகள் கரையும்போது கீழ் நோக்கிப் பாய்ந்து ஓடும் நீர் அருவியாகவும், ஆறாகவும், தேங்கி நிற்கும் குளங்களாகவும நீர் விழ்ச்சிகளாகவும், ஏரிகளாகவும் ஆகின்றன. உருகிவரும் நீர் ஓடிவரும்போது பாதையெங்கும் ஆழமான பள்ளங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய பள்ளங்கள் ஏற்படும்போது அதன் இரு

மருங்கிலும் மணற்பரப்புகளும் திட்டுக்களும் ஏற்படுகின்றன. இந்தத் திட்டுக்கள் காலப்போக்கில் தீவுகளாக மாறிவிடுகின்றன.

இவ்வாறு உருவானவைதான் ஆயிரம் தீவுகள். உண்மை யில் இந்த ஆற்றின் நடுவே ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு தீவுகள் உள்ளன என்பதுதான் சரியான கணக்கு. பலதீவுகள் மிகச் சிறியவையாகத் தெரிந்தன. ஆரம்பத்தில் அதிகமான தீவுகளை ஒரே இடத்தில் ஒருசேரப் பார்த்த ஒரு பிரெஞ்சுக்காரர் அதிசயித்தில் இத்தீவுக் கூட்டத்தை 'ஆயிரம்தீவுகள்' என்று அவசரமாகப் பெயரிட்டுவிட்டார். அவரிட்ட பெயரே நிலைத்துவிட்டது" என விளக்கம் தந்தாள் பயணிகள் வழிகாட்டி.

இந்தத் தீவுகளில் சில அமெரிக்காவுக்கும் சில கனடாவுக்கும் சொந்தமாக உள்ளன. ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த நதியின் 200 கிலோ மீட்டர் தூரம் அமெரிக்காவுடன் இணைந்துள்ளது. மிகுதியான 800 கிலோமீட்டர் கனடாவுக்குச் சொந்தமானது.

இத்தீவுகள் தொடர்பான வரலாற்றுத் தகவல் ஒன்றையும் பயணிகள் வழிகாட்டி எமக்குக் கூறுவதற்குத் தவறவில்லை. சில நூற்றாண்டுகளுக்கு முன் இத்தீவுகள் சமூக விரோதிகளின்



இருப்பிடமாக இருந்ததாம். இவர்கள் பாய்மரக் கப்பல்களில் சென்று கடற்கொள்ளைகளை மேற்கொண்டனர். நீர்வாழ் உயிரினங்கள் இவர்களால் அழிக்கப்பட்டன. அமெரிக்காவோ அல்லது கனடாவோ இவர்களுடைய செயற்பாடுகள்பற்றி பெரிதும் அலட்டிக்கொள்ளவில்லையாம்.

ஆனால் 'யுனெஸ்கோ' அமைப்பு இராணுவத்தின் உதவியுடன் களத்தில் இறங்கி சமூகவிரோதிகளை அகற்றிவிட்டு திட்டப்பணிகளை மேற்கொண்டதாம். பத்துலட்சம் கிலோமீட்டர் பரப்பளவுகொண்ட இப்பகுதியை 'உயிரினப் பாதுகாப்புமையம்' எனப் பிரகடனப் படுத்தியதோடு சுற்றுலாப் பயணமையமாகவும் ஆக்கியது. தற்போது இருநாடுகளின் மேற்பார்வையில் இவை இயங்குகின்றன.

இங்கு, தீவு என்பதற்கு ஒரு இலக்கண வியாக்கியானம் வைத்திருக்கிறார்கள். அதாவது வருடம் முழுவதும் நீரின் மேற்பரப்பில் தீவின் நிலப்பரப்புத் தெரியவேண்டும். மற்றது ஒரு மரமாவது அந்த நிலப்பரப்பில் இருக்கவேண்டும்.

இங்கு ஒரு சதுர மீற்றருக்குக் குறைவான தீவும் இருக்கிறது. 100சதுர கிலோமீற்றர் அளவில் பெரியதீவும் இருக்கிறது. ஒரு பரிசுக்குலுக்கலில் ஒருவர் அதிர்ஷ்ட சாலியாகி ஒரு குட்டித்தீவு அவருக்குப் பரிசாகக் கிடைத் திருக்கிறது. அவர் அதற்கான பரிசுச்சீட்டை இரண்டு டொலருக்கு வாங்கினாராம். இப்போது அவர் அந்தத் தீவின் சொந்தக்காரர் ஆகியிருக்கிறார்.

இந்த ஆயிரம் தீவுகள் ஒரு காலத்தில் கேட்பாரற்றுக் கிடந்தன. இரண்டு டொலருக்குக்கூட அவற்றைச் சிலர் வாங்கினார்கள் என அறியமுடிந்தது. இன்று அவற்றின் விலை பல லட்சம் எனக் கூறினாள் பயணவழிகாட்டி.

இத்தீவுகள் அப்பகுதிக்கேயுரிய கற்பாறைகளாலும் வெண்மணலாலும் ஆனவை. அவற்றிலே உயரங்குறைந்த மரங்கள் செழித்துவளர்ந்திருப்பதையும் காணமுடிந்தது. சில தீவுகளில் வீடுகளைக் கட்டிவைத்துள்ளார்கள். ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளன. இத்

தீகளில் ஆட்களைவிட அதிகமாக வீடுகளையே காண முடிந்தது. பெரும்பாலான வீடுகள் ஆளில்லாமல் கிடந்தன.

இந்த வீடுகளுக்கு நீருக்கு அடியில் செல்லும் இணைப்புகள் மூலம் எரிவாயு, தொலைபேசி, மின்சாரம் போன்ற இணைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனவும் அறிய முடிந்தது.

இத்தீவில் வாழ்பவர்கள் விசைப்படகுகள் வைத்திருக் கிறார்கள். சில தீவுகளில் பள்ளிக்கூடங்கள் உண்டு. அத் தீவுகளில் அதிகளவு மக்கள் வாழ்கிறார்கள்.

எமது சுற்றுலாப் பயணவழிகாட்டி தூரத்தே தெரியும் ஒரு தீவைக்காட்டி அத்தீவுக்கு 'சிங்கர் ஐலன்ட்' என்று பெயர் எனவும் அங்குள்ள சிவப்புநிற மாளிகை ஒரு காலத்தில் சிங்கர் தையல் மெஷின் கம்பனியின் உரிமையாளருக்குச் சொந்தமானதாக இருந்தது எனவும் அதனால் அந்தத் தீவுக்கு அந்தப் பெயர் நிலைத்துவிட்டது எனவும் கூறினாள். அந்தத்தீவு அமெரிக்காப் பகுதியில் இருக்கிறது என்ற தகவலையும் அவள் கூறத்தவறவில்லை. இங்குள்ள தீவுகளை முக்கிய சுற்றுலாத் தலமாகவும் உயர்விலையில் விற்கக்கூடிய பகுதிகளாகவும் மாற்றிவைத்துள்ளார்கள்.



சின்னப் படகுகளை ஓட்டுவதற்கான 'லைசன்ஸ்' இருந்தால் சின்னப்படகு ஒன்றில்ஏறி ஏதாவது ஒரு தீவில் போய் இறங்கித் தங்கிவிட்டு வரலாம். மீன்பிடிக்கத் தெரிந்தால் அங்கு மீன்களைப்பிடித்துச் சமைத்துச் சாப்பிடலாம். வீடுகளை நாட்கணக்கில் வாடகைக்கு எடுத்துக்கொண்டு தங்கிக்கொள்ள வசதியிருக்கிறது என்ற விபரங்களையும் பயணவழிகாட்டி கூறினாள்.

அமெரிக்க, கனடிய பணக்காரர்கள் ஒரு வீட்டையோ ஒரு தீவையோ வாங்கி வைத்துக்கொண்டு விரும்பியபோது அங்குவந்து தங்குவார்களாம்.

உலகின் பெரும் பணக்காரர்கள் சிலருக்கும் இங்கு வீடுகள், தீவுகள் இருக்கின்றன.

அமெரிக்காவில் உள்ள வடக்கு நியூயோர்க் நகரத்தையும் கனடா நாட்டில் உள்ள ஒன்றாரியோ நகரத்தையும் இணைத்து லேறன்ஸ் நதியின் மேலாக ஒரு பாலத்தை அமைத்துள்ளார்கள். இதனை 'ஆயிரம்தீவுகள் பாலம்' என்று பெயரிட்டுள்ளார்கள்.

பாலத்தின் இருபுறமும் தனித்தனியான வாகனப் போக்குவரத்துக்கான தெருக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாதசாரிகளுக்கும் நடந்துசெல்வதற்கான தனியான பாதைகள் உள்ளன. இந்தப் பாலத்தின் நீளம்13.7 கிலோமீற்றர். இந்தப் பாலத்தைக் கட்டிமுடிக்க பதினாறு மாதங்கள் எடுத்ததாம்.

1937ஆம் ஆண்டு இந்தப்பாலம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. பின்னர் 1959இல் இப்பாலம் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டது என அறியமுடிந்தது.

வருடத்தில் ஒரு கோடிக்கும் அதிகமான வாகனங்கள் இப்பாதையால் சென்று வருவதாகவும் அறியமுடிந்தது.

# 19

## பல்லின மக்கள் வாழும் கனடாவில் தமிழ் மாணவர் - களுக்கான கல்வி வசதிகள்

சுற்றுலாப்பயண முகவர்களூடாக ஒழுங்கு செய்யப்பட்ட எமது சுற்றுலா நிறைவடைந்ததும் நாம் சிலநாட்கள் ஓய்வெடுத்தோம். அவ்வாறு ஓய்வெடுத்த நாட்களில் புலம்பெயர்ந்துசென்ற ஈழத்தமிழர்களது இளந்தலைமுறையினரின் கல்வி, கலை, கலாசாரம் தொடர்பான பங்களிப்புகள் பற்றிப் பலரிடம் விசாரித்து அறிந்து கொண்டோம்.

நாம் தங்கியிருந்த ஒன்ராறியோ மாகாணத்தின் ரொரன்ரொ நகரில் 160க்கும் மேற்பட்ட மொழிகள் பேசும் பல்லினமக்கள் வாழ்கிறார்கள். அப்படியான ஒரு சூழலில் புலம்பெயர்ந்துசென்ற ஈழத்தமிழ் மக்களின் பிள்ளைகள் எவ்வாறு அங்குள்ள பல்லின மாணவர்கள் படிக்கும் பாடசாலைகளில் பல்லின மக்களின் பிள்ளைகளோடு கலந்து கல்விகற்கிறார்கள்? அவர்களால் அங்கு தமிழ்மொழியை, தமிழ் கலாசாரத்தைப் பேணமுடியுமா என்பதை அறிய விளைந்தோம். நாம் அங்கு சந்தித்த நண்பர்கள்,

உறவினர்களிடம் அவர்களது பிள்ளைகளின் கல்விவசதி பற்றிக் கேட்டு அறிந்துகொண்டோம்.

கனடாவுக்குப் புதிதாகவந்து குடியுரிமைபெற்று கனடாப் பிரஜைகளாக வாழ்பவர்களுக்கு உதவும்வகையில் அங்கு 'கல்விச் சபைகள்' இருக்கின்றன. புதிதாகக் கனடாவுக்கு வரும் பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் இந்நாட்டின் கல்விமுறைகள், அவர்களுக்குத் தேவையான குடியமர்வுச் சேவைகள் பற்றிய விளக்கங்கள், வழிகாட்டல்கள் என்பன வற்றை இந்தக் கல்விச்சபைகள் கொடுத்து உதவுகின்றன. இச்சபைக்குத் தேவையான நிதியை குடிவரவு அமைச்சு வழங்குவதோடு மேற்பார்வையும் செய்கிறது.

இக் கல்விச்சபைகளில், 'பல்கலாசாரத் தொடர்பு அலுவலர்' என்ற உத்தியோகத்தர் (Multi Cultural Liaison Officer) கடமையில் உள்ளார். இவர் முக்கியமாகப் புதிய குடிவரவாளர்களாக வரும் மாணவருக்கும் பெற்றோருக்கும் பேருதவியாக பாடசாலைகளிற் செயற்படுவார்.

சில மாணவர்கள் புதிதாகவரும் மாணவர்களைத் துன்புறுத்தும்வகையில் அவப்பெயர்சொல்லி அழைத்தல், அவதூறான வார்த்தைகளால் ஏசுதல், முதலான செயற்பாடு களை மேற்கொள்வர். இதனால் புதிய மாணவர்கள் மன அழுத்தம், விரக்தி, வெறுப்பு, பாடசாலைக்குப் போகாது விடுதல் போன்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுவர். இவற்றைத் தடுக்கும்வகையில் பாடசாலைச்சபைகள் திறம்பட இயங்குகின்றன.

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகள் மூலமாக கல்வி கற்பிக்கப்படுகிறது. ஆங்கிலமொழி மூலமாகவே கல்விகற்பதை ஈழத்தமிழ் மக்கள் பெரிதும் விரும்புகின்றார்கள். ஆங்கிலமொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மாணவர்களுக்கு ஆங்கில அறிவைக் குறுகியகாலத்தில வளர்த்து அவர்கள் ஏனைய மாணவர்களுடன் சரிநிகராகக் கல்விகற்று ஆங்கிலமொழி ஆளுமையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் விசேட கற்கைநெறி வகுப்புகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.



கனடாவுக்கு வரும் குடிவரவாளர்கள், உடனடியாகத் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்துவிட வேண்டும் என்பது அந்த நாட்டுச் சட்டமாகும். ஒருநாள் பிந்திவந்தால்கூட அவர்கள் வகுப்பில் நடைபெறும் பல விடயங்களை இழந்துவிடுகின்றனர். கனடாவுக்கு வந்த புதிய மாணவன் பதின்மவயது உடையவராக இருந்தால் அந்த மாணவனை பாடசாலையில் சேர்த்துக்கொள்வதற்கு அம்மாணவனின் கல்வித்தரம் முதலில் மதிப்பீடு செய்யப்படும். இந்த மதிப்பீட்டினைச் செய்வதற்குத் தனியான நிலையங்கள் இருக்கின்றன. புதியமாணவனின் கணிதஅறிவும் ஆங்கில அறிவும் எழுத்துமூலம் மதிப்பிடப்படுகின்றன. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அம்மாணவன் கல்விகற்க வேண்டிய பாடசாலை, எந்த வகுப்பில் சேரலாம் என்பன தீர்மானிக்கப்படும். ஆங்கில அறிவு குறைந்த மாணவருக்கு விசேட பயிற்சிபெற வகுப்புகள் ஒழுங்குசெய்யப்படும். இலங்கையில் ஆசிரியரை மையப்படுத்திய கல்வி பற்றியே பெற்றோர் அறிந்திருப்பர். பாடசாலையில் பிள்ளையைச் சேர்த்துவிட்டால் ஆசிரியர் கவனித்துக்கொள்வார் என்பது பெற்றோரின் நம்பிக்கை. ஆனால் கனடாவில் அப்படியல்ல.

கனடியப் பாடசாலைகளில் மாணவர்களை மையப்படுத்திய கற்பித்தல்முறையே பின்பற்றப்படுகின்றது. எனவே புதிய வகுப்பறைக் கற்றல்முறையிலே தமது பிள்ளைகள் பயிலும்போது புதிய குடிவரவாளர்களாகிய பெற்றோர் தம் பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியரை வாரம் ஒரு முறையாவது சந்தித்து பிள்ளையின் கற்றல்பற்றி விசாரிப்பது அவசியமாகிறது.

பாடசாலைகளில் பல்வேறு மொழிகளைப்பேசும் குடிவரவாளர்களுக்கும் ஏற்புடையவகையில் அனைத்துலக மொழித்திட்டத்தை வகுத்து அதன்கீழ் ஒவ்வொரு மொழிக் குடும்பத்தினரும் தத்தம் மொழியையும் பண்பாட்டு நடை முறைகளையும் பேணிக்கொள்ள பாடசாலை வாய்ப்பு அளிக்கிறது. பாலர்வகுப்புமுதல் எட்டாம் வகுப்பவரை தமது மொழிகளைக் கற்கும் வாய்ப்பினை அனைத்துலக மொழிகளுக்கான திட்டம் வழங்குகிறது. வார இறுதி நாட்களில் இத்தகைய மொழிவகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும் தமிழ், சீனம், கிரேக்கம் முதலிய மொழிகளை 12ஆம் தரம் வரைக்கும் தொடர்ச்சியாகப் பயிலவும் அம்மொழிக் கல்வியிலே திறமைச்சித்திகள் பெற்றுக்கொள்ளவும் பாடசாலைக் கல்விச்சபைகள் வாய்ப்பு அளிக்கின்றன.

பாடசாலைகள் தொழில்முறைக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் முதலியவற்றில் தமிழ் மாணவர்களின் கல்விச் சாதனைகள் சிறந்து விளங்குவதாக அறியமுடிகிறது. கடந்த 35 வருடத்துக்குமேலாக கனடா கல்வி முறையில் கல்வி கற்றுவரும் ஈழத் தமிழ்மாணவர்கள் பல்வேறு துறைகளிலே நிபுணத்துவம் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர் என்பதையும் அறியமுடிந்தது.

கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த இளம் தலைமுறை யினர் மிகவெற்றிகரமாக ஆங்கிலத்தில் நன்கு ஆளுமையை வளர்த்துக்கொண்டு கல்விகற்றுத் தமது வாழ்க்கைப் பயணத்தை செவ்வனே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இங்கு பிறந்துவளரும் பிள்ளைகள் ஆங்கிலத்தில் மிகத்

திறமையுடன் காணப்படுகின்றனர். கனடா அரசு தமிழ்மொழியைக் கற்பதற்குச் சகல வசதிகளையும் ஏற்படுத்தித் கொடுத்துள்ளது. அத்துடன் இங்குள்ள தமிழர் அமைப்புகள், ஆலயங்கள், கலை பண்பாடு சார்ந்த மன்றங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் போன்றவையும் தமிழ் வகுப்புகளை நடத்தி வருகின்றன.

ஒன்ராறியோ மாகாணத்தில் உயர்நிலைக் கல்விப் பாடத்திட்டத்தில் 9ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம் வகுப்புகளில் கற்பிக்கும் பாடங்களில் ஒன்றாக தமிழ்மொழியும் அங்கீகரிக்கப் பெற்றுள்ளது. எனவே தமிழ்மொழியைக் கற்று அதில் திறமைச் சித்திபெற்று பல்கலைக்கழகத்திற்கோ அல்லது தொழில்நிலைக் கல்லூரிக்கோ அனுமதி பெறுவதற்குரிய வாய்ப்பையும் ஒன்ராறியோ மாகாண அரசு தமிழ் மாணவருக்கு வழங்கியுள்ளது.

# 20

## கனடாவில் ஈழத்தமிழ் இளந் தலைமுறை யினரின் கலையார்வம்

நாங்கள் கனடாவில் இருந்த காலகட்டத்தில் பல கலை இலக்கிய நிகழ்வுகளில் பங்குபற்றும் வாய்ப் புக் கிடைத்தது. அவ்வாறு பங்கு பற்றிய வேளைகளில் கனடாவில் வாழும் ஈழத்தமிழரது இளந் தலைமுறையினரின் கலையார் வத்தையும் அவர்களது கலைசார்ந்த பங்களிப்புகளையும் எம்மால் அவதானிக்க முடிந்தது. 'கனடா எழுத்தாளர் இணையம்' என்ற அமைப்பின் வெள்ளிவிழாவில் பங்கு பற்றி வாழ்த்துரை வழங்கவும் அவர்களது நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கவும் எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்றைய விழாவில் இலக்கிய நிகழ்வுகளோடு கலை இலக்கிய நிகழ்வுகளும் இடம் பெற்றன. வாய்ப்பாட்டு, நடனம், வீணாகானம், நாட்டியநாடகம் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. இத்தகைய நான்குவகையான கலை இலக்கிய நிகழ்வுகளை சமகாலத்தில் ஒரே மேடையில் நமது நாட்டில் காண்பது அரிது என்றே கூறவேண்டும்.

அன்றைய நிகழ்வில மயூரன் தனஞ்சயன், தாமிரா ரஜிகான், ஆகியோரின் இன்னிசை விருந்து, ‘சதங்கை நர்த்தகி’ ஜனனிகுமார் அவர்களது வரவேற்பு நடனம், ‘இசைக் கலாமணி’ ஜெயந்தி இரட்னகுமாரின் மாணவிகளது வீணாகான இசைநிகழ்ச்சி, ஹரிகிஷன் எஸ்.நாயர் ஆகியோர் பங்குபற்றிய கவின் கலாலயாவின் ‘கட்டைவிரல்’ நாட்டிய நாடகம் ஆகியவற்றைக் கண்டுகளித்தோம். இந்நிகழ்ச்சிகள் யாவும் உயர்ந்ததரத்தில் இருந்தன.

விழா நிறைவடைந்ததும் எழுத்தாளர் இணையத்தின் தலைவராக விளங்கும் பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர் களைச் சந்தித்து அன்றைய கலைநிகழ்வுகள் உயர்ந்ததரத்தில் இருந்ததைப் பாராட்டினேன். அத்தோடு கனடாவில் உள்ள, ஈழத்தமிழரின் கலைஇலக்கியச் செயற்பாடுகள் குறித்தும் அவரிடம் பலவற்றைக்கேட்டு அறிந்துகொண்டேன்.

கனடாவில் வாழும் பெரும்பாலான ஈழத்தமிழ்ப் பெற்றோர்கள், தமது பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பண்பாடு தெரியவேண்டும் என்பதில் முனைப்புடன் இருக்கிறார்கள். அதற்காகச் சங்கீதம், நடனம், இசைக்கருவிகளை வாசிக்கும்திறன் போன்றவற்றைத் தமது பிள்ளைகள் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதில் அக்கறையுள்ள வர்களாகவும் இருக்கிறார்கள். எனது அவதானத்தில் கர்நாடக சங்கீதத்தைப் பொறுத்தவரையில் ஈழத்தமிழர்களின் இளந்தலைமுறையினரின் பங்களிப்புக் குறைவானதாகவே இருக்கிறது. ஆனால் இசைக்கருவிகள் வாசித்தல், நடனம், இசைநாடகம் போன்றவற்றில் அவர்கள் அதிக ஈடுபாடுகொண்டு கற்றுக்கொள்கிறார்கள்.

இதற்கு முக்கிய காரணம் உண்டு. இளந்தலைமுறையினர் ஆங்கிலத்தை அல்லது பிரெஞ்சு மொழியைத் தமது கற்கைமொழியாகத் கொள்வதால் தமது தாய்மொழியான தமிழைச் சரளமாகப் பேசமுடியாதவர்களாக இருக்கிறார்கள். இதன்காரணமாக இசையாசிரியர்கள் ஆங்கிலமொழி மூலமாகவே இவர்களுக்கு இசையைக் கற்பிக்கவேண்டிய

நிலையில் உள்ளனர். மாணவர்கள் தமது இசைக்குறிப்புகளை ஆங்கிலத்தில் எழுதிக்கொள்கிறார்கள். பாடற்பொருள், பாடல் உணர்த்தும் உணர்வுகள், பாவங்கள், தாளங்கள் இப்படியாக யாவற்றையுமே ஆங்கிலத்தில் விளங்கிக்கொள்கிறார்கள். வாய்ப்பாட்டு கற்பவர்களுக்கு தமிழ்மொழிப் பயன்பாடு அதிகம் தேவைப்படுவதால் இளைஞர்களில் அதிகமானோர் வாய்பாட்டு கற்பதைத் தவிர்த்து, இசைக்கருவிகளை வாசிக்கக் கற்றுக்கொள்வதிலும் நடனம் போன்றவற்றைக் கற்பதிலும் கூடுதலான அக்கறை காட்டுகிறார்கள்.

டொரன்ரோ பெரும்பாகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பரதநாட்டிய வகுப்புகள் நடைபெற்று வருகின்றன். பெருந்தொகையான நடனஆசிரியர்கள் முழுநேரத் தொழிலாக நடனவகுப்புகளை நடத்தி வருகிறார்கள். 2016ஆம் ஆண்டில் மட்டும் 100க்கும் மேற்பட்ட மாணவர்களின் நடன அரங்கேற்றங்கள் இடம்பெற்றதாக அறியமுடிந்தது. ஒப்பீட்டளவில் பெருந்தொகையானோர் நடன அரங்கேற்றத்தின் பின்னர் அதனைப் பல்கலைக்கழகக் கல்வியாக மேற்கொள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகம் வசதிசெய்துள்ளது. அத்துடன் அழகப்பா பல்கலைக்கழகமும் கனடாத் தமிழ்மாணவர் நுண்கலைகளில் பட்டங்கள் பெறுவதற்கு 'தமிழ்ப்பண்பாட்டு மேம்பாட்டு ஒன்றியம்-கனடா' என்ற அமைப்பினூடாக வசதி செய்துள்ளது. கனடா பரத நாட்டிய ஆசிரியர் சங்கம் ஆண்டு தோறும் மாணவருக்குத் தேர்வுகளைநடத்தி அவர்களை உற்சாகப்படுத்தும்வகையிற் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கிவருகிறது. 'தமிழ்ப்பண்பாட்டு ஒன்றியம்' என்ற அமைப்பு கனடாவில் உள்ள நுண்கலை ஆசிரியர்களை ஒன்றிணைத்து 2004ஆம் ஆண்டிலிருந்து 'டொரன்ரோவில் திருவையாறு' என்ற இசைநிகழ்வினை வருடாவருடம் நிகழ்த்திவருகிறது.



கனடாவில் தமிழர் பண்பாட்டைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் கலைவடிவங்களில் பரதக்கலைக்கு அடுத்த படியாக இசைக்கலை முதன்மை பெறுகிறது. தமிழிசை பயிலும் மாணவர்களுக்கு மொழிப்பயன்பாட்டுக் குறைபாடு இருப்பதை அவதானிக்க முடிந்தது. பல இளங்கலைஞர்கள் தாம் பாடும் தமிழ்ப் பாடல்களை ஆங்கிலமொழியில் எழுதிவைத்து மனனம் செய்கிறார்கள். கர்நாடக சங்கீதம்கற்று இசை அரங்கேற்றம் செய்தவர்களில் பெரும்பாலானோரது உச்சரிப்பு சரியாக அமைவதில்லை.. கனடாவைப் பொறுத்தவரை இசைகற்கும் மாணவர்களுக்குத் தமிழ்மொழிப் பயிற்சியும் இசைமீதான ஈடுபாடும் ஏற்படும்போதுதான் அவர்கள் சிறந்த கர்நாடக இசைக்கலைஞர்களாக வரமுடியும் என்ற கருத்தும் நிலவுகிறது.

அடுத்தநிலையில் இசைக்கருவிகள் பயில்வோர் கணிசமான தொகையினர் உள்ளனர். மிருதங்கம், வயலின், புல்லாங்குழல் வீணை முதலான இசைக்கருவிகளைக் கற்பதில் இளைஞர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்துசென்ற மிருதங்க வித்துவான்கள் பலர் மாணவர்களுக்கு மிருதங்கம் கற்பித்து வருகிறார்கள். கனடாவில் இதுவரை 75க்கும் மேற்பட்ட மாணவர்களை அரங்கேற்றம்செய்த பெருமை இந்த ஆசிரியர்களுக்கு உரியது.

கனடாவில் கலைமன்றங்கள், ஊர்ச்சங்கங்கள், பழையமாணவர் மன்றங்கள் என்பனவும் இலங்கையிற் கடமை யாற்றிய தொழில்சார் ஊழியர்மன்றங்கள், ஈழத்துச்சான்றோர் நினைவாக அமைக்கப்பட்டுள்ளன. கலைமன்றங்கள் மற்றும் சமயஅமைப்புகள் இசை நடனக் கல்லூரிகள் என 300க்கும் மேற்பட்ட மன்றங்கள் உள்ளன. இவை ஆண்டுதோறும் கலைவிழாக்களை நடத்திவருகின்றன. இந்த விழாக்கள் புலம்பெயர்ந்துவாழும் மக்களை ஒன்றிணைப்பதற்கும் தாயகப்பற்றை வளர்ப்பதற்கும் உதவுகின்றன. டொரன்ரோவில் மட்டும் கோடைகாலத்தில் நூற்றுக்கணக்கான கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுவதாக அறியமுடிகிறது.

# 21

## கனடாவில் புத்தூக்கம் பெறும் நாட்டார் கலைகள்

கனடாவில் எனக்குப் பெரும் ஆச்சரியத்தைத்தந்த விடயம் யாதெனில் எமது நாட்டில் உள்ள இசைத்துறைக் கல்லூரிகளிலோ நுண்கலை பயிற்றும் பல்கலைக் கழகங்களிலோ பயிற்றுவிக்கப் படாத பல இசைக்கருவிகளை வாசிக்கக் கற்றுக்கொடுக்கும் கல்லூ ரிகளும் தனியார் அமைப்புகளும் கனடாவில் இயங்கிவருவதுதான்.

ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பிய நாடுகள், இங்கிலாந்து அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது கனடாவில் நாட்டார் கலைகளைப் பேணிக்காப்பதில் அங்குள்ளோர் ஆர்வமுடன் செயற்படுவதை நான் அவதானித்தேன். நாட்டார் கலை களில் ஈடுபட்டுவரும் கலை ஞர்கள் பலரை நேரில் சந்தித்தும் அவர்களுடன் தொலைபேசியில் உரையாடியும் பல தகவல்களைப் பெற்றுக்கொண்டேன்.

“நாட்டார்கலைகள் வரிசையில் வடமோடி,தென்மோடிக் கூத்துக்கள் தெருக்கூத்து, சிந்துநடைக்கூத்து, கும்மி, கோலாட்டம், காவடி,

பொய்க்கால் குதிரையாட்டம், முதலான ஆடலும் பாடலும் இடம் பெறுகின்றன. இவற்றுடன் வில்லிசை, பறை, உடுக்கு, உறுமி மேளம், ஆர்மோனியம், சல்லாரி, டோலக், டோல்கி, சப்பட்டை, சங்கு முதலான பல இசைக்கருவிகளை வாசிக்கக் கூடிய இசைக்கலைஞர்கள் பலர் கனடாவில் இருக்கிறார்கள். இவர்கள் இந்நாட்டில் இடம்பெறும் கலை இலக்கிய விழாக்களிலே தனிநிகழ்ச்சிகளாகவும் பல்வேறு நிகழ்வுகளில் ஓர் அங்கமாகவும் நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றனர்" எனக் குறிப்பிட்டார் பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி அவர்கள்.

எமது நாட்டில் நுண்கலைகள் கற்பிக்கும் நிறுவனங்களாக விபுலானந்த அழகியல்கற்கை நிறுவனம், யாழ்ப்பாணம் இராமநாதன் அக்கடமி, கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை, கண்டி வெல்வூட் கல்லூரி, மட்டக்களப்பு கல்விக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்விக்கல்லூரி போன்றவை விளங்குகின்றன. இருந்தபோதிலும் இந்நிறுவனங்களில் நாட்டார்கலைகள் வரன்முறையாகக் கற்பிக்கப்படுவதில்லை. ஆனால் இக்கலை களைப் பயிற்றும் நிறுவனங்கள் பல கனடாவில் இயங்கி வருகின்றன என்பதுதான் ஆச்சரியம்!

இலங்கை மலைநாட்டில், நான்குதசாப்த காலத்துக்கு முன்னர் மேலே குறிப்பிட்ட நாட்டார்கலைகள் மிகவும் உன்னத நிலையில் பேணப்பட்டு வந்தன. ஆனால் அங்கும் இக்கலை களைப் பேணுவோர் படிப்படியாகக் குறைந்துவருகின்றனர். பறை, தப்பு போன்ற கருவிகள் கீழ்மட்ட சாதிப்பிரிவினருக்கு உரியவை என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் நிலவுவதும் இதற்குரிய காரணமாக இருக்கலாம்.

வல்வெட்டித்துறையிலிருந்து 1966இல் புலம்பெயர்ந்து கனடாசென்ற திரு. ஸ்ரீஸ்கந்தராசா என்பவர் உடுக்கு வாத்தியம் இசைப்பதில் வல்லவராகத் திகழ்கிறார். இவரே கனடாவின் புகழ்பெற்ற உடுக்கு வாத்தியக் கலைஞராவார். இவர் பலமேடைகளில் உடுக்கு, தாளம்,(சல்லாரி), சலங்கை,

கடம், கஞ்சிரா முதலிய இசைக்கருவிகளை வாசித்து வருகிறார். இவரைப் போன்றே அழகையா அண்ணாவியார், சிவஞானம் சிவசோதி, முருகதாஸ் முதலியோரும் உடுக்கு இசைக்கலைஞர்களாக முன்னணியில் திகழ்கின்றனர். அண்ணாவி அழகையா உறுமிமேளம், பறைமேளம் என்பவற்றை வாசிப்பதிலும் வல்லவராவார். கதி செல்வகுமார் என்பவர் உடுக்குப் பாடல், சிலம்பம், கரகம், முதலான கலைகளில் வல்லவராகத் திகழ்கிறார்.

இத்தகைய கலைகளை இளைஞர்களுக்குப் பயிற்றுவித்து அரங்கேற்றம் செய்விப்பதில் முன்னணியில் திகழ்பவர் திரு. சிவஞானம் சிவசோதி அவர்கள். இவர் 1991ஆம் ஆண்டிலிருந்து கடந்த 27 வருடங்களாக உடுக்கு, பறை, வில்லுப்பாட்டு, ஆர்மோனியம், ஆகிய இசைக் கருவிகளைப் பயிற்றுவித்து வருகிறார். இவர் கனடாவின் தலைநகரான ஒட்டாவாவிலும் நம்மவர்கள் அதிகமாக வாழும் டொறன்ரோவிலும் மேற்படி இசைவகுப்புகளை நடாத்திவருகிறார்.

டொரன்ரோ நகரில் 'ஆதி சிலம்பம்' என்ற சிலம்பாட்டம் பயில்விக்கும் கல்லூரி இயங்கிவருகிறது. பாரம்பரியக் கலைவடிவமான இக்கலை அழிந்துபோகாதவாறு பேணும் நோக்குடன் இக்கல்லூரியை திரு. பத்மகுமார் என்பவர் ஸ்தாபித்தார். இளையதலைமுறையினரான ஆண்களும் பெண்களும் பெருமளவில் இக்கல்லூரியில் பயின்று வருகின்றனர். இக்கலையானது வீரத்தைக் காட்டுவதோடு தற்காப்புக்கலையாகவும் கருதப்படுகிறது.

டொரன்ரோவில் 'பொய்க்கால்குதிரை ஆட்டம்' கலை நிகழ்ச்சிகளில் இடம்பெற்று வருகிறது. இந்த ஆட்டங்களை இங்குள்ள பரதநாட்டிய ஆசிரியர்கள் கற்பித்துவருகின்றனர்.

'அஃகேனம் கலைக்குழு' என்ற அமைப்பு 'பறை' இசை கற்பதற்கான ஓர் அமைப்பாகும். இது 2013இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பை தர்ஸினி வரப்பிரகாசம் என்பவர் ஸ்தாபித்து நடத்திவருகிறார். ஆர்வமுள்ள இளந்தலைமுறையினர் இவரிடம் 'பறையிசை நடனம்' பயின்றுவருகிறார்கள்.



சோக்கல்லோ சண்முகம் 2008இல் கனடாவுக்குப் புலம் பெயர்ந்தவர். இவர், 'கண்மணியாள் காதை', 'யேசு காவியம்' போன்ற பல வில்லிசைநிகழ்ச்சிகளை இலங்கையில் இருந்தகாலத்தில் நிகழ்த்தியவர். கனடா சென்றபின்னரும் அங்கு வில்லிசைநிகழ்ச்சிகளை நடாத்திவருகிறார். திரு. உமைநாதன் என்பவர் இலங்கையில் வில்லிசை நடத்திய அனுபவத்துடன் கனடாவுக்கு 1997இல் புலம்பெயர்ந்தவர். இவர், 'ஈழநயினை உமைமாறன் வில்லிசைக்குழு' என்ற பெயரில் இதுவரை 150க்கும் மேற்பட்ட வில்லிசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார். இவரே கனடாவில் அதிக வில்லிசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தியவராவார். பொ. அருந்தவநாதன் என்பவர் 'முத்தமிழ்க்கலைக்குழு' என்ற பெயரில் டொரன்ரோ நகரில் 25க்கும் மேற்பட்ட வில்லிசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். இவர்களைப்போன்று வேறும் பலரும் வில்லிசை நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றனர் என அறியமுடிந்தது.

கனடாவில் மொன்றியல் முருகன்கோயில், ஸ்காபரோ கனடா கந்தசாமிகோயில் போன்ற முருகன் கோயில்களில் சிறுவர் முதல் வயது வந்தோர்வரை தமது நேர்த்திக்கடன்களை

காவடி எடுத்து நிறைவேற்றுகின்றனர். பாற்காவடி, முட்காவடி, பறவைக்காவடி என மூன்று நிலைகளிலும் காவடி எடுப்பதாக அறியமுடிந்தது.

கனடாவில் இடம்பெறும் பரதநாட்டிய நிகழ்ச்சிகளில், பரதநாட்டிய ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு காவடி, கரகம், கும்மி, ஒயிலாட்டம், மயிலாட்டம், முதலிய கிராமிய நடனங்களையும் பழக்கி பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் இணைத்துப் புதுமை செய்துவருகின்றனர்.

நாட்டார் பாடல்களை கனடா கலை அரங்குகளில் அளிக்கை செய்து பார்ப்போரைப் பரவசமூட்டும் கலைஞர்களாக, தங்கா கோபாலசிங்கம், தங்கராசா இளையதம்பி, தர்ஸினி கலிங்கரெத்தினம், வ.திவ்வியராசன் முதலியோர் விளங்கு கின்றனர்.

கனடாவில் மேடைக்கூத்துக் கலைஞர்கள் பலர் சிறந்த முறையில் இயங்கி வருகின்றனர். அந்தவகையில் கனடாவில் முதன்முதலாக மேடைக்கூத்துக்களை மேடையேற்றியவர் என்ற பெருமை சவரிமுத்து மிக்கேல்தாஸ் அண்ணாவியார் அவர்களுக்கே உரியது. 1994ஆம் ஆண்டிலிருந்து இவரது மேடைக்கூத்துக்கள் மக்களைக் கவர்ந்துவருகின்றன. இவரைத்தவிர பத்துக்கும் மேற்பட்ட நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் கனடாவில் மேடைக்கூத்துக்களை நடத்தி வருவதாக அறியமுடிகிறது.

தெருக்கூத்தில் அமைந்த சில கூத்துக்களும் இடம்பெற்று வருவதாக அறியமுடிந்தது. ஒட்டாவா சிவஞானம் சிவசோதி, இரமணீகரன், பொ.அருந்தவநாதன் முதலியோர் இத்துறையில் பிரபல்யம் பெற்றவர்கள்.

# 22

## சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் சி.என்.கோபுரம்

கனடா டொரன்ரோ நகரில் நாம் பார்த்து அதிசயித்த உயர மான கட்டிடங்களில் ஒன்று சி.என். கோபுரம். இது உலகிலே மிகப் பெரியதும் உயரமானதுமான கோபுரம் என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதியப் பெற்றிருக்கிறது.

கட்டிட வடிவமைப்புக்கும் பொறி யியல் திறனுக்கும் பிரசித்திபெற்ற கட்டிடமாக இது திகழ்கிறது. 1995ஆம் ஆண்டில் அமெரிக்கக் கட்டிடப் பொறியியலாளர் சமூகம் இந்தக் கோபுரத்தை நவீன உலக அதிசயங்களில் ஒன்றென அறிவித் துள்ளார்கள். இதன் பெயரான 'சி.என்.டவர்' கனடிய நஷனல் டவர் (Canadian National Tower) என்பதன் சுருக்கமாகும்.

இந்தக் கோபுரத்தைப் பார்வை யிடுவதற்கு உலகம் முழுவதிலு மிருந்து சுமார் இரண்டு மில்லியன் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் வருகை புரிகின்றனர்.

இதனைப் பார்ப்பதற்கான நுழைவுச் சீட்டைப் பெறுவதற்கு நாம் நீண்ட 'கியூ'வரிசையில்



நிற்கவேண்டியிருந்தது. அரைமணி நேரத்தின் பின்னரே நுழைவுச்சீட்டைப் பெறமுடிந்தது.

நாங்கள் நுழைவாயிலை அடைந்தபோது ஒரு காட்சி எம்மை மெய்சிலிர்க்கவைத்தது. அங்குள்ள வரவேற்பு வாசகத்தில் 'நல்வரவு' என்று தமிழில் மின்எழுத்துக்களில்

எழுதப்பட்டிருந்தது. அந்த வாசகம் எம்மை வரவேற்பதற்காக எமக்காக எழுதப்பட்டதுபோன்ற உணர்வினை நாம் பெற்றோம்.

இந்தக் கோபுரத்தின் உயரம் 1815 அடி. கோபுரத்தின் உச்சியில் நின்று பார்த்தால் டொரன்ரோ நகரின் பெரும் பகுதியைப் பார்க்கலாம் என்று சொன்னார்கள்.

கோபுரத்தில் ஏறிச்செல்வதற்கு 1760 படிகள் இருக்கின்றன. அந்தப்படிகளில் சிலர் ஏறிச்செல்வதையும் பார்க்கமுடிந்தது. கோபுரத்தின் மேல்தளத்திற்குச் செல்வதற்கு ஆறு மின் தூக்கிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

நாங்கள் மின்தூக்கியில் ஏறியபோது அங்குள்ள பணியாளர் எல்லோரையும் வரவேற்று "உலகின் உயரமான இந்தக் கோபுரத்தைப் பார்க்க வருபவர்களுக்கு வாழ்த்துக்கள்" என வரவேற்றார்.

1968ஆம் ஆண்டில் டொரன்ரோ நகரைச் சுற்றியிருக்கும் உயர்ந்த கட்டிடங்களால் தொலைக்காட்சி மற்றும் வானொலி களின் ஒளி,ஒலி அலைகள் (சிக்னல்) தடைப்பட்டு மக்கள் பாவனைக்கு சிரமம் ஏற்பட்டதாம். இதற்குத் தீர்வாக, கனடிய தேசிய ரயில்வே நிறுவனம் டொரன்ரோ நகரில் பெரிய தொலைக்காட்சி வானொலி ஒலிபரப்புத் தளத்தை அமைக்கத் தீர்மானித்தபோதுதான் இப்படியொரு கோபுரத்தை அமைக்கவேண்டும் என்ற யோசனை தோன்றியதாம். அதைத் தொடர்ந்து 1972இல் அத்திட்டத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கத் தொடங்கினார்கள்.

இந்தக் கோபுரத்தை அமைப்பதற்கான அத்திபாரம் இடு வதற்கு 56000 தொன் அளவுள்ள மண் மற்றும் கற்பாறைகள் அகழ்ந்தெடுக்க வேண்டி இருந்ததெனவும் 36 தொன் இரும்புக் கம்பிகள் பயன்படுத்தப்பட்டன எனவும் அறியமுடிகிறது. இதன் கட்டுமாணப் பணிகளுக்கு 63 மில்லியன் டொலர் செலவிடப் பட்டதாம். இந்தச் செலவினத்தை 15 வருட காலப்பகுதியில் சேகரிக்கமுடிந்ததெனவும் அறியமுடிகிறது.

1976 ஜூன் 26ஆம் திகதி மக்கள் பயன்பாட்டிற்கு இக்கோபுரம் திறந்துவிடப்பட்டது. இக்கோபுரம் கட்டப்பட்ட

காலத்திலிருந்து இந்தக் கோபுரமே உலகின் மிக உயரமான கோபுரமாக 32 ஆண்டுகள்வரை திகழ்ந்தது. ஆனாலும் 2009இல் துபாயில் 'புரீஜ்கலி∴பா' கோபுரம் மற்றும் 'கன்டோன்' கோபுரங்கள் கட்டப்பட்டபின்னர் இக்கோபுரம் உலகின் உயரமான கோபுரங்களின் வரிசையில் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது. தற்போது பல்வேறு நாடுகளிலும் உயர்கோபுரங்கள் கட்டப்பட்டநிலையில் ஒன்பதாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்த உயர்ந்த கோபுரத்தை பூமி அதிர்ச்சி பாதிக்காமல் இருப்பதற்காக 8.5 'ரிக்டர்' அளவில் பூமி அதிர்ச்சியைத் தாங்கும் திறனை ஏற்படுத்தியுள்ளார்கள். இந்தக் கோபுரம் ஆண்டுக்கு சுமார் 30 தடவை இடியின் தாக்குதலுக்கு உள்ளாகின்றதாம். இதன் காரணமாக இந்தக் கோபுரத்தைப் பாதுகாக்க 42 இடிதாங்கிகளை அமைத்துள்ளார்கள்.

இந்தக் கோபுரத்தின் 1465 அடிவரை பார்வையாளர்கள் செல்வதற்கு அனுமதியுண்டு. அந்த இடத்தை 'ஸ்கைபாட்' என்று குறித்துள்ளார்கள். அதற்குமேலே உள்ள பகுதியில் தொலைக்காட்சி, வானொலி தொடர்பான ஒளி - ஒலி அலைகள் (சிக்னல்) தொடர்பு சாதனக்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன என அறியமுடிந்தது.

இந்தக் கோபுரத்தின் 1151ஆவது அடி உயரத்தில் ஒரு சுழலும் உணவு விடுதியுள்ளது. 1200 அடி உயரத்தில் உள்ள வெளிப் புறக் காட்சித்தளத்தின் அகலமான பகுதியில் கடைகள், உணவு விடுதிகள் இருக்கின்றன. சுற்றிவர அமைந்தள்ள கண்ணாடி ஜன்னல்வழியே டொரன்ரோ நகரில் அமைந்துள்ள உயர்ந்த கட்டிடங்கள், தெருக்கள் ஆகியவற்றைப் பார்க்கமுடிகிறது. அங்கு நான்குபுறமும் அமைந்திருந்த கண்ணாடி ஜன்னல்கள் ஊடாக சுற்றுலாப்பயணிகள் டொரன்ரோ நகரின் அழகை இரசித்த வண்ணம் இருந்தார்கள்.

இந்தக் கோபுரத்தில் நின்று கொண்டிருந்த வேளையில், அவுஸ்திரேலியாவின் சிட்னிநகரில் உள்ள உயரமான AMP Towerஇல் நின்று நாங்கள் சிட்னி நகரின் அழகுக் காட்சிகளைப்

பார்த்ததும், ஜேர்மனியில் உள்ள உயரமான ஒலிம்பிக் கோபுரத்தில் இருந்து ‘மூனிச்’ நகரின் அழகை இரசித்ததும், நவீன உலகின் பொறியியல் அற்புதங்களில் ஒன்றான பாரிஸ் நகரில் உள்ள ‘ஈ.:.பெல்’ கோபுரத்தின் உச்சியில் நின்று பாரிஸ் நகரின் அழகைப் பார்த்து இரசித்ததும் மாறி மாறி என் நினைவில் வந்தன.

சீ. என். கோபுரத்திலிருந்து பார்த்தால் நயகரா நீர்வீழ்ச்சியைப் பார்க்கலாம் என்றார்கள். ஆனாலும் அன்று பனிமூட்டமாக இருந்தமையால் நீர்வீழ்ச்சியை அங்கிருந்து எம்மால் பார்க்க முடியவில்லை.

ஓரிடத்தில் 256 சதுரஅடி கொண்ட கண்ணாடி நிலத்தளம் ஒன்றை அமைத்திருந்தார்கள். அந்தத் தளக் கண்ணாடியூடாக கோபுரத்தின் கீழ்ப்பகுதியைப் பார்க்க முடிந்தது. அங்கிருந்து பார்க்கும்போது 1000 அடிவரை அதளபாதாளமாகத் தெரிந்தது.

கிடையாக அமைந்திருந்த அந்தக் கண்ணாடியின் மேல் ஏறிநின்று பல வெளிநாட்டுச் சிறுவர்கள் குதித்து விளையாடிக்கொண்டிருந்தனர் பார்ப்பதற்குப் பயமாக இருந்தது. கண்ணாடி உடைந்துவிட்டால் 1000 அடி கீழே சென்றுதான் அந்தச் சிறுவர்களின் உடற் பாகங்களைப் பொறுக்கவேண்டியிருக்கும் என நினைத்தேன். அப்போது பக்கத்தில்நின்ற ஒரு சுற்றுலாப்பயணி “பயப்படத் தேவையில்லை. இந்தக் கண்ணாடி 14 நீர்யானைகளைத் தாங்கும் பலம் கொண்டது.” எனக் கூறினார். அதன்பின்னரே அந்தக் கண்ணாடியின்மேல் தயக்கத்துடன் ஏறிநின்று புகைப்படம் எடுத்துக்கொண்டோம்.

இந்தக் கோபுரத்தைப் பார்த்துவிட்டுக் கீழே இறங்குவதற்கு நாங்கள் மின்தூக்கியைப் பாவிக்காது படிக்கட்டுவழியாக இறங்கினோம்.

வெளியே வந்தபோது அங்கு சில குதிரை வண்டிகளையும் ‘ரிக்ஷோ’ வண்டிகளையும் காணமுடிந்தது. 25 டொலர் கொடுத்தால் குதிரைவண்டியில் ஏற்றி நகரின் சிலபகுதிகளைச் சுற்றிக்காட்டுவார்களாம். பல சுற்றுலாப் பயணிகள் அதில் ஏறிக்கொண்டார்கள்.

‘ரிக்ஷா’வில் எறிச் சுற்றிவர 35 டொலர் என்றார், அதனை இழுப்பவர் வெள்ளைக்காரர். இலங்கையில் இப்போது ரிக்ஷோவைக் காணமுடிவதில்லை. நான் ரிக்ஷோவை சிறுவயதில் யாழ். நகரில் பாத்திருக்கிறேன். அதன்பின்னர் 2004இல் இந்தியாவின் தலைநகரான டெல்கியில் பார்த்தேன். தற்போது கனடாவில் பார்க்கிறேன். மனிதனை மனிதன் ரிக்ஷோவில் ஏற்றி இழுப்பது மனதை உறுத்தும் செயலாக இருந்தபோதிலும், பல சுற்றுலாப்பயணிகள் அந்த ரிக்ஷோ பயணத்தை இரசிப்பதையும் அங்கு பார்க்கமுடிந்தது.

# 23

## ரொறன்ரோ நகரில் கண்கவர் காட்சிக் கூடங்கள்

ரொறன்ரோ நகரில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் உலகத்தரத்திலான பலவித காட்சிக்கூடங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று அங்குள்ள நீர்வாழ் உயிரினங்களின் காட்சிக் கூடமாகும். இந்தக் காட்சிக் கூடத்திற்கு 'கனடா ரிப்லேஸ் நீர்வாழ் உயரினக் காட்சிக்கூடம்' (Repley's Aquarium of Canada) எனப் பெயரிட்டுள்ளார்கள். இதுவே கனடாவில் உள்ள மிகப்பெரிய நீர்வாழ் உயிரினக் காட்சிக் கூடமாகும். இங்கு 5.7 மில்லியன் லீற்றர் கொள்வனவுகொண்ட நீர்ப்பரப்பில் 450 வகையான 20000 க்கும் மேற்பட்ட உயிரினங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

2013ஆம் ஆண்டில் பொது மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப் பட்ட இந்தக் காட்சிக்கூடத்தை அமைக்க 130 கனடியன் டொலர் செலவானதாம். இந்தக் காட்சிக் கூடத்தை வருடந்தோறும் இரண்டு மில்லியனுக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதாக அறியமுடிந்தது.

இந்தக் காட்சிக்கூடத்தில் நுழைந்தபோதே ஒரு வித்தியாசமான அனுபவத்தைப் பெறமுடிந்தது. நுழை வாயிலின் மேற்புறக் கூரையிலிருந்து, மண்ணின் மேற்பரப்பு பொருக்குடைந்து உதிர்வதைப்போன்ற ஒரு மாயத்தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அது நீர்வாழ் உயிரினங்களினது உலகின் சாளரம் போன்ற உணர்வை எமக்கு ஏற்படுத்துகின்றது.

இங்கு உலகெங்கிலுமுள்ள பலவகை 'ஜெல்லிபிஷ்' (Jelly Fish) மீன்கள், 65வயதான இராட்சத நண்டு, மற்றும் திமிங்கிலவகைகள் ஆகியவற்றைப் பார்வையிடமுடியும் என்ற ஒரு விளம்பரப் பலகையைக் காணமுடிந்தது.

அங்கு தண்ணீருக்கு அடியில் ஒரு குகைபோன்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தார்கள். ஏறத்தாழ நானூறு அடி நீளமான அந்தக் கண்ணாடிக் குகைக்குள் பார்வையாளர்கள் உள்ளே நடந்துசென்று நான்கு புறமும் நீந்தித் திரியும் நீர்வாழ் இனங்களைப் பார்வையிட முடியும். நமது தலைக்கு மேலாலும் பக்கவாட்டிலும் ஆயிரக்கணக்கான நீர்வாழ் உயிரினங்கள் அங்குமிங்கும் நீந்துவதைப் பார்ப்பது ஒரு புதுவகை அனுபவம். அங்கு பயங்கரமான நீர்வாழ் மிருகங்கள், திமிங்கிலங்கள் நமது தலைக்கு மேலாகவும் பக்கவாட்டிலும் உலாவிச்செல்வதைப் பார்க்கமுடியும். சிறிதும் பெரிதுமான பலவகை வண்ணவண்ண மீன்களை அங்கு பார்த்தபோது எமக்கு வியப்பும் ஆச்சரியமும் எற்பட்டன. அங்கு சிறியவர்கள் முதல் பெரியவர்கள்வரை சகல வயதினரும் மெய்மறந்து அக்காட்சிகளைப் பார்ப்பதையும் அவதானிக்கமுடிந்தது.

அங்குள்ள சில நீர்த்தொட்டிகளில், பார்வையாளர் தமது கைகளை உள்ளேவைத்து அங்குள்ள ஜந்துக் களுடன் உறவாடுவதற்கு அங்குள்ள உதவியாளர்கள் அனுமதிக்கிறார்கள். அந்த ஜந்துக்கள் ஆபத்தானவையல்ல எனவும் அறியமுடிந்தது. மீன்கள், நண்டுகள் மற்றும் பெயர்தெரியாத உயிரினங்கள் வந்து நமது கைகளை உரசிச் செல்கின்றன. சில எமது விரல் நுனிகளை நன்னிப்



பார்க்கின்றன. அங்கு குதிரைலாட வடிவிலான நண்டுகள் சில ஊர்ந்து செல்வதையும் பார்க்கமுடிந்தது. அந்த நண்டுகளின் முதுகுப்புற ஓடு தடவுவதற்கு கரடுமுரடாக இருந்தது.

இன்னுமொரு புறத்தில் சிறு கண்ணாடிக்குகைபோன்ற அமைப்பினூடாக தவழ்ந்து உள்நுழைந்து மறுபுறத்தில் வெளிவர வசதியிருக்கிறது. அங்கு ஏராளமான பலவகை நிறங்களில் அமைந்த ஊசி அளவினதான மீன்களையும் பெரியமீன்களையும் காணமுடிந்தது.


வேறொரு பகுதியில் 'ஜெல்லிபிஷ்' நடனம் நடப்பதாகக் கூறினார்கள். அங்குள்ள கண்ணாடித் தொட்டிகளில் பலவகை நிறங்களில் உள்ள மீன்கள் மின்னொளியில் துள்ளிக்குதித்துக் கொண்டிருந்தன. நாங்கள் அந்த நீர்வாழ் உயிரினக் கூடத்தைச் சுற்றிப்பார்க்க மூன்று மணிநேரம் பிடித்தது.

அதன்பின்னர் ரொறன்ரோ மாநகரசபை மண்டபத்தைச் சென்று பார்த்தோம். 'ரொறன்ரோ சிற்றி ஹோல்' (Torento City Hall) என்றழைக்கப்படும் இம்மண்டபம் அதன் கட்டிட வடிவமைப்புக்குப் பெயர்பெற்றது. கனடாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இடமாகவும் இது திகழ்கிறது. இந்த மண்டபத்தைத் தூர இருந்து பார்க்கும்போதே அதன் பிரமாண்டமும் அழகும் ஆச்சரியப்பட வைக்கின்றன.

இரண்டு கோபுர அமைப்பிலான உயர்மாடிக் கட்டி டங்கள் ஒன்றையொன்று பார்த்தவண்ணம் அருகருகாக அமைந்திருந்தன. இவற்றின் சிறப்பு யாதெனில் இக்கட்டிடங்கள் இரண்டும் உள்வளைவான குறுக்குவெட்டுத் தோற்றத்துடன் வெவ்வேறு உயரங்கள் கொண்டு அமைந்திருந்ததுதான்.

கிழக்குப் புறத்தில் அமைந்த 27 மாடிகளைக்கொண்ட கட்டிடம் 326 அடி உயரத்தைக் கொண்டது. மேற்குப் புறத்தில் அமைந்த கட்டிடம் 20 மாடிகளுடன் 260அடி உயரத்தைக் கொண்டிருந்தது. இந்த இரண்டு கோபுர அமைப்பிலான கட்டிடங்களின் இடைநடுவில் தட்டுவடிவில் அமைந்த (Saucer-like council chamber) மாநகரசபை பிரதிநிதிகள் கூடும் மண்டபம் அமைந்துள்ளது. இந்தப் புதியகட்டிடம் 1965ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த இந்த மாநகரசபைக் கட்டிடப் பகுதிகள் நான்கு பிரிவுகளைக்கொண்டு அமைந் துள்ளன. எதிரும்புதிருமாக அமைந்த இரண்டு மாடிக் கட்டிடங்கள், ஒரு மாநகரசபை பிரதிநிதிகள் மண்டபம், நகரப் பாவனைக்கான சதுக்கம், பொதுமக்கள் பாவனைக்கான நிலப்பகுதி என்பனவே அவையாகும்.



இந்தப் புதிய மாநகரசபை மண்டபம் அமைப்பதற்கு முன்னர் 1899ஆம் ஆண்டுமுதல் பழைய மாநகரசபைக் கட்டிடம் 'சைனா ரவுண்' என்னும் பகுதியில் அமைந்திருந்ததாம். பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப புதிய நகரமண்டபம் ஒன்றை அமைக்கவேண்டும் என்ற எண்ணம் 1943ஆண்டில் ஏற்பட்டதாம். அந்த எண்ணத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஒரு மக்கள் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது.

அவர்கள் புதிய நகரமண்டபத்தை நவீன கட்டிடத் தொழில் நுட்பத்துடன் அமைப்பதற்குத் தீர்மானித்து கட்டிட வடிவமைப்புத் தொடர்பான ஒரு வரைபடப் போட்டியொன்றை நடத்தினார்கள். இந்தப் போட்டியில் 42 நாடுகளிலிருந்து 500க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டார்களாம். பின்லாந்தைச் சேர்ந்த 'வில்ஜோ ரீவெல்' (Viljo Revell) என்பவரது வரைபடம் தெரிவுசெய்யப்பட்டு, அதற்கமையவே தற்போதைய மாநகரசபைக் கட்டிடம் அமைக்கப்பட்டது. இந்த வரைபடப் போட்டியில் வெற்றிபெற்றவரே இக்கட்டிட வேலையை மேற்பார்வை செய்பவராகவும் அமர்த்தப்பட்டார். அவருக்குப் பரிசுப்பணமாக 25000 கனடிய டொலரும் மேற்பார்வை செய்வதற்கு ஒரு மில்லியன் டொலரும் சம்பளமாக வழங்கப்பட்டதாம். மேற்குறிப்பிட்ட தகவல்கள் இக்கட்டிடத்தின் பிரமாண்டத்தையும் நவீன முறையில் அமைந்த கட்டிடக்கலை நுட்பத்தையும் அழகையும் அறிந்துகொள்ளப் போதுமானவை.

கட்டிடத்தின் முன்னால் உள்ள நிலப்பகுதி பொதுமக்கள் பாவனைக்கென விடப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் பெரியதொரு நீர்த்தடாகம் அமைந்துள்ளது. தடாகத்தின் மேல் சிமெந்தினால் கட்டப்பட்ட வளைவுகள் அமைந்துள்ளன. இந்த நீர்த்தடாகத்தின் நடுவில் சீறி அடிக்கும நீர்த்தாரைகள் அமைந்துள்ளன. இவற்றைவிட அங்கு பலதரப்பட்ட கனடா தொடர்பான ஞாபகச்சின்னங்களையும், அழகான சிற்ப வேலைப்பாடுகளையும் காணமுடிந்தது.

# 24

## கனடாவில் உயர்ந்த தரத்தில் திகழும் புலம்பெயர் இலக்கிய முயற்சிகள்

மொழி ஒரு இனத்தின் அடையாளம். மொழியைப் பேணாத இனம் கால ஓட்டத்தில் தனது அடையாளத்தை இழந்துவிடும். நமது நாட்டில் இடம்பெற்ற போர்காரணமாக ஈழத் தமிழர்கள் இன்று பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். அவர்கள் தாம் சென்றடைந்த நாடுகளில் தமது இன அடையாளங்களைப் பேணுவதற்காக பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவற்றுள் தலையாயது அவர்களால் படைக்கப் படும் இலக்கியங்களாகும்.

சிறுகதை, கட்டுரை, நாவல், சிறுவர் இலக்கியம், பத்திஎழுத்து எனப் பல்வேறு வடிவங்களில் இலக்கியப் படைப்புகளை அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள். கனடாவில் புலம் பெயர் எழுத்தாளர்களாகப் பெருந்தொகையானோர் உள்ளனர். இவர்கள்பற்றிய பட்டியலைத் தருவது இங்கு சாத்தியமற்றது.

நான் கனடாவில் இருந்த காலகட்டத்தில் அங்குள்ள எழுத்தாளர்களின் செயற்பாடுகள் பற்றி அறிந்துகொண்டவற்றை இங்கு பதிவுசெய்கிறேன்.

கவிஞர் கந்தவனம் மூத்த கவிஞர்களில் ஒருவர். இவரே கனடா தேசியகீதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலுமாக பல கவிதைத் தொகுதிகள் உட்பட ஐம்பதுக்கும்மேற்பட்ட பல்துறை நூல்களை வெளியிட்டவர்.

கவிஞர் சேரன், ஈழத்துக் கவிதைமுதல்வர்களில் ஒருவரான மஹாகவின் புதல்வன். சர்வதேசரீதியில் நன்கு அறியப்பட்ட கவிஞர்களில் ஒருவர். வின்சர் பல்கலைக் கழகத்தில் இணைப் பேராசிரியர். பத்துக்கும் மேற்பட்ட கவிதை நூல்களை வெளியிட்டவர். பேராசிரியர் செல்வா கனகநாயகத்தினால் இவரது நாற்பது தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவருடைய கவிதைகள் ஜேர்மன், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தீவகம் வே. இராஜலிங்கம், அனலை ஆறு இராஜேந்திரம், செழியன், திருமாவளவன், சக்கரவர்த்தி, இரா.சம்பந்தன், இராஜமீரா, இராசையா, சபா.அருள்சுப்பிரமணியம், மா.சித்தி விநாயகம், வீணைமைந்தன் ஆகியோரும் கவிஞர்கள்



வரிசையில் பிரபல்யம் பெற்றவர்கள். மாவிலி மைந்தன், ஞானகணேசன், அகணிசுரேஸ், களிவிமலநாதன், இராஜமீரா, இராசையா, பவானி தர்மகுலசிங்கம், கார்த்திகேசு காந்தரூபன், ஸ்ரீபஞ்சநாதன், ஆகியோரும் கவிதைகள் எழுதி வருகின்றனர்.

சிறுகதை எழுத்தாளர்களில் உலகப்புகழ்பெற்ற எழுத்தா ளராக அ.முத்துலிங்கம் விளங்குகிறார். உலகம் முழுவதி லுமுள்ள அதிக எண்ணிக்கையான வாசகர்களால் விரும்பி வாசிக்கப்படுபவர் இவர். சிறுகதை, நாவல், பத்தி எழுத்து, விமர்சனம், நேர்காணல், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், புத்தக மதிப்புரைகள், நாடக-சினிமா விமர்சனங்கள் எனப் பல்துறை சார்ந்து அதிகமாக எழுதுபவர். இவர்காட்டும் உலகம் தமிழ் இலக்கியத்திற்குப் புதியது. வித்தியாசமான நிலவமைப்புடைய நாடுகளில் தான்பெற்ற அனுபவங்களை வெவ்வேறுபட்ட இனத்தவர்களின் வாழ்க்கைமுறைகளை அவர்களின் பண்பாட்டை தமது கதைகளில் கொண்டுவருகிறார்.

க.நவம், பல நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் சிறந்த நாடக நடிகரும் நாடகாசிரியரும் சிறந்த பேச்சாளரும் ஆவார். 'நான்காவது பரிமாணம்' என்ற சிறுசஞ்சிகையை சிலகாலம் நடத்தியவர்.



‘அகில்’ என்ற புனைபெயர் கொண்ட அகிலேஸ்வரன் இளந்தலைமுறை எழுத்தாளர்களில் முக்கியமானவர். ‘திசைமாறிய தென்றல்’ என்ற நாவல் மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர். சிறுகதை, நாவல், குறுநாவல், கட்டுரை, என இலக்கியப்பரப்பில் தனது கவனத்தைச் செலுத்திவருபவர். ‘கூடுகள் சிதைந்தபோது’ என்ற இவரது சிறுகதைத்தொகுதி தமிழக அரசின் அயலகப் படைப்பிலக்கியத்திற்கான விருதைப்பெற்றது.

குரு அரவிந்தன் நாவல், சிறுகதை, சிறுவர் இலக்கியம், திரைப்படத்துறை எனப் பல்வேறு தளங்களில் இயங்கிவருபவர். மூன்று சிறுகதைத்தொகுதிகளை வெளியிட்டுள்ளார். உதயன் பத்திரிகை நடத்திய சிறுகதைப்போட்டியில் தங்கப்பதக்கம் உட்படப் பல பரிசில்களைப் பெற்றவர்.

வ.ந.கிரிதரன் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், கட்டுரைகள், எனப் பல்துறைகளில் இயங்கிவருபவர். ‘பதிவுகள்’ என்ற இணையத்தளத்தை நடத்திவருபவர்.

தேவகாந்தன் ஈழப்பிரச்சினையை மையமாகக்கொண்ட ‘ கனவுச் சிறை’ என்ற நாவலை எழுதியுள்ளார். இந்நாவல் ஐந்து பாகங்களைக்கொண்ட நீண்ட நாவலாகும். இவர் மகாபாரதக்கதையை மறுவாசிப்பு முறையில் ‘கதாகாலம்’ என்ற நாவலாக எழுதியுள்ளார். ‘லங்காபுரம்’ என்ற தலைப்பில் இராமாயணக் கதையை மறுவாசிப்பாக எழுதியுள்ளார்.

இவர்களைவிட பொன். குலேந்திரன், குமார்மூர்த்தி, இணுவில் ஆர். எம்.கிருபாகரன், மெலிஞ்சிமுத்தன், த.அகிலன், குரும்பசிட்டி ஐயாத்துரை, ரவீந்திரன், சுமதிரூபன், ஸ்ரீரஞ்சனி, லீலா சிவானந்தன், சிவவதனி பிரபாகரன், சிவநயனி முகுந்தன் இராகவி, வல்வை கமலா பெரியதம்பி, ஆகியோரும் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள்.

கனாடாவில் பல எழுத்தாளர்கள் பல்வேறு ஊடகங்களில் கட்டுரைகள், பத்திஎழுத்துக்கள் எழுதிவருகின்றனர். பலர் தனிநூல்களாகவும் வெளியிட்டுவருகின்றனர். பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்






தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர். இவர், பழந்தமிழ் இலக்கியம், நவீனஇலக்கியம் இலக்கிய வரலாறு, திறனாய்வு, போன்ற துறைகளில் இயங்கிவருபவர். சிறந்த சொற்பொழிவாளர். கலாநிதி கௌசல்யா சுப்பிரமணிய ஐயர் இசைத்துறை சார்ந்து கட்டுரைகளையும் நூல்களையும் எழுதிவருகிறார் .

பேராசியர் இ.பாலசுந்தரம் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும்

பணியாற்றியவர். கல்வி, உளவியல் தொடர்பான நூல்கள் பலவற்றை எழுதியவர்.

பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் சிறுகதை, நாவல், கட்டுரைகள் எழுதுபவர். சிறந்த மேடைப்பேச்சாளர். நாற்பதுக்கும் மேற்பட்ட ஈழத்துக் கோயில்கள்மீது பிரபந்தங்கள் பாடியுள்ளார்.

புலவர் ஈழத்துச்சிவானந்தன், பொ.கனகசபாபதி, பொன்.குலேந்திரன், சின்னையாசிவனேசன் கே.எஸ். பாலச்சந்திரன், 'சிந்தனைப்பூக்கள்' எஸ். பத்மநாதன், சாமி அப்பாத்தரை, லலிதா புரூடி போன்றோரும் பயன்மிக்க பல கட்டுரைகளை எழுதுவதோடு, நூல்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

மொழிபெயர்ப்பு முயற்சிகளில் ஈடுபாடுகாட்டி வருபவர் களில் மணிவேலுப்பிள்ளை, பேராசிரியர் செல்வா கனக நாயகம், பொன். குலேந்திரன், கவிஞர் சேரன் முதலியோர் முக்கியமானவர்கள்.

கனடாவில் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. ' செந்தாமரை' தாயகம், கனடா உதயன், ஈழநாடு, தாய்வீடு, விளம்பரம், சுதந்திரன், உலகத்தமிழர், சிறகு, உறவு, தமிழர்தகவல், நெற்றிக்கண், தங்கதீபம், புலத்தில், ஈகுருவி என்பவை அவற்றுள் சிலவாகும். கனடாவில நீண்டகாலமாக 'காலம்' என்ற சிற்றிதழ் சிறந்ததரத்தில் வெளிவருகிறது இதன்ஆசிரியர் திரு.செல்வம் ஆவார்

கனடாவில் நிறுவன ரீதியாக கலை இலக்கியச் சேவை செய்யும் ஸ்தாபனங்களும் சிறப்பாக இயங்குவதை அவதானிக்க முடிந்தது. 'தமிழ் எழுத்தாளர் இணையம்' ஓர் எழுத்தாளர் அமைப்பு. கடந்த 25 வருடகாலமாக கலை இலக்கியப்பணிகளில் சிறப்பாக இயங்கி வருகிறது. ' டொறன்ரோ தமிழ்ச்சங்கம்' மிகச்சிறந்த முறையில் இயங்கி வருகிறது. இதன் நிறுவுனர் டாக்டர் லம்போதரன் அதன் தலைவராக இயங்கி வருகிறார்.

உதயன் பத்திரிகை நிறுவனரீதியாக கலைஇலக்கியச் செயற்பாடுகளில் சிறப்பாக இயங்கிவருகிறது. இதன் தலைவராக திரு. லோகேந்திரலிங்கம் இயங்கி வருகிறார்.

ஈழத்தமிழர் புலம்பெயர்ந்துவாழும் ஐரோப்பிய நாடுகள், மற்றும் இங்கிலாந்து, அவுஸ்திரெலியா போன்ற நாடுகளுக்கு நான் சென்றிருக்கிறேன். அந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் கனடாவில் தமிழ்மொழியும் தமிழர் பண்பாடும் நீண்டகாலம் நிலைத்திருக்கும் என்பதை என்னால் கணிப்பிடமுடிகிறது. அங்கு இடம்பெற்றுவரும் கலை இலக்கியச் செயற்பாடுகள் அதனை உறுதிசெய்வதாய் அமைந்துள்ளன.

முற்றும்



'ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர்கள் என்ற முறையில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் அழைப்பின்பேரில் நாங்கள் இருவரும் கனடா வந்திருக்கிறோம்' என்று தொடங்கும் இப்பயணநூல் ஒரு நாவலைப் போலவே வாசகனையும் கைபிடித்து அழைத்துச் செல்கிறது.

ஈழத்தமிழர்கள் அதிக அளவில் புலம்பெயர்வதற்கு கனடா நாட்டைத் தெரிவு செய்தது ஏன்?

கனடாவின் அற்புதமாகத் திகழும் நயகரா நீர்வீழ்ச்சி, நயகரா தாவரப்பூங்கா, வண்ணத்துப் பூச்சிகளின் வளர்ப்பகம், இலங்கைத் தமிழர்களின் கேந்திர இடமாகத் திகழும் ரொறன்ரோ, ரொறன்ரோவில் இருந்து 5 மணிநேர பஸ் ஓட்டத்தின்பின்வரும் கனடாவின் நான்காவது பெரியநகரம் ஒட்டாவா, கனடாவின் பாராளுமன்றம் ஒட்டாவாவில் இருக்கிறது, இலங்கையில் பிறந்து கனடா பாராளுமன்ற உறுப்பினரான முதல் தமிழ்ப்பெண்மணி, அவர் தனது கன்னிப் பாராளுமன்ற உரையைத் தமிழில் ஆற்றியது, கனடாவின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்திருக்கும் ஈழத்துக் கவிஞர் என்று அடுக்கடுக்கான தகவல்களை அள்ளிக் குவித்திருக்கும் பொக்கிஷப் பெட்டகமாய்த் திகழும் நூல் இது. வானளாவுகின்ற கட்டிடங்கள், கண்ணையும் மனதையும் கவ்வியிருக்கும் கலைக்கூடங்கள், தமிழ்மக்களின் கடவுள் வழிபாட்டுத் தலங்கள், கனடிய அரசு வழங்கியுள்ள வழிபாட்டுச் சுதந்திரம் போன்ற அகப்புறக்காட்சி விபரிப்புகள் ஏராளம். அவரைக் கவர்ந்த முக்கிய இடங்கள், அந்த இடங்களைவிட இடங்களின் மனித முகங்கள், முகங்களை விட அவர்தம் மனங்கள் என அவர்கண்ட அத்தனையத்தனை காட்சிகளைக்கொண்ட அனுபங்களையும் மனம்விட்டுச் சொல்லவும் நம்முடன் பகிர்ந்துகொள்ளவும் மேற்கொண்டிருக்கும் முயல்வே இந்தநூல்.

புதிய அனுபவங்களையும் புதிய உணர்வுகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகப் படைக்கப்படுவதே பயண இலக்கியம். அதற்கென பிரத்தியேகமான திறமைகள் வேண்டப்படுகின்றன என்றாலும், ஏற்கனவே நான்கு பிரயாண நூல்களை ஈழத்து இலக்கிய உலகிற்கு கொடையாக்கியிருக்கும் ஞானசேகரனுக்கு அந்தத் திறமைகள் நிறையவே உண்டு என்பதை இந்த ஐந்தாவது பயண இலக்கியநூலும் நிரூபிக்கிறது.

**சாகித்திய ரத்தினா தெளிவத்தை ஜோசப்**

ஞானம்
பதிப்பகம்